
# தைத் திங்கள்



பேராசிரியர். சுந்தரசண்முகனார்

# தைத் திங்கள்

பேராசிரியர்

**சுந்தர சண்முகனார்**

புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்
8, 2-வது தெரு, வேங்கட நகர், புதுவை-605 011
பேசி: (0413) 2213110

## நூல் பற்றிய விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **தைத் திங்கள்** |
| நூலின் தன்மை | : | உரைநடை – வானியல் ஆய்வு, |
| மொழி | : | தமிழ் |
| ஆசிரியர் | : | **பேராசிரியர் சுந்தர சண்முகனார்** |
| வெளியீடு | : | **புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**<br>8, 2–வது தெரு, வேங்கட நகர்,<br>புதுவை-605 011<br>பேசி: (0413) 2213110 |
| நூற்பதிப்பு | : | முதற்பதிப்பு 1972 பிப்ரவரி<br>இரண்டாம் பதிப்பு 30.10.2002 |
| தாள் | : | 11.6 பல்லாப்பூர் |
| அச்சு | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 16+136=152 |
| **விலை** | : | **ரூபாய் 40-00** |
| அச்சிட்டோர் | : | சுபம் பிரிண்டர்ஸ்,<br>சுப்பிரமணியம் தெரு,<br>சிதம்பரம்–608 001 போன்: 232544 |

# பதிப்புரை

பேராசிரியர் சுந்தர சண்முகனாரின் 'உலகு உய்ய' என்ற நூலின் ஆய்வு 27—6—1999 அன்று புதுச்சேரியில் நடைபெற்றது. நூலாய்வு நிகழ்ச்சிக்கு வந்திருந்த முனைவர் இரா. திரு முருகன் அவர்கள் பேராசிரியர் சுந்தர சண்முகனார் பல துறைகளில் நூல் எழுதியவர் என்பதைப் பற்றிக் குறிப்பிட்டு, ஒரு சமயம், 'தமிழாசிரியர்களுக்குத் தமிழ் தவிர வேறு என்ன தெரியும்? என்று யாரோ குறை கூறிய போது பேராசிரியர் சுந்தர சண்முகனாரின் தைத் திங்கள் நூலினைப் படித்துப் பாருங்கள்; தமிழாசிரியர்களுக்குத் தமிழைத் தவிர பிற துறைகளிலும் புலமை உண்டு என்று புரியும்' என்று பதிலளித்ததாகக் கூறினார்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த, பேராசிரியரின் ஐம்பத்து மூன்றாவது வெளியீடாக 1972–ஆம் ஆண்டு வெளியான தைத் திங்கள் நூலின் இரண்டாம் பதிப்பு தற்போது தங்கள் திருக்கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. முப்பது ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு இந்நூலைத் தம் பொருட் செலவில் வெளிக்கொணர்ந்தவர் பேராசிரியருடன் ஏறத்தாழ 60 ஆண்டுகள் நெருங்கிப் பழகிய "பிரஞ்சு தமிழ் ஆய்வு மாமணி", "சிறுவர் மனச்செம்மல்" பேராசிரியர் க. சச்சிதானந்தம் அவர்கள் ஆவர். இறந்த ஒரு நூலாசிரியரின் நூலை மறு வெளியீடு செய்வது என்பது இறந்தவரை மீண்டும் உயிர்ப்பிப்பது போலாகும். இந்நூலை வெளியிடுவதன் மூலம் பேராசிரியர் க. சச்சிதானந்தம் அவர்கள் நூலாசிரியரான பேராசிரியர் சுந்தர சண்முகனாரை மீண்டும் உயிர்ப்பித்துள்ளார்கள்.

பேராசிரியர் அவர்கட்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி உரித்தாகுக.

தைத் திங்கள் முதல் நாளே தமிழாண்டுத் தொடக்கம் என்ற கருத்து இப்போது பரவலாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. மலேசியாவில் 6—1—2001 அன்று அந்நாட்டின் மூன்று தேசிய அமைப்புகள் ஒன்றிணைந்து "தைத்திங்கள் முதல் நாளே தமிழாண்டுத் தொடக்கம்" என்று பறை சாற்ற உலகப் பரந்துரை மாநாடு நடத்தினர். ஆனால் 1972–ஆம் ஆண்டே "தைத்திங்கள்" நூலில் பேராசிரியர் சுந்தர சண்முகனார் தைத்திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டாகக் கொள்வதுதான் பொருத்தம் என்று ஆய்வு செய்து கூறியுள்ளார்கள். இது இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

இந்நூலை மறுபதிப்பு செய்யப் பெரிதும் உறுதுணையாக நின்ற "இலக்கியச் செம்மல்" புலவர் வ. ஞானப்பிரகாசம் அவர்கட்கு எங்களின் நனி நன்றி. பேராசிரியர் சுந்தர சண்முகனார் அறக் கட்டளை உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியை உரித்தாக்குகிறோம். நூலினை அழகுற அச்சிட்டுத் தந்த சிதம்பரம் சுபம் அச்சகத்தாருக்கும் எங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேராசிரியர் சுந்தர சண்முகனாரின் நூல்களுக்கு எப்போதும் தமிழ் நெஞ்சங்களின் பேராதரவு இருக்கும் என்ற ஆழமான நம்பிக்கை எங்கட்கு எப்போதுமுண்டு.

**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**



# பேரா. சுந்தர சண்முகனார் - ஒரு குறிப்பேடு

| | | |
|---|---|---|
| சூட்டிய பெயர் | : | சண்முகம் |
| சூட்டிக்கொண்ட பெயர் | : | **சுந்தர சண்முகனார்** |
| பெற்றோர் | : | சுந்தரம் – அன்னபூரணி |
| பிறந்த நாள் | : | 13 – 07 –1922 |
| பிறந்த ஊர் | : | புது வண்டிப்பாளையம், கடலூர். |
| மறைந்த நாள் | : | 30—10—1997 |

**பயின்ற நிறுவனங்கள்:**

1. சிவத்திரு ஞானியார் மடாலயம், திருப்பாதிரிப்புலியூர். ஐந்தாம் பட்டத்து ஞானியார் அடிகளின் மாணாக்கர்.
2. தூய வளனார் மேல்நிலைப் பள்ளி, திருப்பாதிரிப்புலியூர்.
3. அரசர் கல்லூரி, திருவையாறு (வித்துவான்)
4. ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை.

தற்படிப்பு: இண்டர்மீடியட், இளங்கலை.

**மேலும் சில கல்விச் சான்றிதழ்கள்:**

1. சென்னை – முதியோர் இலக்கியப் பண்ணைப் பயிற்சிச் சான்றிதழ். (அரசு)
2. சென்னை – சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சைவ சித்தாந்தச் சான்றிதழ்.
3. தருமபுர ஆதீனம் – சமயக் கல்விப் பயிற்சிச் சான்றிதழ்
4. பிரஞ்சு இன்ஸ்டிடியூட், புதுச்சேரி – பிரஞ்சு பட்டயம்

பணியாற்றிய பதவிகளும் — நிறுவனங்களும்

1. 1940 – 46 விரிவுரையாளர். துணை முதல்வர், சிவஞான பாலய அடிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம்.

2. 1949 – 58 தமிழ்த்துறைத் தலைவர், பெத்தி செமினேர் மெட்ரிக்குலேசன் ஆங்கிலப் பிரஞ்சுக் கல்விக்கூடம், புதுச்சேரி.
3. 1958 – 80 தமிழ்த்துறைத் தலைவர். அரசினர் ஆசிரியர் பயிற்சி மையம், புதுச்சேரி.
4 1982 – 83 பேராசிரியர், தொகுப்பியல் துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
5. வாழ்நாள் உறுப்பினர், கல்விக்குழு, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

**பெற்ற சிறப்புப் பெயர்கள்:**

1. இயற்கவி – "செந்தமிழ் ஆற்றுப்படை" நூலுக்காக நாவலர் சோமசுந்தர பாரதியார் வழங்கியது.
2. செந்தமிழ்ச் செம்மல் – புதுவைத் தமிழ்ச் சங்கம்.
3. புதுப்படைப்புக் கலைஞர் – தொகுப்புக்கலை நூல் பாராட்டு விழாவில் புதுவை ஆளுநரால் அளிக்கப் பெற்றது.
4. செந்தமிழ்க் கொண்டல் – புதுவை சுப்பிரதீபக் கவிராயர் மன்றம்.
5. ஆராய்ச்சி அறிஞர் – சிவத்திரு ஞானியார் மடாலயம், திருப்பாதிரிப்புலியூர்.
6. தமிழ்ச் சான்றோர் – சேலம் தமிழ்ச் சங்கம், தமிழகப் புலவர் குழுவின் வெள்ளி விழாவில் வழங்கியது.
7. திருக்குறள் நெறித்தோன்றல் – தமிழக அரசு வழங்கியது.
8. குறளாயச் செல்வர் – ஈரோடு குறளாய இயக்கத்தின் புதுவைக்கிளை வழங்கியது.
9. தமிழ் ஆய்வுக் கடல் – தமிழகச் செங்குந்தர் பெரு மன்றம் அளித்தது.
10. முனைவர் – உலகப் பல்கலைக் கழகம். அமெரிக்கா.
11. தமிழ்ப் பேரவைச் செம்மல், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

**பரிசுகள்:**

1. "பணக்காரர் ஆகும் வழி" நூலுக்கு மத்திய அரசின் பரிசு. (1965)
2. "தமிழ் அகராதிக் கலை" நூலுக்குத் தமிழக அரசின் பரிசு. (1969)
3. "History of Tamil Lexicography" நூலுக்குத் தமிழக அரசின் பரிசு. (1973)
4. "கவுதம புத்தர் காப்பியம்" நூலுக்குப் புதுவை அரசு பரிசு (1987)
5. "திருவள்ளுவர் விருது" 15.01.1991 இல் தமிழக அரசு வழங்கியது.
6. தமிழ்நூல் தொகுப்புக் கலைக்களஞ்சியம்" நூலுக்கு மூன்று பரிசுகள்:

   அ) தமிழக அரசின் பரிசு (1992)

   ஆ) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பரிசு (1992)

   சென்னை M.A.C. அறக்கட்டளைப் பரிசு (1994)

## படைப்புகள்

**சிறுகதை:**

1. ஆத்திசூடி அமிழ்தம் (1948, 50)

**கவிதை நூல்கள்;**

2. தமிழ் அம்மானை தனித்தமிழ்க் கிளர்ச்சி (1948, 1998)
3. குழந்தைப் பாட்டு (1948, 1951)
4. பொங்கல் வாழ்த்துக் கீர்த்தனைகள் (1948)
5. சிறுவர் செய்யுட் சோலை (1949, 1950)
6. செந்தமிழ் ஆற்றுப்படை (1951)
7. அண்ணா நாற்பது (1969)
8. அம்பிகாபதி காதல் காப்பியம் (1982)

   (அகவல் யாப்பில் 30 காதைகளாக அமைந்தது)

9. கவுதம புத்தர் காப்பியம் 1986)
(பல்வேறு யாப்பில் 30 காதைகளாக அமைந்தது)
10. புத்தர் பொன்மொழி நூறு (1986, 1987)
(101 அறுசீர் ஆசிரிய விருத்தங்களால் அமைந்தது)
11. பல்வேறு தனிப் பாடல்கள்.

**உரைநடை நூல்கள்:**

12. வீடும் விளக்கும் (குடும்ப நூல்) (1947, 1958, 2000, 2002)
13. வாழ்க்கை ஓவியம் (வாழ்வியல்) (1950)
14. வாழும் வழி (கட்டுரைத் தொகுப்பு) (1962)
15. தமிழர் கண்ட கல்வி (கல்வி இயல்) (1964)
16. பணக்காரர் ஆகும் வழி (பொருளியல் 1964)
17. இன்ப வாழ்வு (பாலியல்) (1965)
18. தமிழ் அகராதிக் கலை (ஆய்வு - அகராதியியல் (1965, 2002)
19. போர் முயற்சியில் நமது பங்கு (இந்திய பாகிஸ்தான் போரின்போது எழுதியது.) (1965)
20. தைத்திங்கள் (ஆய்வு) (வானியல்) (1972, 2002)
21. கெடிலக் கரை நாகரிகம் (பண்பாட்டு இயல்) (1975, 2002)
22. கெடில வளம் (பண்பாட்டு இயல்) (1984)
23. உலகு உய்ய (உலக ஒருமைப்பாடு) (1987)
24. தமிழ்க் காவிரி (அரசியல், தரைநூல்) (1988)
25. கருத்துக் கண்காட்சி (ஆய்வுக் கட்டுரைகள்) 1988)
26. இலக்கியத்தில் வேங்கடவேலவன் (திருப்பதி கோயில் பற்றிய ஆய்வு) (1988)
27. மக்கள் குழு ஒப்பந்தம் (ஆய்வுக் கட்டுரைகள்) (1989)
28. இயல்தமிழ் இன்பம் (ஆய்வுக் கட்டுரைகள்) (1992)
29. மனத்தின் தோற்றம் (ஆய்வுக் கட்டுரைகள்) (1992)
30. தமிழ் அங்காடி (ஆய்வுக் கட்டுரைகள்) (1993)

31. பல்வேறு மலர்கள் மற்றும் இதழ்களில் பல ஆய்வுக் கட்டுரைகள்.

**திருக்குறள் ஆய்வுகள்:**

32. தெவிட்டாத திருக்குறள் (ஆய்வு) 1948 - 1958)
33. திருக்குறள் தெளிவு (ஆய்வு) (1948-1958) ''திருக் குறள் தெளிவு'' -என்னும் திங்கள் இருமுறை இதழ் நடத்தியுள்ளார்.
34. வள்ளுவர் கண்ட மனையறம் (ஆய்வு) (1957)
35. வள்ளுவர் இல்லம் (இல்லற இயல் விளக்க நூல்) (1963)
36. ஆழ்கடலில் சில ஆணிமுத்துக்கள் (ஆய்வு நூல்) (1991)

**கம்பராமாயணத் திறனாய்வுகள்:**

37. சுந்தர காண்டச் சுரங்கம் (1989)
38. அயோத்தியா காண்ட ஆழ்கடல் (1990)
39. சுந்தர காண்டச் சூறாவளி (மதிப்புரைக்குப் பதில்) (1990)
40. பாலகாண்டப் பைம்பொழில் (1991)
41. கிட்கிந்தா காண்டத் திறனாய்வு (1992)
42. ஆரணிய காண்ட ஆய்வு (1993)

**அறிவியல் ஆய்வுகள்:**

43. உலகமும் உயிர்களும் உண்டான வரலாறு (1988)
44. கடவுள் வழிபாட்டு வரலாறு (1988)
45. மருந்தாகித் தப்பா மரஇனப் பெயர்கள் (1989)
46. மர இனப் பெயர் வைப்புக் கலை (1990)
47. மாதவம் புரிவாள் (1991)
48. விளையும் பயிர் முளையிலே தெரியும் (1993)

**இலக்கணம்**

49. எழுத்தாளர் துணைவன் (1954)
50. தொண்ணூறும் தொள்ளாயிரமும் (1971)

**மொழியியல்:**

51. History of Tamil Lexicography (1967)
52. தமிழ் இலத்தீன் பாலம் (1970)
53. தொல் திராவிட மொழி கண்டுபிடிப்பு (1988)

**தொகுப்பியல்:**

54. தமிழ்நூல் தொகுப்புக் கலை (1972)
55. தமிழ்நூல் தொகுப்புக் கலைக் களஞ்சியம் (1990)

**முழு உரை நூல்கள்:**

56. திருக்குறள் தெளிவுரை (1966,2000)
57. நாலடியார் நயவுரை (1970)
58. திருமுருகாற்றுப் படை தெளிவுரை (1973)
59. இனியவை நாற்பது இனியவுரை (1987)
60. நன்னெறி நயவுரை (1989)
61. முதுமொழிக் காஞ்சி உரை (1991)
62. நல்வழி உரை (1993)

**சிலப்பதிகாரத் திறனாய்வு:**

63. சிலம்போ சிலம்பு (1992)

**வரலாறு:**

64. காந்தியின் நாகரிகம் (1948)
65. புலிசை ஞானியார் அடிகளார் (1973)
66. பாரதிதாசரொடு பல ஆண்டுகள் (1987)
67. ஞானியார் அடிகளார் (1993)

**புதினம்:**

68. மலர் மணம் (1961)
69. தெய்வீகத் திருமணம் (1990)

**பாடமாக அமைக்கப் பெற்ற நூல்கள்:**

1. "அகராதிக் கலை"-சென்னை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகங்கள், வித்துவான், முதுகலை வகுப்பு களுக்கும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் புலவர் வகுப்புக்கும் பாடமாக அமைத்தது.

2. History of Tamil Lexicography சென்னைப் பல்கலைக்கழகம் முதுகலை வகுப்புக்குப் பாடம்.

3. "வாழும் வழி" – அண்ணாமலைப் பல்கலைக் கழகம், புகுமுக வகுப்புக்குப் பாடம்.

4. "தமிழர் கண்ட கல்வி" – மதுரைப் பல்கலைக் கழகம், புகுமுக வகுப்புக்குப் பாடம், பெங்களூர் பல்கலைக் கழகம், இளங்கலை வணிகவியலுக்குள் பாடம்.

5. "திருமுருகாற்றுப்படை தெளிவுரை" – மதுரைப் பல்கலைக்கழகம், முதுகலைக்குப் பாடம்.

தொகுப்பு:

புலவர் வ. **ஞானப்பிரகாசம்**, பி.லிட்., பி.எட்.

43, சிங்காரவேல் நகர், கடலூர்-607 004 (04142 – 223214)

# அறிஞர்கள் பார்வையில் ஆசிரியர்

சுந்தர சண்முகனார் ஒரு குட்டி மாநிலமாகிய புதுச்சேரியில் இருந்து கொண்டு ஒரு பல்கலைக்கழகம் செய்ய வேண்டிய தமிழ்ப் பணிகளைச் செய்து கொண்டுள்ளார்.

பேராசிரியர், முனைவர் திரு. **ந. சஞ்சீவி,**

எனது முப்பதாண்டு தமிழ்த்துறை வாழ்க்கையில் சுந்தர சண்முகனாரின் தமிழ் அகராதிக் கலை, போன்ற தமிழ்மொழி பற்றிய சிறந்த ஆராய்ச்சி நூலை நான் படித்ததில்லை.

நெல்லைப் பேராசிரியர் திரு. **அருணாசலக் கவுண்டர்**

சுந்தர சண்முகனாரின் தமிழ் அகராதிக் கலை போன்ற தமிழ்மொழி பற்றிய அரிய ஆராய்ச்சி நூலை இனி எழுத முடியாது.

பேராசிரியை திருமதி. **கனகசுந்தரம்**
இராணிமேரிக் கல்லூரி, சென்னை.

பேராசிரியரின் திருவள்ளுவர் ஆய்வு நூல்கள், மிக நுண்மையான அதுவரை திறனாய்வாளர் எவரும் கண்டறியாத ஆழ்பொருள் பொதிந்தவை. அவரை பழைய குறள் உரையாசிரியர்கள் பதின்மரையும் மிஞ்சியவர் என்று கூறின் அது மிகையாகாது.

பேராசிரியர் முனைவர் **தி. முத்துகண்ணப்பன்,**

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விளங்கிய இணையற்ற தமிழறிஞர்களில் முதலில் வைத்து மதிக்கத் தக்கவர் அமரர் சுந்தர சண்முகனார் ஆவார்....

சான்றாண்மையும் புலமைப் பெருமிதமும் இனமானமும் மிக்க இப்பெரியார் நினைவாகப் புதுவை அரசு அறக் கொடை நிறுவி ஆய்விருக்கை அமைத்துத் தக்க வகையில் சிறப்புச் செய்திட வேண்டுகிறேன்.

— முனைவர் **சோ. ந. கந்தசாமி,**

அறிவுத் திறனும் சிந்தனைத் திறனும் எழுத்துத் திறனும் வாய்ந்த இவர் நூல்கள் தமிழுக்கு அணிகலன்கள் அல்ல, படைக்கலன்கள்; ஆராய்ச்சியாளர்க்கு அமைய வேண்டிய அனைத்துப் பண்புகளும் அமையப்பெற்ற திரு. சுந்தரசண்முகனார் நம் காலத்தில் வாழ்வது நமக்குப் பெருமை. அறிவுநலம் சான்ற பெரு நூல்களைப் படைப்பது இவருக்குக் கைவந்த கலை.

பதிப்புச்செம்மல், பேராசிரியர்,
முனைவர். **ச. மெய்யப்பன்.**

ஐம்பது ஆண்டுகளாகப் பாவேந்தர் பாரதிதாசன் பாடியது போல அன்னைத் தமிழ் மொழிக்குத் துறை தொறும் துறைதொறும் துடித்தெழுந்து அருந் தொண்டாற்றிய பேராசிரியர் சுந்தரசண்முகனார் அவர் களுக்குத் தமிழ்ப் பேரவைச் செம்மல் என்ற பட்டத்தினை வழங்கி **மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்** பெருமை கொள்கிறது. நாள்: 17. 10. 1991

எளிமையான வாழ்வு, உடை, இரக்க உணர்வு, பேச்சில், மூச்சில், எழுத்தில் தமிழ் பற்றிய சிந்தனை, பணத்திற்கும் பதவிக்கும் விலைபோகாமல் இருத்தல், உன்னதமான படைப்பாற்றல், கடைசிவரை சலியாத உழைப்பு இவையெல்லாம் புரட்சியாளர் பேராசிரியர் சுந்தர சண்முகனாரிடம் நாம் கற்றுத் தெளிய வேண்டிய பாடங்கள்.

பேராசிரியர் **துரை. சம்பந்தனார்.**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பொங்கல் விழா | — | 1 |
| 2. | விழா நடைமுறைகள் | — | 13 |
| 3. | போகி விழா | — | 26 |
| 4. | பெரும் பொங்கல் | — | 35 |
| 5. | மாட்டுப் பொங்கல் | — | 41 |
| 6. | காணும் பொங்கல் | — | 51 |
| 7. | தொடர் விழாக்கள் | — | 56 |
| 8. | தைச் சிறப்பு விழாக்கள் | — | 64 |
| 9. | தைந் நீராடல் | — | 77 |
| 10. | உலக அரங்கில் தைத் திங்கள் | — | 106 |
| | மேற்கோள் நூல்கள் | — | 136 |

# தைத் திங்கள்

## பொங்கல் விழா

### எப்போது வரும்?

பொங்கல் எப்பொழுது வரும்-பொங்கல் எப்பொழுது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் சிறுவர் சிறுமியர் மட்டுமல்லர்; பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெரியவர்களும் அவ்வாறே பொங்கலை எதிர்பார்ப்பது மரபு. சிற்றுண்டி நிலையத்திற்குச் சென்று 'ஒரு பொங்கல் கொண்டுவா' என்று கேட்டுவிட்டு, 'பொங்கல் எப்பொழுது வரும்-பொங்கல் எப்பொழுது வரும்' என்று நெடுநேரம் எதிர்பார்த்துத் துடித்துக் கொண்டிருப்பவரைப் பற்றி இங்கே சொல்லவில்லை; தைப் பொங்கலை எதிர்பார்ப்பவர்களைப் பற்றியே இங்கே பேசப்படுகிறது.

பொங்கல் விழா வரின் விடுமுறை கிடைக்கும்-விளையாடலாம் என்று எதிர்பார்க்கும் இளஞ்சிறார் ஒருபுறம்; பொங்கல் வரின் பொங்கல் உணவு உண்டு புத்தாடை உடுத்து மகிழலாம் என்று எதிர்பார்க்கும் இளையோர் ஒருபுறம்; பொங்கல் வரின் வெவ்வேறு வகையான விழாக்கள் வரும்-அவ்விழாக்களில் கலந்து

கொண்டு இன்புறலாம் என விரும்பி எதிர்பார்க்கும் இளைஞர் குழாம் ஒரு புறம். இவர்கள் மட்டுமா?

பொங்கல் வரின் புது நெல் வீடுவந்து சேரும் எனப் பூரிக்கும் உழவர்கள் ஒரு சாரார். பொங்கல் வரின் புத்தாடையும் பல்வேறு பொங்கல் பரிசுகளும் கிடைக்கும் என எண்ணி எதிர்பார்க்கும் தொழிலாளர் ஒரு சாரார். பொங்கல் வரின் கடைகளில் நிரம்ப வாணிகம் நடைபெறும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வணிகர்கள் ஒரு சாரார். பொங்கல் வரின் கலைகள் சிறக்கும் என எதிர் பார்க்கும் கலைஞர்கள் ஒரு சாரார். இவர்கள் மட்டுமா?

பொங்கல் வரின் தந்தையார் வந்து அழைத்துச் செல்வார்-தாய் வீடு சென்று வரலாம் என எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் புதுமணப் பெண்கள் ஒரு சாரார். பொங்கல் வரின் அத்தான் வந்து அழைத்துச் செல்வார் எனத் தாய் வீட்டில் இருந்தபடி அத்தானை எண்ணி ஏங்கி எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் புதுமணப் பெண்கள் ஒரு சாரார், பொங்கல் வந்துவிடின், கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய காதலரை நமக்கு மணம் பேசி முடித்துவைப்பர் எனக் கனவு கண்டு கொண்டிருக்கும் கன்னிப் பெண்கள் ஒரு சாரார். இவர்கள் மட்டுமா?

பொங்கல் வரின், தாய் வீட்டிற்குச் சென்றிருக்கும் தன் ஆருயிரை அழைத்து வரலாம் என்று ஏங்கி எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் புது மாப்பிள்ளைமார் ஒரு புறம். பொங்கல் வரின், மாமனார் வீட்டிற்குச்

சென்று வைரக் கணையாழியும் கைக்கடிகாரத்திருக் தங்கச் சங்கிலியும் பெற்று வரலாம் எனப் பேராவல் கொண்டிருக்கும் புது மாப்பிள்ளைமார் மற்றொரு புறம் பொங்கல் வந்துவிடின், அமிழ்தினும் இனிய காதலியை நம் பெற்றோர் மணம் பேசி முடித்துவைப்பர் என எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் இளங் காளையர் ஒரு புறம். இவர்கள் மட்டுமா?

பொங்கல் வரின், மருமகளுக்குக் கப்பல் கப்பலாகப் பொங்கல் வரிசை வரும் என வாய் பிளந்து காத்துக் கொண்டிருக்கும் மாமியார்கள் ஒரு சாரார். பொங்கல் வந்து விடின், நம் மகனுக்கு ஒரு குறுநில மன்னனின் மகள் கிடைப்பாள்; பெண் வீட்டார் ஒரு தீவையே எழுதி வைத்து விடுவார்கள்; மகனுக்குத் திருமணமும் செய்து வைத்து விடுவார்கள் என்று எதிர்பார்த் திருக்கும் மாப்பிள்ளை வீட்டார் ஒரு சாரார். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்களே-இந்தப் பொங்கல் வந்தாலாவது நம் மகள் கழுத்தில் தாலி ஏறாதா? - நல்ல மாப்பிள்ளை கிடைக்க மாட்டானா- என்று ஏங்கிக் கொண்டிருக்கும் பெண் வீட்டார் ஒரு சாரார்.

இவ்வாறாகப் பல்வேறு தரப்பினரும் பொங்கல் எப்போது வரும் என்று எதிர்பார்த்துக் கொண் டிருப்பது இயற்கை. மற்ற விழாக்கள் போல் இல்லாமல், பொங்கல் விழா ஆண்டுதோறும் இயற்கை யாகத் தையில் முதல் நாளே வந்துவிடுவது, எதிர் பார்த்துக் கொண்டிருப்பவர்கட்கு ஓர் ஆறுதலாகும். நல்ல தைப் பொங்கல்! வாழ்க!

**நாட்டு விழா:**

ஒவ்வொரு நாட்டுக்கும் நாட்டு விழா (தேசீய விழா) என ஏதாவது ஒன்று இருக்கும். அது, சமயச் சார்பாக இருக்கலாம்; சமூகச் சார்பாக இருக்கலாம்; அரசியல் சார்பாக இருக்கலாம். இன்னும் எவ்வெச் சார்புடையதாகவோ இருக்கலாம். இந்தியப் பெரு நாட்டின் ஓர் உறுப்பாக உள்ள தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும், நாட்டு விழா-தேசீய விழா எனப்படுவது தைப் பொங்கல் விழாவாகும். நாட்டு விழா எனப்படுவது அரை நாளில் அல்லது ஒரு நாளில் முடிந்துவிடக் கூடியதன்று. குறைந்தது ஒரு கிழமை (வாரம்) அளவாயினும் நடைபெறுவதே நாட்டு விழாவாகும். இந்தக் காலத்தில் எடுத்ததற் கெல்லாம் ஒரு வாரம் விழா நடத்துகிறார்களே! அம்மையொழிப்பு வாரம், போலீசு ஒத்துழைப்பு வாரம், குடும்பக் கட்டுப்பாட்டு வாரம் என்றெல்லாம் எத்தனையோ வார விழாக்கள் நடைபெறுவதைக் காண்கிறோம். இவற்றிற்கே ஒரு கிழமைக் காலம் விழாக்கள் நடைபெறுகின்றனவெனில், நம் நாட்டில் அரை நாள்-ஒரு நாள் நடைபெறுகின்ற வேறு விழாக்களை நாட்டு விழாவாக எங்ஙனம் கொள்ள முடியும்?

நம் நாட்டிலே, பொங்கல் விழா அல்லாத வேறு சில விழாக்கள் ஒரு கிழமைக் காலத்திற்கு மேலுங்கூட நடைபெறலாம். ஆனால் அவை, குறிப்பிட்ட சில ஊராராலேயோ, ஒரு வட்டத்தாராலேயோ, ஒரு

சாதியாராலேயோ, ஒரு சமயத்தாராலேயோ நடத்தப் படுவனவாம். நாடு முழுவதிலும் உள்ள பெரும்பாலான மக்களால் பலநாள் தொடர்ந்து நடத்தப்பெறும் விழா பொங்கல் விழா ஒன்றேயாகும். எனவேதான் இது, தமிழகத்தின் 'நாட்டு விழா' என நவிலப்படுகிறது. இஃதல்லாத விழாக்களுள் சில சில்லறை விழாக் களாகும்; வேறு சில இறக்குமதிச் சரக்குகளாகும். உள் நாட்டுப் பெருவிழா பொங்கல் விழா ஒன்றே—ஒன்றே!

**வீட்டு விழா:**

பொங்கல் விழாவை நாட்டு விழா என்றோம். அது மட்டுமன்று: இது வீட்டு விழாவுமாகும். சில விழாக்கள் கோயில்களிலே மட்டும் நடைபெறும்: சில விழாக்கள் பொது மன்றங்களிலே மட்டும் நடை பெறும்; சில விழாக்கள் தெருக்களிலே மட்டும் நடை பெறும்; அவை வீட்டிலே நடைபெறுவதில்லை. வீட்டிலே நடைபெறுமாயினும், அரை நாள் - ஒரு நாளோடு சரி. பொங்கல் விழாவோ, நாட்டிலே நடப்பதன்றி வீட்டிலும் நடைபெறும். வீடுகள் பல சேர்ந்ததே நாடு அல்லவா? வீட்டிலே மகிழ்ச்சி நிகழ்ச்சியின்றி நாட்டிலே மட்டும் வெளிச்சம் போடுவது விழாவாகுமா? நாட்டிலும் வீட்டிலும் ஒரு சேர நடைபெறுவதே நாட்டு விழாவாகும். ஒரு வீட்டினர் தம்மோடு அமைந்து விடாமல், நாட்டினரோடும் கலந்து உறவாடுவதே நாட்டு விழாவாகும். இவ் வகையில், பொங்கல் விழா, நாட்டு விழாவின் ஓர் உறுப்பாகிய வீட்டு விழாவாகவும் திகழ்கிறது.

**வீடும் வெளியும்:**

வீட்டிற்கு வெளியே சென்றிருப்பவர்கள்-வெளியூருக்குச் சென்றிருப்பவர்கள் - வெளிநாட்டுக்குச் சென்றிருப்பவர்கள் பொங்கல் மாதம் எனப்படும் தைத் திங்களில் விரைந்தோடி வந்து வீடு சேர்வது, பண்டைய தமிழ்நாட்டு மரபு. இதிலிருந்து, பண்டைத் தமிழர்கள் பொங்கல் நாளை மிகவும் இன்றியமையாததாகக் கொண்டாடினர் என்பது புலப்படும்.

ஒரு குடும்பத் தலைவன் வீட்டில் இல்லை-வேற்று நாட்டில் இருக்கிறான், அவன் ஒரு படை மறவன், வேற்று நாட்டின்மேல் படையெடுத்துச் சென்றுள்ள தன் மன்னனது பாசறையிலே உருவிய வாளுடன் உறக்கம் இன்றிக காவல் காத்து நிற்கிறான். அப்போது அவனுக்குத் தன் நாட்டின்மேல்-தன் ஊரின்மேல்-தன் வீட்டின்மேல் படிப்படியாக நினைவு படர்கிறது. தன் இல்லக் கிழத்தியை எண்ணிப் பார்க்கிறான். அறுபதாம் திருமணம் ஆனவர்களே பிரிவின்போது மனைவியை நினைத்துக்கொண்டிருக்கையில், அண்மையில் திருமணமான அந்தக் கடமை வீரன் மனைவியை நினைக்காமல் இருக்க மரக் கட்டையா என்ன! களத்திலே நின்று கொண்டிருக்கும் கடமை வீரன் ஏன் இப்பொது மனைவியை நினைக்க வேண்டும்? அவன் நினைக்கும் காலமோ தைத் திங்கள்-தைப் பொங்கல் நாள்; எனவே அவன் நினைக்க மாட்டானா என்ன! அவன் தனக்குத் தானே பேசிக்கொள்கிறான்:

"இந்தத் தைத்திங்கள் நாளிலே நம் மனைவி இரவு என்னும் மாபெருங் கடலைத் தனியாக நீந்தி ஊரிலே இருக்கிறாள், நாமோ, உருவிய வாளை உறையில் போடாது இரவு முழுதும் தூக்கம் இன்றிக் காத்து நிற்கின்ற படையுடன் நம் மன்னனின் பாசறையில் இருக்கிறோம்."

-என்று அவன் ஏங்குகிறான். இதனை அகநானூற்றில் உள்ள,

**"......தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்**
**வயங்குகதிர் கரந்த வாடை வைகறை......**
**பனியிருங் கங்குலும் தமியள் நீந்தித்**
**தம்மூ ரோளே நன்னுதல் யாமே......**
**கழித்துறை செறியா வாளுடை எறுழ்த்தோள்**
**இரவுத்துயில் மடிந்த தானை**
**உரவுச்சின வேந்தன் பாசறை யேமே"**

என்னும் (24-ஆம்) பாடல பகுதியால் அறியலாம். தைத் திங்களில்-பொங்கல் விழாவில் மனைவியுடன் ஊரில் இருப்பதற்கில்லையே! தைப் பொங்கலுக்கு வந்து விடுவதாகச் சொல்லிப் புறப்பட்டோமே! முடியவில்லையே!என ஏங்குகிறான். தைத் திங்களின் இன்றியமையாமையை இந்த அகப்பாடல் அறிவிக்கின்றது.

இன்னொரு குடும்பத்தில் - தைத் திங்களில் வந்து விடுவதாகத் தலைவிக்கு உறுதி கூறித் தலைவன் வெளிநாடு போந்தான். தைத் திங்கள் நெருங்கி விட்டது; ஆனால் தலைவன் வரவில்லை. தலைவி தோழியிடம் முறையிட்டுத் துடிக்கிறாள். தலைவன்

வரமாட்டான் என்று ஐயுறுகிறாள், பொங்கல் விழாவின்போது வந்தால், தொழிலாளர்கட்கும் கலைஞர்கட்கும் பொங்கல் பரிசு தரவேண்டியிருக்கும் என்று அஞ்சித் தலைவன் வரமாட்டான் என்று ஐயுறுகிறாளோ என்னவோ! ஆனால் தோழி சோர் வடையவில்லை; தலைவன் வந்துவிடுவான் என்று நம்புகிறாள்; தலைவிக்கு எப்படியாவது ஆறுதல் உண்டாக்க வேண்டும் என முயல்கிறாள்; தலைவி யிடம் சொல்கிறாள்: ''என் அருமைத் தலைவியே! இந்தத் தைத் திங்கள் நாளில் இன்னும் அவர் வர வில்லையே என்று செங்கழுநீர் மலர் போன்ற கண்களிலிருந்து நீ துளிக்கும் நீரைத் துடைப்பதற்காக இதோ அவர் விரைந்து வந்துவிட்டார்'' - இது தோழி கூறிய ஆறுதல் மொழி. இதனை,

> ''... தைஇ நின்ற தண்பெயல் கடைநாள்......
> ஒண்செங் கழுநீர் அன்னநின்
> கண்பனி துடைமார் வந்தனர் விரைந்தே.''

என்னும் (269-ஆம்) அகநானூற்றுப் பாடல் பகுதி அறிவிக்கிறது. இன்னும் தலைவன் வரவில்லை யாயினும், 'வந்தனர் விரைந்தே' என வந்து விட்ட தாகக் கடந்த காலத்தில் கூறியுள்ளாள் தோழி. உறுதி பற்றி இவ்வாறு கூறலாம் என விதி உள்ளது. இன்னும் உண்ண அமராத ஒருவன், வெளியே அழைத்துச் செல்ல வந்த நண்பனிடம், 'இதோ சாப்பிட்டு விட்டேன்' என்று கூறும் வழக்காறு போன்றது இது. தைத் திங்களில் தலைவனது

வருகை இன்றியமையாதது என்பதனை இந்தப் பாடலும் உணர்த்துகிறது.

மற்றொரு குடும்பத்தில், தைத் திங்கள் எதிரேயிருக்கத் தலைவன் வேற்று நாட்டிற்குச் செல்லத் திட்டமிட்டான். இந்த நாளில் அவன் செல்வதைத் தலைவி விரும்பவில்லை. அதனால் தோழி அவனிடம் கூறுகிறாள்:- "இந்தத் தைத் திங்கள் நாளிலே வீட்டை விட்டு நீங்காதே ஐயா! உனக்குப் பொங்கல் வாழ்த்து உரித்தாகுக."- இது தோழியின் வேண்டுகோள். இதனை,

> **"நீங்கல் வாழியர் ஐய......**
> **தைஇ நின்ற பொழுதே"**

என்னும் (124-ஆம்) நற்றிணைப் பாடல் பகுதி நயம்பட நவில்கிறது. தைத் திங்களில் பிரிந்திருக்கும் தலைவன் எதிர்பார்க்கப்படுவதையும், வீட்டில் இருக்கும் தலைவன் பிரியாதபடி நிறுத்தப்படுவதையும் மேலே கண்டோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தில் இருந்த பழக்க வழக்கங்களை நமக்குத் திரைப்படம் பிடித்துக் காட்டுபவர் யாவர்? இந்த அரும்பணியை நம் பழம்பெருந் தமிழிலக்கியங்களே ஆற்றுகின்றனவன்றோ?

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்' என்றபடி, இந்த இலக்கியச் செல்வங்களை அடிப்படையாகக் கொண்டு, தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர் இது சார்பான கருத்தை மிகவும் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். அரசாங்க வேலையாக வேற்று நாடு

சென்றவர் எப்பொழுது வீட்டினின்றும் புறப்பட்டிருப் பினும் சரியே-தைத்திங்களில் வீடு வந்து சேர்ந்துவிட வேண்டும், என்பதாக அவர் எழுதியுள்ளார். ''வேந்துறு தொழிலே யாண்டினது அகமே'' என்னும் தொல் காப்பிய (கற்பியல்-48) நூற்பாவின் கீழ் நச்சினார்க் கினியர் வரைந்துள்ள.

''...அது 'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு' என்பதனால் பிரிவிற்கு ஓதிய இருவகைக் காலத்துள்ளும் முதற்கண் நின்ற சித்திரை தொடங்கித் தையீறாக் கிடந்த பத்துத் திங்களுமாம். இனிப் பத்தென்னாது யாண்டென்றதனால், 'பின் பனி தானும்' என்பதனாற் கொண்ட சிறப்பில்லாத பின்பனிக்கு உரிய மாசி தொடங்கித் தை யீறாக யாண்டு முழுவதூஉங் கொள்ளக் கிடந்ததேனும் அதுவும் பன்னிரு திங்களும் கழிந்த தன்மையின் யாண்டின தகம் ஆமாறுணர்க,.. 'தைஇ நின்ற தண் பெயற் கடைநாள்... பனியிருங் கங்குல்' (அகநானூறு-24) என்றலின் யாண்டென்பதூஉம், அது கழிந்த தன்மையின் அஃது அகமெனவும் பட்ட தென்பதூஉம் தலைவன் வருதும் என்று காலம் குறித்ததற்கு ஒத்த வழக்கென்று உணர்க. காவல் பிரிவும் வேந்துறு தொழிலெனவே அடங்கிற்று. தான் கொண்ட நாட்டிற்குப் பின்னும் பகை உளதாங்கொல் என்று உட்கொண்டு காத்தலின்.''—

அரசுத்துறை வேலையாக வெளிநாடு செல் பவர்கள் ஓராண்டு காலத்தில் திரும்பிவிடுவர் எனத்

தொல்காப்பியர் கூறியுள்ளார். 'வேந்துறு தொழிலே யாண்டினது அகமே' என்பது தொல்காப்பிய நூற்பா. மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தொல்காப்பியர் எவ்வளவு நுணுக்கமான செய்தியைச் சொல்லியிருக்கிறார் பாருங்கள்! இது மட்டுமா? உயர் கல்விக்காகப் பிரிந்து செல்பவர்கள் மூன்று ஆண்டு காலத்தில் திருமபுவர் என்கிறார். இப்பொழுது 'டாக்டர்-Ph. D. என்னும் ஆராய்ச்சிப் பட்டப் படிப்புக்கு மூன்றாண்டு செலவழிக்கிறார்கள் அல்லவா? 'வேண்டிய கல்வி யாண்டு மூனறு இறவாது' என்பது தொல்காப்பிய (கற்பியல்-47) நூற்பா.

இத்தகைய பிரிவுகளுள் அரசியல் வேலையாகப் பிரிபவர் ஓராண்டு காலத்தில் வந்து விடுவார். சித்திரைத் திங்களில் பிரிந்தால் தைத்திங்களில் திரும்பி விடுவார் - அல்லது - மாசித் திங்களில் பிரிந்தாலும் தைத்திங்களில் திரும்பி விடுவார் - எந்தத் திங்களிலே பிரியினும் தைத் திங்களில் திரும்பிவிட வேண்டும்- திரும்பி வருவதாக உறுதி கூறிக் கெடு வைககும் காலம் தைத்திங்கள் ஆகும் - என்றெல்லாம் நச்சினார்க்கினியர் உரையில் விளக்கம் செய்துள்ளார். அவர் தமது உரைக்குச் சான்றாக, நாம் மேலே முதலில் எடுத்துக்காட்டிய அகநானூற்றுப் பாடலையே தாமும் எடுத்துக் குறிப்பிட்டுள்ளார். இது கொண்டு, அநத நாளில் தமிழர்கள் தைத்திங்களுக்குத் தந்திருந்த இன்றியமையாமையை உணரலாம். ஈண்டு,

"வேம்பின் பைங்காய் என்தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே"

என்னும் (916ஆம்) குறுந்தொகைப் பாடலும் ஒப்பு நோக்கற்பாலது. ஒருகாலத்தில் தலைவி தந்த பச்சை வேப்பங்காயும் இனித்ததாகக் கூறிய தலைவன், இப்போது தலைவிமேல் வெறுப்புற்றிருப்பதால், இனிய குளிர்ந்த சுனை நீரை அவள் தைத் திங்களில் தந்த போதும் அது வெய்யதாய் உவர்ப்பதாகக் கூறுகின்றான்; அவனது அன்பில் அவ்வளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது-என்பது பாடலின் கருத்து. தைத் திங்கள் நல்ல நாளிலே தந்த தண்ணிய சுவை நீரையும் வெறுக்கிறான் என்று கூறியிருப்பதின் வாயிலாக, தைத்திங்களின் சிறப்பைக் குறிப்பாய் உணர்த்தியுள்ளார் குறுந்தொகைப் புலவர்.

# விழா நடைமுறைகள்

தைத் திங்களில் பொங்கல் விழா நடைபெறுவதாலேயே, அத்திங்களை இன்றியமையாத திங்களாக இலக்கியங்கள் கூறலாயின. எனவே, பொங்கல் விழாவின் நடைமுறையினைக் காண்போம்:

**பொங்கல் மாசம்:**

தைத்திங்கள் என்னும் செய்யுள் வழக்காற்றைப் 'பொங்கல் மாசம்' எனப் பெண்கள் கூறுவது மரபு. எங்கள் பாட்டி காலத்திலிருந்து நான் கேட்டு வருகிறேன்; மார்கழி பிறந்ததுமே, ''பொங்கல் மாசம் வந்துவிட்டது; இனிப் பொங்கல் வேலையைக் கவனிக்கச் சரியாயிருக்கும்; அந்த வேலையைப் பார்ப்பதா? இந்த வேலையைப் பார்ப்பதா? நான் எந்த வேலையென்று கவனிப்பேன்; பொங்கல் வேலைகள் எல்லாம் அப்படியே கிடக்கின்றன. இனி ஒவ்வொன்றாய்க் கவனித்து முடித்தாக வேண்டும்''-என்று பெண்கள் கூறுவதை யான் இளமையிலிருந்தே கேட்டு வருகிறேன். இக்காலத்தும் மார்கழி பிறந்ததுமே இவ்வாறு என் மனைவி கூறுவதைக் கேட்கிறேன். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் 'தைத்திங்கள்' என்னும் தண்ணிய பெயரால் புலவர்கள் வழங்கியதை,

இன்று நம் பெண்டிர் 'பொங்கல் மாசம்' என்னும் பொலிவு மிக்க பெயரால் வழங்குவதும் நேர்த்தியாய்த் தான் இருக்கிறது.

**அணிசெயல்:**

மார்கழி பிறந்ததுமே பொங்கல் வேலைகள் நடை பெறத் தொடங்கிவிடும். கூரை வீடுகளில் மேலே புதுக்கூரை வேய்வார்கள். மண் சுவர்களில் புதுமண் கரைத்துப் பூசி மெழுகுவார்கள். மண் தரையையும் அவ்வாறே மண் கரைசலால் பூசி மெழுகி ஒழுங்கு செய்வார்கள். அதன்மேல் சாணத்தால் மெழுகுவது அப்புறம் நடைபெறும். மாட மாளிகை கூட கோபுரங் களில் வாழ்பவர்களுக்கு இதைப் படிக்கும்போது என்னவோபோல் இருக்கும். இன்றும் சிற்றூர்களில் பெரும்பாலான வீடுகள் கூரை வீடுகளே என்பது நினைவிருக்க வேண்டும். கூரை வீட்டுச் சுவரிலேயே வெள்ளையடிப்பதும் உண்டு. வெளித் திண்ணை களிலும் படிகளிலும் வெள்ளையும் சிவப்பும் மாற்றி மாற்றிப் பட்டை பட்டையாக அடித்து அணி செய்வதும் உண்டு. இவ்வாறு வெள்ளையடித்து விளக்கம் செய்வது கல் வீட்டிலும் நடைபெறும்; மாட மாளிகைகளிலும் நடைபெறும்.

**கோலம் போடுதல்:**

மார்கழி முதல் நாளிலிருந்தே மங்கையர் தெரு முற்றத்தில் மாக்கோலம் போடத் தொடங்கிவிடுவர். வண்ண வண்ணக் கோலங்கள் கண்ணைக் கவரும். இந்தத் துறையில் கைதேர்ந்த வல்லுநர்கள் (Experts)

சிலர் இருப்பர். அவர்களுக்கு மார்கழித் திங்களில் செல்வாக்கு மிகுதி. அவர்கள் கோலம் போடும்போது சுற்றிலும் பல பெண்கள் சூழ்ந்துகொண்டு பார்ப்பர். பின்னர்த் தனியாக அவர்களிடம் சென்று புதுப்புது வண்ணக் கோலங்கள் போடப் பாடம் வாங்கிக் கொள்வர். கோலச் சுவடிகளைப் பார்த்துப் பார்த்துச் சிறு பெண்கள் கோலம் போட்டுப் போட்டுப் பயிற்சி பெறுவர். வேறு வேலைகளை மறந்து பகல் நேரத்திலும் கோலமும் கையுமாக இருக்கும் பைத்தியங்களும் உண்டு, மணமாகாத கன்னிப் பெண்டிர் இந்தக் கலைத்துறையில் பேரார்வம் காட்டுவர், ஆனால், 'லேடீஸ் கிளப்பு'களுக்குச் செல்பவர்களுள் ஒரு சிலர்க்கும் இந்தக் கலைக்கும் இடைவெளி மிகுதி. அந்தோ அவர் அளியர்!

**பூச்சாணம்:**

நாடோறும் வைகறையில் தெரு வாயிற்படியில் போடும் வண்ணக் கோலத்தின்மேல் பூச்சாணம் வைக்கப் பெறும், அஃதாவது - சிறிது பசுச்சாணம் எடுத்துப் பிடித்துக் கோலத்தின் நடுவே வைப்பர். அந்தச் சாணத்தில் பூக்களைச் செருகுவர். சில இடங்களில் பெரும்பாலும் பூசணிப்பூவே வைக்கப் பெறும். அப்பொழுது மிகுதியாக மலரும் பூ அது. அந்த மலர் மங்கலமான மஞ்சள் நிறம் உடையதாகவும் சாணத்தில் செருகுவதற்கு ஏற்றவாறு 'புனல்' போல் நீளமாகவும் காணக் கவர்ச்சியாகவும் இருக்கும். அதனாலேயே அது தேர்ந்தெடுக்கப்பட்டது போலும்'!

கிடைக்கும் பூககளின் எண்ணிக்கைக்கு ஏற்பக் கோலத்தில் பல இடங்களில் வைக்கப்படுவதுமுண்டு. இதற்காக வைகறையில் சிலர் பூசணிப் பூ விற்பதும் உண்டு. சிலர் நாடோறும் வாடிக்கையாகப் பூக்கொடுத்துச் சென்று பின்னர் பொங்கலன்று வந்து மொத்தமாகப் பணம் பெற்றுக்கொள்வர்.

நண்பகல் நெருங்கும் நேரத்தில் பூவையும் சாணத்தையும் சேர்த்து வறட்டிபோல் தட்டி எடுத்து வைத்துக்கொள்வர். நாடோறும் இவற்றைத் தனியாக எடுத்து வைத்திருந்து, பெரும்பொங்கல் நாளன்று, பொங்கல் ஆக்கும் பொங்கல் அடுப்பில் இட்டு எரிப்பர். சில பகுதிகளில் மூன்று திங்கள் (மாதம்) கணக்காக வேண்டும் என்பதற்காக, கார்த்திகைத் திங்களின் இறுதியிலேயே பூச்சாணம் வைக்கத் தொடங்கி விடுவர். கார்த்திகை, மார்கழி, தை முதல் நாள், ஆக மூன்று திங்கள் கணக்காகிறது அல்லவா? 'பெண் பிள்ளைக் கணக்கு' என்கிறார்களே அதுதான் இது. இந்தப் பூச்சாணத்துடன் கூடிய கோலத்தின் பொலிவே பொலிவு!

**பொங்கல் கோலம்:**

இவ்வாறு சிறப்புக் கோலம் போடுதல் பொங்கல் வரையிலும் நீடிக்கும். பொங்கலோடு சிறப்புக் கோலமும் முடிவுறும். பின்னர் வழக்கம்போல் ஆண்டு முழுவதும் வெறுங் கோலமே இடம்பெறும். மார்கழித் திங்களிலே உதிரி மாவினால் கலையக் கூடிய கோலம் போட்டுவந்தவர்கள், பொங்கல் விழா நாளிலே,

மாவைக் கரைத்துக் கொண்டு, கலையாமல் சில நாட்களுக்கு இருக்கும்படியாக நிலையான கோலம் போடுவர். ஈண்டு ஒரு செய்தி நினைவு கூரத்தக்கது: பெண்டிர் மார்கழித் திங்களிலே கோலம் போட்டு வந்தது, தைத் திங்களிலே வித விதமான நிலையான வண்ணக் கோலங்கள் போடுவதற்காகப் பெற்று வந்த பயிற்சியேயாகும். இந்தக் கருத்து ஒத்துக் கொள்ளப்படும் என நம்புகிறேன். இதற்குச் சான்று வேண்டுமா? பொங்கல் விழா முடிந்ததும், சிறப்புக் கோலம் போடும் செயலும் முடிவு பெற்றுவிடுகிற ஒன்றே போதுமே!

எதிராலே அரங்கத்திலே நாடகம் நடிப்பதற்காக ஒரு திங்கள் காலம் ஒத்திகையும் பல முன்னாயத்தங் களும் நடைபெறுகின்றன. நாடகம் முடிவுற்றதும் ஒத்திகையும் முற்றுப்புள்ளி பெறுகிறது. எனவே, தைப் பொங்கல் விழா என்னும் நாடகத்திற்காகச் செய்யப்பட்ட ஒத்திகையாகவும் முன்னாயத்தங் களாகவும் மார்கழி நடைமுறைகளைக் கொள்ளலாம். 'பீடை மாதம்' என்று பலரால் இழித்துரைக்கப் படுகின்ற மார்கழி பிறந்ததுமே, 'பொங்கல் மாதம் பிறந்து விட்டது' எனப் பெண்கள் கூறுவதிலுள்ள நுட்பம் இப்போது புலனாகலாம்.

பொங்கல் நாளில், வெள்ளையடித்தும் கோலம் போட்டும் வீட்டை அணி செய்வதல்லாமல், வாழை, கரும்பு, மாவிலை-வேப்பிலைத் தோரணம் முதலியன கட்டி அணி செய்வதும் உண்டு. எனவே, பொங்கல் விழா ஒரு மங்கல விழாவாகும்.

**தையின் பொருள்:**

பொங்கல் மாதத்திற்குத் 'தைத்திங்கள்' என்னும் பெயர் வந்ததற்குக் காரணம் என்னவாயிருக்கும்? 'திங்கள்' என்னும் பெயர்க் காரணம் நன்கு தெரிந்ததே. திங்கள் என்பதற்கு நிலா, மாதம், திங்கட்கிழமை என்னும் பொருள்கள் உண்டு. நிலாவாகிய சந்திரனை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டு உருவாக்கப்பட்டதனாலேயே மாதத்தைத் 'திங்கள்' என்கிறோம். சந்திரனுக்கு உரிய நாளாகக் கருதப்படுவதால் ஒரு நாளைத் 'திங்கள் கிழமை' என்கிறோம். பண்டைய சங்க நூல்கள் 'மாதம்' என்று கூறாமல் 'திங்கள்' என்றே கூறுகின்றன. தை மாதம் 'தைத் திங்கள்' என்றே சங்க நூல்களில் வழங்கப் பட்டுள்ளது.

திங்கள் சரி! 'தை' என்னும் பெயர் வழங்கப்பட்ட தற்கு உரிய காரணம் யாது? சங்க காலத்திலேயே தமிழில் வடமொழிச் சொற்கள் வந்து கலக்கத் தொடங்கிவிட்டன. இப்போது தமிழ் மாதங்கள் என்று சொல்லப்படுகிற சித்திரை முதல் பங்குனி யீறாக உள்ள பன்னிரு திங்கள்களின் பெயர்களுள் சில வடமொழிச் சொற்கள் எனப்படுகின்றன. ஆனால் 'தை' என்பது தனித் தமிழ்ச் சொல்லாகும். பெரும்பாலான திங்கள்களின் பெயர்கள் சங்க நூல் களில் காணப்படவில்லை. ஒரு சிலவே ஒரு சில இடங்களில் தலைகாட்டியுள்ளன. 'தை' என்னும் வழக்காறு மட்டும் சங்கத் தொகை நூல்கள் பலவற்றில்

பல இடங்களில் சிறப்பிடம் பெற்றுள்ளது. சங்க நூல்களில் உள்ள ஆட்சியைக் கொண்டு, இந்தத் திங்களுக்குத் 'தை' என்னும் பெயர் வைக்கப்பட்டதற்கு உரிய காரணத்தை உய்த்துணர முடிகிறது.

தைத் திங்களில் செய்யப்படும் அணி-அலங்காரம் முன்பு கூறப்பட்டது. தைத் திங்கள் என்பது அணி மிக்க-அலங்காரமான திங்கள் என்று அறியலாம். 'தை' என்னும் சொல்லுக்கு, அணி செய்தல்-அலங்காரம் செய்தல்-அழகு செய்தல்-ஒப்பனை செய்தல் என்று பொருளாம். அதனாலேயே, அணி செய்யப்பெறும் இந்தத் திங்கள் 'தைத்திங்கள்' என்னும் 'அலங்காரப்' பெயரால் வழங்கப்பெறுகிறது. அணி செய்தல் என்னும் பொருளில் 'தை' என்னும் சொல் சங்க நூல்களில் ஆளப்பட்டிருப்பதைப் பரக்கக் காணலாம். சில ஆட்சிகள் வருமாறு:-

புறநானூறு:

> **'சென்னி பொலியத் தைஇ' (126)**
> **'கண்ணி இலங்கத் தைஇ' (353)**
> **'வல்லோன் தைஇய வரிவனப் புற்ற'** (33)
> **'அடிபொலியக் கழல் தைஇய'** (40)
> **'செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇ'**(243)

பதிற்றுப்பத்து:

> **'அவிரிழை தைஇ மின்னுமிழ்பு இலங்கச்**
> **சீர்மிகு முத்தம் தைஇய……'** (39)

பரிபாடல்:

> **'தண்கமழ் சாந்தம் தைஇ வளியும்'** (21)

'புகைவகை தைஇயினார் பூங்கோதை நல்லார்
தகைவகை தைஇயினார் தார்
வகைவகை தைஇயினார் மாலை' (20)
'சாய்குழை பிண்டித் தளிர்காதில் தைஇயினாள்'(11)

அகநானூறு:

'அவ்வயிற் றகன்ற அல்குல் தைஇ' (21)
'பண்ணி தைஇய பயங்கெழு வேள்வி' (13)
'மணிப்பூம் பைந்தழை தைஇ அணித்தக' (20)
'நெய்கனி வீழ்குழல் அகப்படத் தைஇ' (73)
'ஆல முற்றம் கவின்பெறத் தைஇய' (181)
'ஒள்ளிலை தொடலை தைஇ மெல்லென' (105)
'தாவில் நன்பொன் தைஇய பாவை' (212)
'அரிமலர் ஆம்பலொடு ஆர்தழை தைஇ' (176)
'உரிவை தைஇய முரசம்' (334)
:சுரும்பு சூழ் அலரி தைஇ வேய்ந்த நின்' (257)
'வேலும் விளங்கின வினைஞரும் இயன்றனர்
தாரும் தையின தழையும் தொடுத்தன' (259)
'தேங்கமழ் திருநுதல் திலகம் தைஇயும்' (389)

குறுந்தொகை:

'சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇ' (142)
பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்' (276)
'தாழை தைஇய தயங்குதிரைக் கொடுங்கழி' (345)

நற்றிணை:

'அம்பகை நெறித் தழை அணிபெறத் தைஇ' (96)
'திலகம் தைஇய தேங்கமழ் திரு நுதல்' (62)
'பூவுடன் நெறிதரு தொடலை தைஇ' (138)
'பிணையல் அம்தழை தைஇ' (170)
'வெண்போழ் தைஇய அலங்கலந் தொடலை' (169)

'சுனைப்பூக் குற்றும் தொடலை தைஇயும்' (173)
'தளிர்சேர் தண் தழை தைஇ' (204)
'மணிமருள் ஐம்பால் வண்டுபடத் தைஇ' (245)
'அணிபெறத் தைஇ விழவிற் செலீஇயர் வேண்டும்,
(390)

ஐங்குறுநூறு:

'வயலைச் செங்கொடிப் பிணையல் தைஇ' (52)
'தொடலை தைஇய மடவரல் மகளே' (361)

கலித்தொகை:

'தைஇய மகளிர்தம் ஆயமோ டமர்ந்தாடும், (27)
'வல்லவன் தைஇய பாவைகொல்' (56)
'அந்துகில் போர்வை அணிபெறத் தைஇ' (65)
'அணி வரி தைஇ' (தொய்யில் எழுதுதல்) (76)
'திகழொளி முத்தங் கரும்பாகத் தைஇ' (80)
'வண்டின் கிளைபாடத் தைஇய கோதை' (80)
'தைஇய பூந்துகில்' (85)
'பண்ணித் தமர்தந்து ஒருபுறம் தைஇய கண்ணி' (109)
'தழையும் கோதையும் இழையும் என்றிவை
தைஇயினர் மகிழ்ந்து திளைஇ விளையாடும்' (102)
'தாது சூழ் கூந்தல் தகைபெறத் தைஇய கோதை'
(111)

'புதுவ மலர் தைஇ' (114)
'அணிபெறத் தைஇய நீலநீர் உடை' (124)
'இலங்கே ரெல்வளை யேர்தழை தைஇ' (125)
வல்லவன் தைஇய வாக்கமை கடுவிசை (137)

முருகாற்றுப் படை:

'திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்' (அடி-24)
'சீரை தைஇய உடுக்கையர்' (126)
'வேலன் தைஇய வெறியயர் களனும்' (222)

**மதுரைக் காஞ்சி:**

**'வல்லோன் தைஇய வெறிக்களம் கடுப்ப'** (அடி-284)
**'வல்லோன் தைஇய வரிப்புனை பாவை** (723)

**குறிஞ்சிப் பாட்டு:**

**'பைவிரி அல்குல் கொய்தழை தைஇ'** (அடி-102)

மேலுள்ள சங்க நூல் ஆட்சிகளில் 'தை' என்னும் சொல், எல்லாத் துறை ஒப்பனைகளையும் (அணி-அலங்காரங்களையும்) குறிக்கப் பயன்படுத்தப் பட்டிருப்பது காண்க, ஒப்பனைக்குப் பேர்போன ஒரு திங்கள் 'தைத்திங்கள்' என வழங்கப்படுவதின் பொருத்தம் இப்போது புலனாகலாம்.

உடை ஒப்பனை செய்யும் கலைக்குத் 'தையல்' என்னும் பெயர் வழங்கபபடுவதும், ஒப்பனை செய்பவரும் செய்து கொள்பவருமாகிய பெண்டிர் 'தையலார்' எனப் பெயர் வழங்கப்படுவதும் ஈண்டு ஒப்பு நோக்கற் பாலன. தையல் என்னும் சொல் அலங்காரம்-ஒப்பனை என்னும் பொருளில் வழங்கப் பட்டிருக்கும் ஆட்சியை.

**''தாதுசெய் பாவை யன்ன தையல்**
**மாதர் மெல்லியல் மடநல்லோள்''** (392)

என்னும் அகநானூற்றுப் பாடல் பகுதியிலும்,

**''தையல் மகளிர் ஈரணி புலர்த்தர''** (11)

என்னும் பரிபாடல் பகுதியிலும், திருக்கோவையார் உரையில் பேராசிரியர் 'தையல் பாங்கி ஐயம் உற்றது' என்பதனை விளக்குகையில் 'தையல்' எனனும்

சொல்லுக்குப் 'புனையப்படுதல்' எனப் பொருள் வரைந்துள்ள உரைப்பகுதியிலும், இன்ன பிறவற்றிலும் கண்டு மகிழலாம்.

**தையின் இனிமை:**

தை என்றாலே மக்களுக்கு இனிமைதான்-இன்பம் தான்! இந்தக் கருத்தைக் கலித்தொகைப் பாடல் ஒன்று நயம்பட நவின்றுள்ளது. இசை வல்ல கோவலர்கள் தனித்த சிறப்புடைய புல்லாங்குழல் இசைக்கிறார்களாம்; அந்தக் குழலிசை கேட்பதற்குத் 'தை' என இனிக்கிறதாம்; இதனை,

**'தை எனக் கோவலர் தனிக்குழல் இசைகேட்டுப்**
**பையென்ற நெஞ்சத்தேம் பக்கம் பாராட்டுவாய்'**

என்னும் (118-ஆம்) கலித்தொகைப் பாடல் பகுதியால் அறியலாம்.

**தை விளையாட்டு:**

தைப் பொங்கல் விழாவில் சிறாரும் இளைஞரும்-ஏன் பெரியவருங்கூடப் பல்வேறு விளையாட்டுக்களில் பங்கு பெற்று மகிழ்வதுண்டு. இதனை இன்றும் சிற்றூர்களில் மிகுதியாகக் காணலாம். ஒப்பனை மிக்க இனிய 'தை' விளையாட்டுக் கலைக்கும் பெயர் பெற்றதாகும். 'தை' என்னும் சொல்லுக்கு விளையாட்டு என்னும் பொருளும் உண்டு. இந்தப் பொருளாட்சி,

**'நிழல் காண் டோறும் நெடிய வைகி**
**மணல்காண் டோறும் வண்டல் தைஇ**
**வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே'**

என்னும் (9-ஆம்) நற்றிணைப் பாடல் பகுதியில் உள்ளமை காண்க. இளங் காதல் மனையாட்டியுடன் வழிப்பயணம் செய்யும் காதலன் அவளுக்குக் கூறுகிறான். ''என் இனிய காதலியே! வழிநடைக் களைப்பால் நீ சோர்ந்து போக வேண்டா! நிழல் கண்ட இடத்தில் நெடுநேரம் தங்கி ஓய்வெடுத்துக் கொள்க!மணல் கண்ட இடத்தில் 'வண்டல்' என்னும் மணல் விளையாட்டு ஆடுக! இங்ஙனம் பொழுது போக்கி வருந்தாது வருக!''— என்று ஆறுதல் கூறுகிறான். இந்தக் காலத்தில் என்றால் 'ஸ்கூட்டரில்' பின்னால் அமர வைத்து அழைத்துச் செல்வான்! அந்தக் காலத்தில் என்ன செய்வது! நடந்துதானே செல்ல வேண்டும்! எனவேதான் ஆறுதல் கூறுகிறான். இந்தப் பாடலில், வண்டல் விளையாட்டு ஆடுவதற்கு 'வண்டல் தைஇ' என்னும் வழக்காறு வந்துள்ளமை காண்க.

மற்றும்,காதலர்கள் கடற்கரை மணலில் வண்டல் விளையாட்டு ஆடியும் அலைகளை எற்றியும் இன்பப்பொழுது போக்கியதாக நற்றிணையில் 'வண்டல் தைஇயும் வருதிரை உதைத்தும்' என்னும் (254-ஆம்) பாடலில் கூறப்பட்டுள்ளது. இன்னும், அகநானூற்றில் உள்ள 'கோதை ஆயமொடு வண்டல் தைஇ ஓரை ஆடினும்' என்னும் (60-ஆம் பாடல்) பகுதியும், வளைவாய்க் கோதையர் வண்டல் தைஇ இளையோர் செல்ப' என்னும் (370-ஆம்) பாடல் பகுதியும் ஈண்டு ஒப்புநோக்கற் பாலன. இந்த வழக்காறுகளால், 'தை' என்னும் சொல்லுக்கு உள்ள விளையாட்டு என்னும் பொருள் பெறுமானத்தை

அறியலாம். எனவே, இதுகாறுங் கூறியவற்றால், தைத்திங்களின் இன்ப விளையாட்டுப் பொழுதுபோக்கு உணர்வு புலனாகும்.

**தைக்குதிப்பு:**

'தை' என்றாலே ஒருவகை மகிழ்ச்சி பெருக்கெடுப்பதை உலகப் பேச்சு வழக்கு ஒன்று உணர்த்துகிறது. சிறார்கள் மகிழ்ச்சி தாங்காமல் குதித்தால், அவர்களை நோக்கி, 'தைதை' எனக் குதிக்கிறார்கள் - என்று சொல்லும் வழக்காறு உலகியலில் உண்டு. குதிப்பதற்குத 'தைதை எனக் குதித்தல்' என்ற பெயர் எப்படி ஏற்பட்டிருக்கக் கூடும்? வெளியில் கடைக்குச் சென்றுள்ள அம்மாவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் குழந்தை, அம்மா வந்தவுடன், அம்மாவந்துவிட்டார்கள் -அம்மா வந்து விட்டார்கள் என்னும் ஆர்வப் பொருளில் 'அம்மா-அம்மா' என்று குதிப்பதைக் காண்கிறோம். அவாறே, தைத்திங்களை எதிர் பார்த்துக் கொண்டிருந்த சிறார்கள், தை வந்ததும், தைவந்து விட்டது-தை வந்து விட்டது என்னும் ஆர்வப் பொருளில் 'தை-தை' என்று கூவி மகிழ்ச்சியுடன் குதித்திருப்பார்கள். இந்த வழக்காறு, பின்னர், மகிழ்ச்சியுடன் குதிப்பதற்கெல்லாம் ஏற்பட்டிருக்கலாம். எனவே, 'தை-தை எனக் குதித்தல்' என்னும் வழக்காறு, தைத்திங்களை மக்கள் ஆர்வமுடன் எதிர்பார்த்து வரவேற்பதைக் குறிக்கிறது என உய்த்துணரலாம். இவ்வளவு வரவேற்பிற்கு உரிய தைப்பொங்கல் விழா நடைபெறும் வரலாற்று முறையினை விவரமாகக் காண்போம்.

# போகி விழா

மார்கழி பிறந்ததுமே 'பொங்கல் மாசம்' வந்து விட்டது எனப் பெண்கள் கூறுவார்கள் என முன்னர் அறிவிக்கப்பட்டது. பொங்கல் மாசம் என்பது மார்கழியைக் குறிக்காது; தைத் திங்களையே குறிக்கும். இருப்பினும், தைப் பொங்கலுக்கு வேண்டிய ஆயத்தங்களை முன்கூட்டிச் செய்யும் திங்கள் ஆதலால் மார்கழி வந்ததும் 'பொங்கல் மாசம்' வந்து விட்டது என்று கூறும் மரபு ஏற்பட்டது. பொங்கலுக்கு ஆயத்தம் செய்யும் மாதந்தான் மார்கழி மாதம். பொங்கல் மாசம் என்பது தைத்திங்களேயாகும். தைப் பொங்கலின் முன்னாயத்தம் மார்கழி என்பதைப் பறை சாற்றுவதுபோல், மார்கழித் திங்களின் இறுதி நாளில் போகி விழா நடைபெறுகிறது. இந்தப் போகியை, மார்கழியையும் தையையும் இணைக்கும் ஒரு பாலமாகக் கொள்ளலாம். பொங்கல் விழாவிற்காக இல்லங்களைத் தூய்மை செய்யும் பொலிவு நாளாகப் போகி நாள் திகழ்கிறது.

### போகி மூட்டம்:

போகி விழா ஊருக்கு ஊர் ஒவ்வொரு விதமாகவும் வீட்டுக்கு வீடு வெவ்வேறு விதமாகவும் நடைபெறலாம். இருப்பினும், பொதுவான சில கூறுகள் இல்லாமற் போகா. போகியன்று வைகறையில் பழம்

பொருள்களை எரிக்கும் நிகழ்ச்சி நடைபெறும். தீ மூட்டி, அதில் பழைய கூடை, முறம், பாய், விசிறி மட்டை, தடுக்கு, துடைப்பம் முதற்கொண்டு போட்டு எரிப்பார்கள். துணைக்கு விறகு, மரக்கட்டைகள் போன்றவற்றையும் சேர்த்துக் கொள்வதுண்டு.

'வைகுண்ட ஏகாதசி விரதத்திற்குச் சாப்பாடு துளசி தீர்த்தந்தான்; அதற்குத் தொட்டுக்கொள்ளப் புளியோதரை, ததியோதனம், வடை முதலியனவாம்'- என்று வேடிக்கைக்குச் சொல்வதுண்டு. அவ்வாறே, பழம் பொருள்களைப் போட்டு எரிப்பது போகி மூட்டம் என்று பேர் சொல்லிக் கொண்டு, பெரிய பெரிய மரக் கட்டைகளையெல்லாம் போட்டு எரிப்பது இளைஞர் களுக்கு ஒரு வேடிக்கை. இதற்கென்று விறகு தேடும் படலமே நடைபெறும்.

சிற்றூர்களில் சிறார்களும் இளைஞர்களும், போகி மூட்டத்திற்காக, கார்த்திகைத் திங்களிலிருந்து விறகு திரட்டத் தொடங்கி விடுவர். தெருவிலே விற்பனைக் காக வரும் விறகு வண்டிக்காரர்களிடம் குறைந்தது ஒரு விறகு வீதமாயினும் வாங்கி ஊர்க்கோயிலின் ஓரிடத்தே சேர்த்து வைத்துக் கொண்டு வருவர். போகியின் முதல் நாளில் வீடுதோறும் சென்று விறகு கேட்டு வாங்கிக்கொண்டு வந்து குவிப்பர். காடு மேடுகளில் சென்று சுள்ளிகள் பொறுக்கிக்கொண்டு வருவதும் உண்டு.

இவ்வாறு திரட்டிய எரிபொருள்களைப் போகி யின் முதல் நாள் நள்ளிரவே கொளுத்தத் தொடங் குவர். விடிந்தால் போகிநாள். சிற்றூர்களில் கோயில்

கட்கு எதிரே போட்டுக் கொளுத்துவர். அந்தந்தத் தெருவினர் அந்தந்தத் தெருக் கோயிலுக்கு எதிரே யுள்ள போகி மூட்டத்தில் பங்கு கொள்வர். ஒவ்வொரு தெருவினரும் போட்டி போட்டுக் கொண்டு தத்தம் மூட்டங்களை விரிவுபடுத்துவர். எங்கள் தெரு மூட்டம் நூறடி உயரம் எரிந்தது-எங்கள் மூட்டம் இருநூறடி உயரம் எரிந்தது-என்றெல்லாம் ஒருவர்க்கொருவர் வீம்பு பேசுவதுண்டு. இரவு முழுதும் இளைஞர்கள் ஒவ்வொரு மூட்டமாகச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருவர்; வேறொரு தெருவில் மூட்டம தங்கள் மூட்டத்தினும் பெரிதாயிருக்குமாயின, அதனினும் தங்கள் மூட்டத்தைப் பெரிதாக்கத் திட்டமிட்டு வீடு களிலுள்ள எரிபொருளகளை யெல்லாம் திரள் திரளாகக் கொண்டு வந்து குவிப்பர். மூட்டம் வானளாவும். 'பட்டாசு' முதலிய வெடிபொருள்களை மூட்டத்தில் போட்டு வெடிக்கச் செய்வதும் உண்டு. எங்கள் தெரு மூட்டத்தை நள்ளிரவு ஒரு மணிக்கே கொளுத்தி விட்டோம் என்பார் ஒருவர்; நாங்கள் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கே கொளுத்திவிட்டோம் என்பார் இன்னொரு தெருவினர். மற்றவர் மூட்டத் தினும் முந்திக் கொள்வதற்காக இளைஞர்கள் முன்னிரவிலிருந்தே தூங்காதிருப்பதும் உண்டு. பொங்கல் விழாவை இளைஞர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதிலுள்ள ஆர்வத்தின் காரணம் இப்போது புலனாகலாம்.

மேலே கூறிய நிகழ்ச்சி ஒரு சிலர் அறியாத ஒன்றாகும். சில பகுதிகளில் போகி மூட்டம் போடுவ

தில்லை. எனவே, அந்தப் பகுதியினர் இதனை அறியார். சில ஊர்களில் கோயிலுக்கு எதிரே குழுவாக மூட்டம் போடாமல், மக்கள் தத்தம் வீடு களுக்கெதிரே தனித்தனியாக மூட்டம் போடுவதும் உண்டு. இவர்கள் தம் வீட்டுப் பழைய கழிவுப் பொருள்களைப் போட்டுக் கொளுத்துவர். ஊர்ப் பொது மூட்டத்தில் சேர்ந்து கொள்ளாத இவர்கள், 'தாம் உண்டு-தம் காரியம் உண்டு' என்று போகும் 'பரந்த' நோக்கம் உடையவர்கள் போலும்!

போகி நாளின் வைகறையில் போகி மூட்டம் போடுவதே மரபு. ஒரு சில ஊர்களில் போகி நாளின் நள்ளிரவில்-அஃதாவது, தை முதல் நாள் வைகறையில் போகி மூட்டம் போடும் வழக்கம் உள்ளது. தை இரண்டாம் நாளாகிய மாட்டுப்பொங்கல் நாளில் வைகறையில் போகி மூட்டம் போடும் ஊர்களும் இருக்கின்றன. தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூரைச் சேர்ந்த-அப்பரடிகள் கடலிலிருந்து கரை யேறிய வண்டிப்பாளையம் என்னும் ஊரில் மாட்டுப் பொங்கல் நாளின் வைகறையில்தான் போகி மூட்டம் போடப்படுகிறது. என்றோ ஓராண்டில் போகி நாளன்று ஊரில் ஏதேனும் கேடு நேர்ந்திருக்கலாம்: அதனால் அவ்வூரார் போகி மூட்டத்தை மாட்டுப் பொங்கல் நாளுக்குத் தள்ளி வைத்திருக்கலாம். அதிலிருந்து ஆண்டுதோறும் மாட்டுப்பொங்கல் நாளன்றே போகி மூட்டம் போடும் வழக்கம் பின் பற்றப்பட்டிருக்கலாம். இப்படி ஏதோ தக்க காரணத் தாலேயே அவ்வாறு நிகழ்கிறது.

**இந்திர விழா:**

வேண்டாத பழம் பொருள்களுடன் துயர்களும் போகுவது போகி என்பதாக 'போகி' என்னும் சொல்லுக்கு ஒருவகைப் பொருள் கூறுவர் சிலர். 'போகி' என்பது இந்திரன் பெயர்களுள் ஒன்று; எனவே இந்திரனுக்குச் செய்யும் விழாவே 'போகி பண்டிகை' எனப்படும் போகி விழாவாகும்-எனக் கூறுவர் மற்றொரு சாரார். இந்திரன் மழை பெய்ய வைப்பவன் ஆதலின் மழையினால் விளைந்த அறுவடை வீடுவந்து சேர்ந்தபின் நன்றிக் கடனாக அவனுக்கு விழா எடுக்கப்படுவதாகச் சொல்லப் படுகிறது.

இந்திர விழா தமிழர்க்குப் புதிதன்று. சிலப்பதி காரத்தில் 'இந்திர விழவூர் எடுத்த காதை' எனவும், மணிமேகலையில் '(இந்திர) விழாவறை காதை' எனவும், தனிக் காதைகளே உள்ளன இந்தக் காதைகளில் இந்திர விழா மிகவும் சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழர்கள் போகி நாளில் இந்திரனை வழிபட்டிருப்பதில் வியப்பில்லை.

இந்தப் போகி விழாவிற்கு ஒரு கதை சொல்லப் படுகிறது: வடநாட்டில் ஆயர்கள் மழைத்தெய்வமாகிய இந்திரனைப் புறக்கணித்துக் கண்ணனுக்குப் பூசனை செய்தார்களாம். அதனால் சினந்த இந்திரன். கண்ணன் பூசனை நடைபெறாதவாறு பெருமழை பெய்யச் செய்தானாம். அப்போது ஆயர்களின் வேண்டுகோளின்படி கண்ணன் கோவர்த்தன மலையை

எடுத்துக் குடையாகப் பிடித்துப் பெருமழையினின்றும் ஆயர்களைக் காத்துப் பூசனையை ஏற்றுக் கொண்டானாம். தோல்வியுற்ற இந்திரன், ஆயர்கள் தன்னையும் வணங்கும்படி அருள் செய்யவேண்டு மெனக் கண்ணனை வேண்டிக் கொண்டானாம். கண்ணனும் அவ்வாறு நடைபெற அருள்புரிந்தானாம். அதன்படி ஆயர்கள், போகியன்று இந்திரனையும் மறுநாள் பொங்கலன்று கண்ணனையும் அதற்கும் மறுநாள் மாட்டுப் பொங்கலன்று மாடுகளையும் வழிபட்டார்களாம். போகி விழாவிற்குப் பொருத்த மாக இப்படியொரு கதை சொல்லப்படுகிறது. இது வடநாட்டுக் கதை. இந்தக் கதையமைப்பின்படி தமிழ் நாட்டில் போகி விழா நடப்பதாகப் புகல்வதற்கில்லை.

இந்திரன் வழிபாடு தமிழகத்தில் தொன்றுதொட்டு நடைபெற்று வருவதாகும். ஆயர்கள் முல்லை நிலத்திற்கு உரியவர்கள் எனவும் அந்நிலத்திற்கு உரிய தெய்வம் திருமால் எனவும் பழந்தமிழ் இலக்கண-இலக்கிய நூல்கள் கூறுகின்றன. மூவாயிரம் ஆண்டுக்கு முன்தோன்றிய தொல்காப்பியம், இந்திரனை மருத நிலத்திற்கு உரிய சிறப்புத் தெய்வமாகக் கூறுகிறது. சிறப்பாக, நீர்வளம் - நிலவளம் மிக்க மருத நிலத்தார் இந்திர வழிபாடு செய்வார்களாம். இதனைத் தொல்காப்பியத்தாலும் அதற்கு நச்சினார்க்கினியர் வரைந்துள்ள உரையாலும் இன்ன பிறவற்றாலும் அறியலாம்.

**''மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**

**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே''**

என்பது தொல்காப்பிய (அகத்திணையியல்-5) நூற்பா. இதிலுள்ள 'வேந்தன் மேய தீம்புனல் உலகம்' என்பது கருதத்தக்கது. இத்தொடருக்கு, 'இந்திரன் காதலித்த தண் புனல் நாடு' என நச்சினார்க்கினியர் பொருள் வரைந்துள்ளார்; இதைத் தொடர்ந்து அவர் மேலும் எழுதுகிறார்:

''இனி ஊடலுங் கூடலுமாகிய காமச் சிறப்பு நிகழ்தற்கு மருத நிலத்திற்குத் தெய்வமாக 'ஆடலும் பாடலும் ஊடலும் உணர்தலும்' உள்ளிட்ட இன்ப விளையாட்டு இனிதின் நுகரும் இமையோர்க்கும் இன் குரல் எழிலிக்கும் இறைவனாகிய இந்திரனை ஆண்டையோர் விழவு செய்து அழைத்தலின் அவன் வெளிப்படும் என்றார். அது,

**'வையைப் புதுப்புனல் ஆடத் தவிர்ந்தமை**
**தெய்வத்திற் றேற்றித் தெளிக்கு'** (*கலி-98*)

என, இந்திரனைத் தெய்வம் என்றதனானும், இந்திர விழவூர் எடுத்த காதையானும் உணர்க'':-

என்பது நச்சினார்க்கினியர் உரைப்பகுதி. இது காறும் கூறியன கொண்டு, இந்திர விழா இயற்கை யாகத் தமிழகத்திற்கு உரியது எனவும், கண்ணனது தொடர்பால் வந்த தன்று எனவும் உணரலாம்.

**நடைமுறை:**

போகி விழா பெயரளவுக்கு இந்திரனுக்கு உரிய தாகச் சொல்லப்படினும், சில ஊர்களில்-சில கும்டுபங்

களில் நடைபெறும் நடைமுறைகளைக் காணுங்கால், 'இந்திர வழிபாடு' என்ற உணர்வுடன் செய்யப் படுவதாகத் தெரியவில்லை. போகி விழா சில வீடு களில் மாரியம்மன் வழிபாடுபோல் நடத்தப் பெறுகிறது. அன்று காலை சிலர் கூழ் படைக்கிறார்கள்; ஏழை களுக்குப் படைத்த கூழை ஊற்றுகிறார்கள்; அதனுடன் மாவு இடித்து வைத்துப் படைப்பது தவறாது. கூழ்க் கலயத்தைச் சுற்றி வேப்பிலை கட்டியிருப்பார்கள். படைக்கும் இடத்திலும் நிரம்ப வேப்பிலை வைக்கப் பட்டிருக்கும். இது மாரியம்மன் படையல் போல் தோன்றுகிறதல்லவா? ஒருசிலர் காலையில் கூழ் படைப்பதற்குப் பதில் கஞ்சி காய்ச்சிப் படைத்து ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றுவர். ஒருசிலர் காலையில் சோறு பொங்கித் தயிர் ஊற்றிக் கிளறிப் படைப்பதும் உண்டு. எல்லோருமே, கூட மாவு இடித்து வைத்துப் படைப்பதை நிறுத்துவதில்லை. ஊருக்கு ஊர்-இனத் திற்கு இனம்-வீட்டிற்கு வீடு படையலில் வேறுபாடு இருப்பது இயற்கையே!

இது காலைப் படையல். இரவிலோ கொழுக் கட்டை செய்தும் கீரை துவட்டியும் பலவகைக் காய்கறிகள் ஆக்கியும் படைப்பது வழக்கம் இதிலும் இடத்துக்கு இடம் சிறு சிறு வேறுபாடுகள் உண்டு.

**காத்தவராயன்:**

சில குடும்பங்களில் போகியன்று 'காத்தவராயன்' என்னும் சிறு தெய்வத்திற்கும் படையல் நடைபெறும். வழக்கமாகக் கடவுளுக்குப் படைக்கும் இடத்திற்கு

அப்பால் சிறிது தொலைவில் சுவரில் பூசைபோட்டுப் பொட்டிட்டு, அந்த இடத்தைக் காத்தவராயனுக்கு உரிய இடமாகக் கற்பனை செய்து இலைபோட்டு உணவு வகைகள் வைத்துப் படைப்பர். புலால் உண்பவர்கள் வீட்டில், காத்தவராயனுக்குப் புலால் உணவும் படைக்கப்படும். வழக்கமாகப் படைக்கும் இடத்தில் மரக்கறி உணவும், காத்தவராயனுக்கு உரிய இடத்தில் புலால் உணவும் ஒரே நேரத்தில் வைத்துப் படைக்கப்படும். காத்தவராயனுக்கு மது, சுருட்டு முதலியன வைத்துப் படைப்பதும் உண்டு. மது அருந்தாதவரும் காத்தவராயனுக்கு மது படைத்து, பின்னர் அதனை யாருக்காவது எடுத்துக் கொடுத்து விடுவர்.

இவ்வாறு இன்னும் பல்வேறு வகைகளில் போகி யன்று படையல்கள் நடைபெறுவதுண்டு. இந்தப் படையல் நடைமுறைகளை நோக்குங்கால், இஃது இந்திரனுக்கு உரிய வழிபாடாய்த் தோன்றாமல், அவரவர் வீட்டுத் தெய்வத்திற்கு-மரபுவழியான குல தெய்வத்திற்குச் செய்யும் வழிபாடாகத் தோன்றுகிற தல்லவா? இந்திரனோ சந்திரனோ? யாருக்காயிருந் தாலென்ன? ஏதோ தெய்வப் படையல் நடைபெறு கிறது. அவ்வளவோடு அமைய வேண்டியதுதான்.

வட தமிழ் நாட்டிலேதான் போகி விழா மிகவும் சிறப்பாகவும் பெரிய அளவிலும் கொண்டாடப்படுவ தாகத் தெரிகிறது.

# பெரும் பொங்கல்

**பால் பொங்கல்:**

தை முதல் நாள் பொங்கல் விழா நடைபெறும். இதனைப் 'பெரும் பொங்கல்' என்று வழங்குவது மரபு. போகியன்று பிற்பகலில் கடைக்குச் சென்று புதிய மட்பாண்டங்கள்-பானை சட்டி முதலியன வாங்கி வந்து வைத்துக் கொள்வர். பொங்கலன்று காலையில் பொங்கல் உணவு ஆக்கத் தொடங்குவர். சிலஊர்களில் கதிரவன் புறப்படும் நேரத்திலேயே செய்யத் தொடங்கி விடுவர், குடும்ப மரபுப்படி இத்தனை பானைகள் வைப்பது-இவ்வளவு பெரிய பானைகள் வைப்பது-இத்தனை படி அரிசி போட்டுப் பொங்குவது என்றெல்லாம் கணக்கு உண்டு. சோறு பொங்கும் வேலை திறந்த முற்றத்தில்-கதிரவனது ஒளிபடும் இடத்தில் நடைபெறும்.

சிலர் தரையைத் தோண்டிப் புதிதாக அடுப்பு வெட்டுவர்; சிலர் கற்களை அடுக்கிப் புதிதாக அடுப்பு கட்டுவர். இந்தக் கல் அடுப்பைத் தனியாக எடுத்து வைத்திருந்து ஆண்டுதோறும் பொங்கல் நாளன்று மட்டும் பயன்படுத்துவதுண்டு. இதற்குப் 'பொங்கல் அடுப்பு' என்பது பெயர், பொங்கல் பானைக்குப் பூசை

போட்டு மஞ்சள்-வேப்பிலை மாலை கட்டி நல்ல நேரம் பார்த்து அடுப்பில் ஏற்றுவர். வசதி மிக்கவர் உலை நீருக்குப் பதில் பால் ஊற்றுவர். வசதி குறைந் தவர் உலை நீருடன் பால் கலந்து ஊற்றுவர். பால் பொங்கி வெளியே வரும்போது அனைவரும் 'பொங்கலோ பொங்கல்-பொங்கலோ பொங்கல்' எனக் கூவி மகிழ்ச்சி ஆரவாரம் செய்வர். பால் பொங்கியதும் அரிசி போட்டுப் பொங்கிய பானையை இறக்குவர். இறக்கிய பானையைக் கோல மிட்ட தூய இடத்தில் வைப்பர். மற்ற காய்கறி வகைகளும் சிறப்பாக ஆக்குவர். இதனுடன் சிலர் சர்க்கரைப் பொங்கலும் செய்வர். ஒருசிலர் வடை பாயசம் செய்வதும் உண்டு. வெள்ளைச் சோறும் காய்கறி வகைகளும் செய்யாமல், சர்க்கரைப் பொங்கல் மட்டும் செய்பவரும் உளர்.

**படையல் முறை:**

பொங்கல் உணவை இறைவனுக்குப் படைக்கும் முறையில் இடத்திற்கு இடம் வேறுபாடு இருக்கலாம். எனினும், சிறப்பாகக் கையாளப்படும் முறையைக் காண்பாம்: திறந்த வெளி நடு வாசலில், பொங்கல் செய்த அடுப்புக்கு எதிரிலேயே படையல் நடைபெறும். சாணத்தால் இறையுருவம் பிடித்து வைக்கப்படும். திருவிளக்கும் ஏற்றி வைக்கப்படும். சுற்றிச் செம்மண் கோலம் போட்டிருப்பர். இந்த இடத்தில் குடும்ப மரபுக் கேற்ற எண்ணிக்கையில் இலை போடுவர். சிறப்பாக இருபத்தோரிலைகள் போடுவதுண்டு. ஐந்து இலைகள் போடுபவரும் உளர். பலர் வாழை

இலை போடுவர். சில இடங்களில்-சில குடும்பங்களில் பூசணி இலை போடுவர். பின்னர் உணவு வகைகள் பரிமாறப்பெறும். அப்பொழுது மிகுதியாய் விளையும் பூசணி, வள்ளிக்கிழங்கு, கருணைக் கிழங்கு முதலிய கறிவகைகள் சிறப்பிடம் பெறும். கரும்பு, மஞ்சள் கொத்து, நெற்கதிர் முதலியனவும் உரிய இடம்பெறும் படைக்கும்போது 'பொங்கலோ பொங்கல்; பொங்கலோ-பொங்கல்' என அனைவரும் மங்கல முழக்கம் செய்வர். திறந்த வெளியாதலின் கதிரவன் நன்கு தெரிவான். கதிரவனுக்குக் காட்டிப் படையல் செய்யப் பெறும். ஞாயிறாலேயே மழை பெய்து பயிர் விளைவதால் இந்தப் படையலை ஞாயிற்றுக்கு உரியதாகச் சொல்வது மரபு. நன்றிக்கடன் செலுத்தும் ஞாயிறு விழாவாகும் இது. 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்பது சிலப்பதிகாரம் அல்லவா?

**பகுத்துண்ணுதல்:**

பகுத்துண்ணுதல், பல்லாரோடு உண்ணுதல் என்றெல்லாம் இலக்கியங்களில் படித்திருப்பதைப் பொங்கல் விழாவில் நடைமுறையில் காணலாம். அன்று உறவினர்க்கும் தொழிலாளர்க்கும் ஏழையர்க்கும் இரவலர்கட்கும் உணவு அளிக்கப்பெறும். ஒரு விருந்து போலவே பலரும் வரிசையாய் அமர்ந்து உண்பர். பெரிய பானை வைத்துப் பொங்கல் செய்வதற்குப் 'பெரும் பொங்கல் இடுவது' என்று பெயராம். ஓர் ஊரிலேயே எல்லா வீடுகளிலும் இது

நடப்பதில்லை. எனவே. பெரும் பொங்கல் இடும் வீட்டினரால், பெரும் பொங்கல் இடாத வீட்டினர் விருந்தினராக அழைக்கப்பெற்றுச் சிறப்பிக்கப் பெறுவர், உறவினர் அல்லாத மற்றையோரும் பங்கு பெறுவர். ஏழை எளியவரும் பசியாறி மகிழ்வர்.

**பொங்கல் நீர்:**

பொங்கலன்று அரிசி களைந்த நீர் உயர்வாகப் போற்றப்பெறும். சில பகுதிகளில் இந்த நீரைக் கொண்டு போய் நிலத்தில் தெளிப்பது வழக்கம். வேறு சில பகுதிகளில் படைத்த மஞ்சள் நீர் கொண்டு போய் நிலத்தில் தெளிப்பர். இதனால் நிலம் வளம் பெறும் என்பது நம்பிகைகை. இதற்குப் பொலி நீர், பலி நீர் என்றெல்லாம் பெயர் சொல்கினறனர்.

**பொங்கல் மேடை:**

பொங்கல் படைத்த மேடை 'பொங்கல் மேடை' எனப்படும். இது தூய்மையாகப் போற்றப்பெறும். பொங்கல் நாளை யடுத்து ஒரு நல்ல நாள் பார்த்துப் பொங்கல் மேடைக்குப் படைப்பார்கள். சுண்டல், கொழுக்கட்டை முதலியன செய்து படைப்பதுண்டு. படைத்த பின்னரே பொங்கல் மேடையமைப்பைக் கலைப்பார்கள். வெட்டிய அடுப்பு வாயையும் அன்றே மூடி ஒழுங்கு செய்வார்கள்.

**பொங்கல் பானை:**

பெரும் பொங்கல் செய்வோர் வீட்டுப் பொங்கற் புதுப்பானை மிகவும் பெரியதாயிருக்கும். அடுத்த

ஆண்டுப் பொங்கல் வரையிலுமாவது இந்தப் பானை உடையாமல் போற்றிக் காக்கப்பெறும். சில வீடுகளில், ஆண்டு தோறும் சேர்ந்த பொங்கல் பானைகள் களிற்றி யானை நிரை போல் அடுக்கடுக்காகக் காட்சியளிக்கும். இவ்வாறாகப் பெரும் பொங்கல் சிறப்புறக் கொண்டாடப் பெறும்.

**தை ஊண்:**

தைத் திங்களின் தொடக்கத்தில் நடைபெறும் விழா பொங்கல் விழா எனப்படுகிறது. பொங்கல் என்னும் சொல், எல்லா வளங்களும் பொங்குதல்-பெருகுதல் என்னும் பொருளைக் குறிப்பதல்லாமல், பொங்கிச் செய்யும் உணவையும் குறிக்கிறது. பல நாடுகளில் நடைபெறும் அறுவடை விழா போன்றது எனச் சொல்லப்படும் உழவர் திருநாளாகிய பொங்கல் விழாவில் சிறப்பிடம் பெறுவது பொங்கல் உணவு விருந்தாகும். அறுவடை முடிந்து வீடுவந்து சேர்ந்த புது நெல்லரிசியைப் புதுப்பானையில் இட்டுப் பொங்கிப் 'பொங்கல் உணவு' செய்து உண்பதினாலேயே இது 'பொங்கல் விழா' என்னும் சிறப்புப் பெயர் பெற்றது என்று கூறுவதில் தவறொன்றும் இல்லை. இத் தைப் பொங்கல் உணவு தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சிறப்பாகச் செய்யப்பெற்று வருகிறது என்பதற்குச் சங்க நூலாகிய நற்றிணையில் சான்று உள்ளது.

ஒரு மலைச்சாரலில் பெண் குரங்கு ஆண் குரங்குடன் சேர்ந்து கொண்டு தினைக் கதிர்களை

நெருடிக் கயக்கிக் கன்னத்தில் அடக்கிக் குதப்பித் தின்றுகொண்டிருக்கிறதாம். இந்தக் காட்சி, தை நோன்பு கொண்டவர்கள் பொங்கல் உணவு செய்து உண்ணும் காட்சி போன்றிருக்கிறதாம். இதனை நற்றிணையில் 'கொடிச்சி காக்கும்' என்று தொடங்கும் (22-ஆம்) செய்யுளிலுள்ள,

**''நோன்பியர் தை ஊண் இருக்கையின்**
**தோன்றும் நாடன்''**

என்னும் பகுதியால் அறியலாம். இதற்கு உரையாசிரியர் வரைந்துள்ள உரைப்பகுதி வருமாறு:- ''நோன்புடையார் தைத் திங்கட் பிறப்பில் நீராடி நோன்பு முற்றியிருந்து உண்ணுதல் போலத் தோன்றா நிற்கும் மலை நாடன். தையூணிருக்கை-தைத் திங்கட் பிறபபில் நீராடி அனறு ஆக்கப்படு மாட்சிமைப் பட்ட உணவு உண்ண இருத்தல்''-

மேலே காட்டிய நற்றிணைப் பாடல் பகுதியாலும் அதன் உரைப் பகுதியாலும், தைப் பொங்கல் உணவு விருந்து விழா ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் நடைபெற்றுவரும் சிறப்பினை நன்கறியலாம்.

# மாட்டுப் பொங்கல்

**மாட்டுச் செல்வம்:**

தை இரண்டாம் நாள் மாட்டுப்பொங்கல் நடைபெறும். மாட்டின் பெயரால் ஒரு விழா நடைபெறுவது, தமிழ் மக்கள் மாட்டிற்கு அளித்திருக்கும் சிறப்பினை அறிவிக்கின்றது. அக்காலத்தில் மாடு பெரிய செல்வமாகக் கருதப்பட்டது. அதனால்தான் செல்வத்திற்கு 'மாடு' என ஒரு பெயரும் வைத்துவிட்டார்கள். அஃதாவது,- மாடு என்னும் சொல்லுக்குச் 'செல்வம்' என்னும் பொருளும் உண்டு. 'மாடு அல்ல மற்றையவை' என்பது திருககுறள். அவர் ஐந்து கோடிச் செல்வம் உடையவர் - இவர் இருபது கோடிககு உரியவர் என்று இந்தக் காலத்தில் சொல்வது போல, அந்தக் காலத்தில் பெருஞ் செல்வர்களைக் குறிப்பிட அவர் அத்தனை மாடுகள் உடையவர்-இவர் இத்தனை மாடுகள் உடையவர் என்று கூறுவது வழக்கமாம். மாடு ஒரு செல்வமாய் இருப்பது ஒரு புறம் இருக்க, அந்தக் காலத்தில் மற்ற செல்வங்களும் மாட்டின் உழைப்பால் உண்டானவையேயல்லவா? பால் பயனையும் ஈண்டு நினைவு கூரவேண்டும். எனவே, நன்றிக் கடனாக மாட்டினைத் தெய்வமாக வழிபட்டு விழா அயர்வது இன்றியமையாததன்றோ?

**உண்மைப் படையல்:**

மாட்டுப் பொங்கலன்று மாட்டினை வேலை வாங்க மாட்டார்கள். மாட்டைக் குளிப்பாட்டி மஞ்சள் பூசிப்

பொட்டிட்டு மாலை யணிவிப்பார்கள். கொம்புகளைச் சீவி அழகிய வண்ணம் தீட்டுவர். கொம்புகளில் நெற்கதிர், ஓலை முதலியவற்றாலான 'கொம்பரணை' வளையம் மாட்டுவர். கழுத்தில் சதங்கையும் மணியும் கட்டுவர். மாட்டு வண்டி வைத்திருப்பவர்கள் வண்டியையும் ஒப்பனை செய்வர். அன்று மாலை, முதல் நாள் போலவே பொங்கல் செய்து மாட்டுக்குப் படைத்து, பொங்கலை மாடு உண்ணும்படிச் செய்வர். இதுதான் உண்மையான படையல். கடவுளர்க்குச் செய்யும் மற்ற படையல்கள் எல்லாம் பொய்ப் படையல்களே. எந்தப் படையலையும் எந்தக் கடவுளும் உண்ணுவதில்லை. கடவுளின் பெயரால் மக்களே உண்கின்றனர். ஆனால், மாட்டுக்குப் படைப்பதை மாடே உண்பது ஒரு சிறப்பன்றோ!

**மாடு மிரட்டல்:**

சிலர் மாட்டின் கழுத்தில் மாவிலை-வேப்பிலை மாலையும், தேங்காய் மூளியும் கரும்புத் துண்டு மாலையும், நெற்கதிர் மாலையும், பிறவும் கட்டியிருப்பர். படையல் முடிந்ததும், கழுத்திலே கட்டியுள்ள பொருள்களுடன் மாடுகளை வீட்டிற்கு வெளியே கொண்டு வந்து தெருவில் ஓட்டிச் செல்வர். மாடுகள் வீட்டை விட்டு வெளியே வரும்போது. இளைஞர்கள் சிலர் போட்டி போட்டுக் கொண்டு, அவற்றின் கழுத்திலுள்ள தேஙகாய் மூளி, கரும்பு மாலை முதலியவற்றை அறுத்து எடுத்துக் கொள்வர். இதிலே ஒருவர்க்கொருவர் முனைந்து வீரம் காட்டுவர். சில மாடுகள் தம் கழுத்தில் உள்ளவற்றை அறுக்க விடாமல்

கொம்புகளால் முட்ட முயலும். துணிவு மிக்க இளைஞர்கள் மாட்டின் கொம்பை ஒரு கையால் பிடித்துக்கொண்டு மற்றொருகையால் கரும்பு மாலையை அறுப்பர். இதிலே அவர்களுக்குப் பெருமை மிகுதி. நான் இத்தனை மாட்டின் கழுத்திலிருந்து அறுத்தேன்-அத்தனை மாட்டின் கழுத்திலிருந்து அறுத்தேன் என்றெல்லாம் இளைஞர்கள் பெருமையடித்துக் கொள்வர்.

ஒப்புக்கு மாடுகளைச் சிறிது தொலைவு ஓடவிட்டுத் திருப்பிக்கொண்டு வருவர் சிலர். ஊர் முழுதும் சுற்ற விடுவர் சிலர். வண்டி வைத்திருப்பவர்கள் வண்டியில் மாட்டைப் பூட்டி ஊரை ஒரு முறை சுற்றி வருவர். சிறார்கள் வண்டியில் ஏறிஅடைத்துக் கொண்டுநிரம்பி வழிவர். இவ்வாறாக மாடுகள் ஊர்வலம் வரும்பொழுது 'பொங்கலோ பொங்கல்,' 'மாட்டுப் பொங்கலோ பொங்கல்' 'பொங்கல் சட்டி-பொங்கல் பானை-பொங்கலோ பொங்கல்' என்று சிறார்கள் விண்ணதிர முழங்குவர்.

இவ்வாறு மாடுகளைத் தெருவிலே ஓட விட்டுக் கொண்டு வருவதற்கு 'மாடு மிரட்டல்' என்று பெயர் வழங்கப்படுகிறது. சில இடங்களில் கொட்டு முழக்குடன் நடைபெறுவதும் உண்டு. அன்றைய புதிய சூழ்நிலையால் மாடுகள் மிரண்டுவிடு கின்றனவாதலின், இதற்கு 'மாடு மிரட்டல்' என்னும் பெயர் வழங்கப்பட்டது போலும்!

**மந்தை வெளி விழா:**

அவரவர்கள் தத்தம் வீடுகளிலிருந்து தனித்தனியே ஓட்டிச் சென்று மாடு மிரட்டுவது சில இடங்களில் நடை பெறுகிறது. வேறு சில ஊர்களில் அனைவரும் ஒட்டு மொத்தமாக ஓட்டிச் சென்று பொதுவாக மாடு மிரட்டுவது மரபாயுள்ளது. சிற்றூர்களில் மாலையில் கோயிலிலிருந்து இறையுருவம் அணி செய்யப்பெற்று ஊர்வலமாகத் தெருவாரியாக வரும். மாடு உடையவர்கள் மாடுகளை ஒப்பனை செய்து ஆயத்தமாயிருப்பார்கள். இறையுருவம் தம்இல்லத்திற்கு எதிரே வந்ததும் தம் மாடுகளை வெளிக்கொணர்ந்து ஊர்வலத்தோடு சேர்ப்பர். இப்படியாக எல்லார் வீட்டுமாடுகளும் முறையே ஊர்வலத்தில் சேர்க்கப் பெற்று இறுதியில் ஊர்ப்பொது மந்தை வெளியை யடையும். ஒரு தெய்வத் திருவிழா போலவே படையல் நடக்கும். மஞ்சள் நீர் தெளித்தல் முதலிய மங்கல மகிழ்ச்சி நிகழ்ச்சிகளும் நடைபெறும். பின்னர் அவரவரும் தத்தம் மாடுகளைத் தத்தம் இல்லத்திறகுக் கொண்டுவந்து சேர்ப்பர். இவ்வாறு நடைபெறுகிற மாடு மிரட்டல், ஒரு சிறப்பு விழாவாக ஊரார்க்கு மகிழ்ச்சியளிப்பதோடு, ஊராரின் ஒற்றுமை யுணர்வையும் புலப்படுத்துகின்றதன்றோ?

**மஞ்சு விரட்டு:**

சில இடங்களில் - குறிப்பாகத் தென் தமிழ் நாட்டில் ‘மஞ்சு விரட்டு’ என்னும் விழா நடைபெறும். இது ‘சல்லிக்கட்டு’ எனவும் பெயர் வழங்கப்பெறும்.

இந்த விழாவில் ஊருக்கு ஊர் சிறுசிறு வேற்றுமை யிருப்பினும், பொதுவான ஒரு முறையைக் காண்பாம்: ஊர்ப்பொது வெளியில், கொம்பு கூர் சீவிய முரட்டுக் காளைகளை ஒப்பனைசெய்து கொட்டு முழக்கத்துடன் விரட்டி விடுவர். காளைகள் மிரண்டு பயந்தோடும். துணிவுமிக்க இளைஞர்கள் காளைகளின் கொம்புகளைப் பிடித்து மடக்கி ஒடுக்கி அடக்கி வெற்றி பெறுவர். வென்றவர்க்குத் தக்க பரிசு உண்டு. வீரமிக்க இச் செயல் இன்று குறைந்து விட்டது. மஞ்சு (மைந்து) என்றால் வலிமை. வீரமிக்க மைந்தர்களின் வலிமையை வெளிப்படுத்தச் செய்யும் விழாவாதலின் இது 'மஞ்சு விரட்டு' எனப்படுகிறது போலும்! இதற்கு வேறு பொருளும் இருக்கலாம். இது மஞ்சி விரட்டு, மஞ்சி வெருட்டு என்றும் வழங்கப்படுகிறது. மாடு கவர்தல் என்னும் பொருளில் 'மஞ்சி வெருட்டு' என்பது சில இடங்களில் வழங்கப்படுகிறது.

ஏறு தழுவுதல்:

கன்னியொருத்தியை மணக்க விரும்பும் காளை யொருவன் ஏதேனும் ஒரு மறச் செயல் செய்து காட்ட வேண்டும் என்னும் விதி அந்த நாளில் இருந்ததாகத் தெரிகிதது. புலியைக் கொன்று அதன் பல்லைக்கொண்டு வந்து தாலியாகக் கட்ட வேண்டும் என்னும் கட்டாயம் ஒரு பகுதியில் இருந்தமையைப் 'புலிப் பல் தாலி' என்னும் வழக்காற்றால் அறிகிறோம். இந்தக் காலத்தில் புலிப்பல் கொண்டுவர வேண்டு மென்றால், நரிக்குறவனிடமிருந்தோ, கழைக்கூத்தாடி

யிடமிருந்தோ ஏதேனும் ஒன்றை வாங்கிக் கொண்டு வந்துவிடுவர்.

ஒரு கதை சொல்வதுண்டு. பெண்பார்க்கச் செல்லும் மாப்பிள்ளை வீட்டார்மாப்பிள்ளையயும் பெண் வீட்டிற்கு அழைத்துச் செல்வார்களாம். பெண் வீட்டில் உணவு படைக்கும்போது, தொட்டுக்கொள்ள மிளகாய்ப் பொடி வைப்பார்களாம். மிளகாய்ப் பொடிக்கு நல்லெண்ணெய் விட வேண்டுமே! மாப்பிள்ளையின் இலையில் எண்ணெய்க்குப் பதிலாக எள் ஒரு பிடி வைப்பார்களாம்.மாப்பிள்ளை எள்ளைப் பிழிந்து எண்ணெய் வரவழைத்துக் கொள்ள வேண்டுமாம். அவ்வளவு ஆற்றல் மிக்க இளைஞனுக்கே பெண் கிடைக்குமாம். இந்தக் காலத்தில் அவ்வாறு எள் வைப்பின், 'இதோ வருகிறேன் என்று மாப்பிள்ளை எழுந்து கம்பி நீட்டி விடுவார். இந்தக் காலத்தில் எண்ணெய் விட்டாலும் குழைப்பதற்கு முடியாது என்பதற்காகத்தான், எண்ணெய் விட்டுக் குழைத்த மிளகாய்ப் பொடியாய் வைக்கின்றனர் போலும்!

இப்படியாக மாப்பிள்ளைக்குச் சில 'தேர்வு' முறைகள் உண்டு. இவற்றுள் ஏறு தழுவுதலும் ஒன்றாகும். அஃதாவது,-கொம்பு கூர்சீவி விரட்டி விடப்பட்ட முரட்டுக் காளையை எதிர்த்துத் தழுவிக் கட்டிப் பிடித்து அடக்குபவனுக்கே குறிப்பிட்ட பெண் மணமுடித்து வைக்கப்படுவாள். இந்நிகழ்ச்சி ஏறு தழுவுதல் எனப்படும். ஏறு என்றால் காளை. அந்த நாளில் முல்லை நிலத்து ஆயர்களிடம் இந்த வழக்கம்

மிகுதியாயிருந்தது. இதனைத் தொல்காப்பிய - நச்சினார்க்கினியர் உரைப் பகுதியாலும் கலித்தொகைப் பாடலொன்றாலும் விளக்கமாக அறியலாம். தொல்காப்பியம் - அகத்திணையியலிலுள்ள 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்' என்னும் (53-ஆம்) நூற்பாவின் கீழ் நச்சினார்க்கினியர் வரைந்துள்ள,

"...முல்லை நிலத்து ஆயரும் ஆய்ச்சியரும் கந்தருவமாகிய களவொழுக்கம் ஒழுகி வரையுங் காலத்து அந்நிலத்தியல்பு பற்றி ஏறு தழுவி வரைந்து கொள்வரெனப் புலனெறி வழக்காகச் செய்தல் இக்கலிக்கு உரித்தென்று கோடலும் பாடலுள் அமையாதன என்றதனாற் கொள்க. 'மலிதிரையூர்ந்து' என்னும் முல்லைக் கலியுள் 'ஆங்கணயர்வர் தழூஉ' என்னுந் துணையும் ஏறு தழுவியவாற்றைத் தோழி தலைவிக்குக் காட்டிக் கூறி, 'பாடுகம் வம்மின்' எனபதனால் தலைவனைப் பாடுகம் வாவென்றாட்கு அவளும்'நெற்றிச் சிவலை... மகள்.' 'ஒருக்குநாமாடு .. மகன்' என்பனவற்றான் அலரச்சம் நீங்கினவாறும் அவன்றான் வருத்தியவாறுங் கூறிப் பாடிய பின்னர், தோழி 'கோளரிதாக... உச்சி மிதித்து' என எமர் கொடை நேர்ந்தார் எனக் கூறியவாறுங் காண்க."

என்னும் உரைப்பகுதியில் ஏறு தழுவுதலும் அதன் நோக்கமும் நான்கு விளக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் கலித்தொகைக்கும் உரையெழுதியுள்ளார் ஆதலின்,'மலிதிரையூர்ந்து' என்னும் கலித்தொகைப் (முல்லைக்கலி-4)

பாடலை எடுத்துக் காட்டி நன்கு தெளிவு செய்துள்ளர். எண்பது அடிகள் கொண்ட இந்தக் கலித் தொகைப் பாடலில் முதல் அறுபத்திரண்டு அடிகளில் 'ஏறு தழுவுதல்' என்னும் நிகழ்ச்சி மிகவும் விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் படம் பிடித்துக்காட்டப் பட்டுள்ளது. இந்த 'ஏறு தழுவுதல்' என்னும் நிகழ்ச்சிக்கும் மாட்டும் பொங்கலன்று நடைபெறும் 'மஞ்சு விரட்டு' நிகழ்ச்சிக்கும் நெருங்கிய தொடர்புள்ளமையை உய்த்துணரலாம்.

**இரவுப் படையல்;**

மாட்டுப் படையல், மாடு மிரட்டுதல், மஞ்சு விரட்டு ஆகியவை மாலையில் நடைபெறும். இது போக, சில குடும்பங்களில் இரவில் தனிப்படையல் நடைபெறும். போகியன்று இரவு கடவுள் படையல் செய்தது போலவே மாட்டுப் பொங்கலன்று இரவும் செய்வர். போகியன்றுபோலவே இன்றும் 'காத்தவராயன் படையலும் இடம் பெறும். பொதுவாக மாட்டுப் பொங்கல் நாளில் இரவுப் படையல் சில பகுதிகளில் உண்டு-சில பகுதிகளில் இல்லை; ஓர் ஊரிலேயே சில குடும்பங்களில் உண்டு-சில குடும்பங்களில் இல்லை. படைக்கும் குடும்பங்களிடையும் படையல் முறையில் வேறுபாடுகள் இருப்பதுண்டு. சிலர் இந்தப் படையலைப் பகலிலேயே நடத்துவர். மாடு வைத்திருப்பவர்கள் மட்டும் மாட்டுப் பொங்கல் நடத்து வதும் மற்றவர் நடத்தாதிருப்பதும் சில இடங்களில் உண்டு. மாடு வைத்திராவிடினும் சிலர் மாட்டுப் பொங்கலன்று சிறப்புப் படையல் செய்வர்.

**பூவாடைக் காரி:**

மாட்டுப் பொங்கலன்று சில ஊர்களில் சில குடும்பங்களில் 'பூவாடைக் காரிப் படையல்' நடைபெறும். பூவாடைக்காரி என்பது, பூச்சூடிக் கொள்ளும் கட்டு கழுத்தி (சுமங்கலி) இறந்து தெய்வநிலை பெற்றதைக் குறிக்கும், ஒரு குடும்பத்தில் பெண்ணொருத்தி கட்டுகழுத்தியாய் (சுமங்கலியாய்) இறந்து விடின், அவள் தெய்வமாக மதிக்கப்பெறுகிறாள்; ஆண்டுதோறும் அவளுக்கு மாட்டுப் பொங்கலன்று படையல் நடைபெறும். இதுதான் 'பூவாடைக்காரிப் படையல்' ஆகும். இது சில குடும்பங்களில் மட்டுமே நடக்கும். சர்க்கரைப் பொங்கல், வடை பாயசம் முதலியன செய்தும், புதிய புடவை, எலுமிச்சம் பழம் முதலியன வைத்தும் படைப்பர். படைத்த எலுமிச்சம் பழத்தை அடுத்த படையல்வரையும் போற்றி வைத்திருப்பர். படைத்த புடவையைக் கட்டு கழுத்தியாய் (சுமங்கலியாய்) இருப்பவர் உடுத்துக் கொள்வர். குடும்பத்தில் உள்ள அனைவரையும் நல்லபடியாய்க் காக்க வேண்டுமெனப் பூவாடைக்காரியை வேண்டிக் கொள்வர்.

**புத்தாடை:**

சில பகுதிகளில் தீபாவளியைப் போலப் புத்தாடை உடுத்துவதில்லை-சில பகுதிகளில் உடுத்துவதுண்டு. புத்தாடை உடுத்தும் பகுதிகளில், சிலர் பெரும் பொங்கலன்று ஆடைகளை வைத்துப் படைத்து உடுத்துவர்;

பலர் மாட்டுப் பொங்கல் அன்றைக்கே புத்தாடைகளை வைத்துப் படைத்து உடுத்துவர். உணவு கொண்டதும், குடும்பத் தலைவர்-குடும்பத்தில் பெரியவர், மற்றவர்க்கு ஆடை அளிப்பார். மற்றவர் அவர் காலில் விழுந்து வணங்கி ஆடையைப் பெற்று உடுத்துக் கொள்வர். சில குடும்பங்களில் படைத்ததும் புத்தாடை உடுத்திய பின்னரே உணவு கொள்வர்.

இவ்வாறாக மாட்டுப் பொங்கல் விழா மிகவும் சிறப்புடன் நடைபெறும்.

# காணும் பொங்கல்

**பால் பொங்கிற்றா?**

தை மூன்றாம் நாள் காணும்பொங்கல் விழா நடைபெறும். சோதிட முறையில் இது 'கரிநாள்' என வழங்கப்பெறும், காணும் பொங்கலன்று ஒருவரையொருவர் கண்டு'பால் பொங்கிற்றா'என நலங்கேட்டு அளவளாவுவர். நண்பர்களும் உறவினர்களும் ஒருவர் வீட்டிற்கு ஒருவர் செல்வர்;வந்தவரைவீட்டுக்காரர்வரவேற்றுப் போற்றுவர்; தாம்பூலம் அளிப்பர்; சிற்றுண்டி விருந்தோ பேருண்டி விருந்தோ செய்வதும் உண்டு. வந்தவர் வயதில் சிறியவராயின் பணமும் கொடுப்பர். சிறியவர்கள் பெரியவர் காலில் விழுந்து வணங்கித் தாம்பூலத்துடன் பணமும் பெறுவர். பெரியோரின் வாழ்த்தும் வந்தவரைக் குளிரச் செய்யும்.

காணும் பொங்கல் வடதமிழ் நாட்டிலே மிகுதியாகக் காணப்படுகிறது, எனவே, இப்பகுதியில் நடைபெறும் முறைகளையொட்டிக் காணும் பொங்கல் ஈண்டு விவரிக்கப்படும்.

**வரிசை வழங்குதல்:**

காணும் பொங்கலன்று நண்பர்களும் உறவினர்களும் போவதன்றி, தொழிலாளர்களும் கலைஞர்களும் ஏழை யெளியவர்களும் இரவலர்களும் வந்து வரிசை பெற்றுச் செல்வது மிகுதியாய் நடைபெறும். குடும்பத்

தாரோடு தொடர்புடைய பல்வேறுவகைத் தொழிலாளர்களும் வந்து புத்தாடையும் பணமும் பல்வகைப் பொருள்களும் பெற்றுச் செல்வர். பொங்கலன்று வீடுதோறும் போந்து மங்கல இன்னிசை வழங்கிய மேளக்காரர் முதல் பல்வேறு கலைஞர்கள் வந்து வந்து பரிசு பெற்றுச் செல்வர்.

மார்கழித் திங்கள் பிறந்ததிலிருந்து பொங்கல் நாள் வரை நாடோறும் நள்ளிரவு தொடங்கி வைகறைப் பொழுதுவரையும் கலைஞர்கள் சிலர் தம் கலைச் செல்வத்தை மக்களுக்கு வழங்கி வருவர். சிலர் கொம்பு ஊதுவர்; சிலர் தாரை தப்பட்டிகளின் இசை வழங்குவர்; சிலர் சங்கு ஊதிச் சேகண்டி அடித்துச் செல்வர்; சிலர் இன்னிசைப் பாடல்கள் இசைப்பர். குடுகுடுப்பைக் காரர்கள் தம் குடுகுடுப்பையை ஒலித்துக்கொண்டே, நல் வாழ்த்துக்களை வரையறை யின்றி வானத்துக்கும் மண்ணுக்குமாக வாரி வாரி வழங்கிச் செல்வர். இவ்வாறாக இன்னும் சில உண்டு. இவ்வளவும் மார்கழி தொடங்கி மாட்டுப் பொங்கல் வரை பின்னிரவில் நடைபெறும். இத்தனை தரப்பினரும் மாட்டுப் பொங்கல் கழிந்த மறுநாள் காணும் பொங்கலன்று வீடுதோறும் போந்து அவரவர்க்கேற்பப் பரிசுகளும் வரிசைகளும் பெற்று மகிழ்ந்து செல்வர்.

ஒரு திங்கள் காலம் ஓயாதுழைத்த இந்தக் கலைஞர்கள் ஒரு புறம் இருக்க, காணும் பொங்கலன்று புதிதாய்ச் சில கலைஞர்கள் வந்து பரிசு பெற்றுச் செல்வதும் உண்டு. அவர்களுள், கும்மியடிக்கும் ஏழைப் பெண்கள் குழுவினர் ஒரு சாரார்; பொய்க்காலிக்குதிரை

யாட்டக்காரர்கள் ஒரு சாரார்; 'புரும் புரும்' மாட்டுக் காரர் ஒரு சாரார்; 'இராசா தேசிங்கு'பாடல் முழக்கக் காரர் ஒரு சாரார்; இப்படி இன்னும்-இன்னும் பலர் உளர். அனைவரும் பரிசு பெற்றுச் செல்வர்.

இவர்களல்லாத ஏழை யெளியவர்களும் இரவலர் களும் வரிசை வரிசையாக வந்து ஏதேனும் வாங்கிச் செல்வர். காணும் பொங்கலைக் கலைஞர்க்கும் தொழிலாளர்க்கும் நன்றி செலுத்தும் விழாவாகக் கொள்ளலாம்.

இந்தப் பரிசளிப்பு, தை மூன்றாம் நாளாகிய காணும் பொங்கல் நாளன்று வடதமிழ் நாட்டில் நடைபெறுகிறது. இவ்வாறு மூன்றாம் நாளில் நடைபெறாத ஊர்களில் தை முதல் நாள் அல்லது இரண்டாம் நாளிலேயே பரிசளிப்பு நடைபெறும். பொங்கலைத் தொடர்ந்து பல நாள் வரையும் பரிசளிப்பு நடைபெறுவதும் உண்டு.

**கன்னிப் பொங்கல்:**

தை மூன்றாம் நாள் சில இடங்களில் 'கன்னிப் பொங்கல்' எனப்படுகிறது. மணமாகாத கன்னியர் நோன்பிருந்து பொங்கல் செய்து படைத்து உண்பது கன்னிப் பொங்கல் ஆகும். இது தை மூன்றாம் நாள் நடைபெறும். இதனைக் 'கனுப் பொங்கல்' என்பதும் உண்டு. கனுப் பொங்கல் என்பது, கன்னிப் பொங்கல் என்பதன் மரூஉப் பெயராக இருக்கலாம். கன்னியர்கள் பொங்கல் படைத்துத் தாம் உண்பதற்கு முன், தம்உடன் பிறந்தாரும் உறவினரும் நலமாயிருக்கும்படி

வேண்டிச் சிறிதளவு உணவைப் பிடியாய்ப் பிடித்துக் காகத்திற்கு இடுவார்களாம். இந்தப் பிடி யுணவு 'கன்னிப பிடி' என்றும் 'கனுப் பிடி' என்றும் வழங்கப்படுகிறது. தைத் திங்களில் கன்னியர் கொள்ளும் நோன்பைப் பற்றிப் பின்னர் வேறு தலைப்பில் விரிவாகக் காணலாம்.

**கன்றுப் பொங்கல்:**

சில இடங்களில் தை இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல் நடைபெறும். மறுநாள்-தை மூன்றாம் நாள் கன்றுப் பொங்கல் நடைபெறும். பெரிய மாட்டைச் சிறப்பித்தது போலவே சிறிய கன்றையும் போற்றிப் பேண வேண்டும் என்னும் நோக்குடன், தனியே பொங்கல் செய்து படைத்துக் கன்றுக்கு ஊட்டுவர். இதனால் இது 'கன்றுப் பொங்கல்' என வழங்கப்படுகிறது. இன்று கன்று நன்றாக இருந்தால் தானே இரண்டாண்டு சென்றதும் மாட்டுப் பொங்கல் நடத்த முடியும்? எனவே, கன்றுக்குத் தனி சிறப்பளிப்பது பாராட்டத்தக்கதாகும். சில குடும்பங் களில் தைத் திங்களில் தலை ஞாயிற்றுக் கிழமையன்று கனறுப் பொங்கல் நடைபெறும்.

**விழாவும் விளையாட்டும்:**

தை மூன்றாம் நாளன்று பல ஊர்க் கோயில்களில் விழா நடைபெறும். கடவுள் திருமேனி ஊர்வலம் வரும். இஃதன்றிப் பல கலை விழாக்கள் நடைபெறுவதும் உண்டு. கரகம், சிலம்பம், கும்மி, கோலாட்டம், பொய்ககாலிக குதிரை, கூத்து, நாடகம் முதலியன ஊராரால் நடத்தப் பெறும். இந்தக் காலத்தினர்

இவற்றையெல்லாம் மறந்து துறந்து, திரைப்படக் கொட்டகை வாயிலில் நெடுநீள் வரிசையில் (கியூவில்) கால் கடுக்கக் காத்து நின்று கொண்டிருக்கின்றனர். சிற்றூர்க் (கிராமியக்) கலைநிகழ்ச்சிகள் எல்லாம் வரலாறாகவும் இல்லாமல் இருந்த சுவடும் மறைந்து புதைபொருள் ஆராய்ச்சியாகப் போய் விட்ட இரங்கத்தக்க நிலைதான் இன்று பல இடங்களில் உள்ளது.

காணும் பொங்கலன்று யாரும் வேலை செய்ய மாட்டார்கள். பெரியவர்கள் உட்பட மக்களிடையே பல் வேறுவகை விளையாட்டுக்கள் இடம் பெற்றிருக்கும். ஆடவரும் மகளிரும் அழகுற ஆடை யணிகலன்கள் அணிந்துகொண்டு இன்பமாகக் காட்சி யளிப்பர். மேலே குடம் கட்டி அடித்தல், வழுக்குக் கம்பம் ஏறுதல், பந்தயங்கள் ஆடுதல், குடை ராட்டினம் சுற்றுதல், கோலி குண்டு விளையாடல் முதலிய பலவகை ஆட்டங்கள் நடைபெறும். சிறார் களுக்குப் பசியே தெரியாது. அனைவரும் ஆட்ட பாட்டங்களில் ஈடுபட்டு அகமகிழ்வுறுவர்.

இந்த நாளில் சிறார்கள் உறவினர் ஊருக்குச் செல்வதுண்டு. புதுமண மக்கள் பொங்கல் விழாவை மாப்பிள்ளை வீட்டில் கொண்டாடிவிட்டு, பெண் வீட்டில் பொங்கல் மருவுண்ணுவதற்காகப் புறப்பட்டுச் செல்வதும் இந்தக் காணும் பொங்கல் நாளில்தான். பொதுவில், காணும் பொங்கல் விழா களிப்பு மிக்க ஒரு விழாவாகும். சிறப்பாக, பாட்டாளி மக்களுக்குப் பரிசளித்துப் பாராட்டு செய்யும் விழாவாகும்.

# தொடர் விழாக்கள்

தைப் பொங்கலைத் தொடர்ந்தாற்போல மேலும் சில விழாக்களும் சில சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெறுவதுண்டு. இவை பொங்கலின் சிறபபினையும் தைத்திங்களின் மாண்பினையும் அறிவிப்பனவாகும்.

**தலை ஞாயிறு:**

பொங்கல் முடிந்ததும் வருகின்ற முதல் ஞாயிற்றுககிழமை 'தலை ஞாயிறு' எனப்படும். சில பகுதிகளில் தலை ஞாயிற்றுக்கிழமையில் பொங்கல் நாளன்று செய்தது போலவே திறந்த வெளியில் சர்க்கரைப பொங்கல் செய்து கதிரவனுக்குப் படைத்து உண்டு மகிழ்வர். இந்த நிகழ்ச்சி, பொங்கல் விழா ஒருவகை ஞாயிறு வழிபாடாகும் என்பதை உணர்த்துகிறதன்றே? பெரும் பொங்கல் ஞாயிற்றுக்கிழமையில் வந்தாலுங்கூட அஃதாவது, தை முதல் நாள் ஞாயிறறுக்கிழமையாயிருந்தாலுங்கூட, அடுத்த ஞாயிற்றைத் 'தலை ஞாயிறு' எனக் கொண்டாடுவது வழககம்.

பொங்கலன்றுதான் திறந்த வெளியில் கதிரவனுககுப படைத்தாயிற்றே - பின்னர்த் தலை ஞாயிறன்று வேறு ஏன் படைக்க வேண்டும்?-என்ற வினா எழலாம். ஆயிரம் ரூபாய் அளிப்பவர்கள்

மேலும் ஒரு ரூபாய் சேர்த்து ஆயிரத்தொரு ரூபாயாக அளிப்பர். அதாவது, ஆயிரத்தோடு அறுபட்டு விடாமல் மேலும் தொடர்ச்சியிருக்கவேண்டும் தொடர்ந்த வளர்ச்சியிருக்கவேண்டும் என்பது இதன் குறிக்கோள். இது போலவே, ஞாயிறு வழிபாடு தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதற்காகத் தலை ஞாயிறு கொண்டாடப்பெறுகிறது. தலை ஞாயிறன்று சில குடும்பங்களில் கன்றுப் பொங்கல் விழா நடத்துவர். இன்னும் சில சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுவதும் உண்டு.

### தலை வெள்ளி:

தலை ஞாயிறைப் போலவே, தைத் திங்களில் முதலில் வரும் வெள்ளிக்கிழமை 'தலை வெள்ளி' எனப் படும். இந்தக் கிழமைகளில் சில குடும்பங்களில் 'அம்மன் வழிபாடு' நடைபெறும். காலையில் கூழ் படைப்பார்கள்; பின்னர் நண்பகலிலோ - இரவிலோ கொழுக் கட்டை முதலியவற்றுடன் சிறப்புணவு செய்து படைப்பர். வெளியூர்களில் வாழ்க்கைப் பட்டிருக்கும் புதுமணப் பெண்கள் இந்தத் தலை வெள்ளிப் படையலுக்குத் தாய் வீட்டிற்கு அழைத்து வரப்படுவதுண்டு.

### மயிலார் படையல்:

சில பகுதிகளில் சில குடும்பங்களில் தைத் திங்கள் எட்டாம் நாள் 'மயிலார் படைத்தல்' என்னும் சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும். இ∴து கன்னியர் கன்னிமார் களுக்குச் செய்யும் படையல் என்று சொல்லப்படுகிறது.

கன்னிமார் என்பவர் தெய்வ இனத்தினராம். இவர்கள் எழுவர் (ஏழு பேர்) எனச் சொல்லப்படுகின்றனர். 'கன்னிமார் எழுவர்' என்பது உலக வழக்கு. இவர் களுக்குள் இளையவள் - முதியவள் என்றெல்லாம் உண்டு. எழுவருள் இளையவள், 'அறுவர்க்கு இளைய நங்கை' எனச் சிலப்பதிகாரம்-வழக்குரை காதையில் குறிப்பிடப்பட்டிருப்பது காண்க. எழுவருள் இளையவள் ஓரளவுவிதந்து கூறப்பட்டிருக்கிறாள். உலக வழக்கிலும் இவ்வாறு கூறப்படுகிறாள். 'இளையாள் கழித்த ஏழாம் நாள் மயிலார் படைத்தல்' என்று சிலரால் சொல்லப்படு கிறது. அங்ஙனமெனில்,-கன்னிப் பெண்கள், தை முதல் நாள் இளையாளுக்கு நோன்பிருப்பர் என்பதும், இப்படி முறையே ஒரு கன்னித் தெய்வத்திற்கு ஒரு நாள் வீதமாக ஏழு நாளைக்கும் ஏழு கன்னியர்க்கும் நோன்பு கிடப்பர் என்பதும், எட்டாம் நாள் மொத்தமாக எல்லோருக்கும் சேர்த்துப் படையல் செய்வர் என்பதும், இதற்குத்தான் 'மயிலார் படைத்தல்' என்று பெயர் என்பதும் புலப்படும். சுருங்கக் கூறின், இது கன்னியர் நோன்பு எனபது தெளிவு.

இந்த நிகழ்ச்சி தமிழகத்தில் சில இடங்களிலேயே நடைபெறுவதாகத் தெரிகிறது. மற்ற இடத்தினர்க்கு இது முற்றிலும் புதுமையாகத் தோன்றும். இது கன்னியர் நோன்பு எனப்படினும், திருமணமான மகளிரும் இதில் கலந்து கொள்வதுண்டு. இவர்கள் மணமாவதற்கு முன் கன்னியராயிருந்தபோது இந்த நோன்பு நோற்றிருந்தனராதலின், மணமான பின்னும் இதனை விடாது தொடர்கின்றனர் போலும்!

மயிலார் படைக்கும் நாளன்று காலையிலிருந்தே மகளிர் உண்ணாது நோன்பு கிடப்பர். மாலையில் ஞாயிறு மறையும் வேளையில் படையல் செய்து உண்பர். மாலையில் படைக்கும்போது, ஆண் குழந்தை உட்பட-ஆண்கள் எவரும் வீட்டிற்குள் இருக்கக் கூடாது. ஆண்கள் அனைவரையும் வெளியே தள்ளித் தெருக் கதவைக் தாளிட்டு விட்டே பெண்கள் படைப்பர். இலை போடாமல் தரையைத் தூய்மை செய்து தரை மேலேயே உணவு பரிமாறிப் படைப்பார்களாம். உண்ணுவதும் இலையில்லாமல் தரையின் மேலேதான் நடை பெறுமாம். அன்றைககுப பெண்களே முதலில் உண்பர். அவர்கள் உண்டு முடித்த பின்னரே தெருக் கதவைக் திறந்து, ஆடவர்களை உள்ளே விட்டு உணவு படைபபர், மதுரையில் அங்கயற்கண்ணி அம்மைக்கே முதல் பூசனை நடைபெறுவது போல, மயிலார் படையலன்றைக்குப் பெண்களுக்கே முதல் விருந்து நடைபெறும். மற்ற நாட்களிலும் சில வீடுகளில் சில பெண்கள் முதலில் உண்டுவிடுகிறார்களே என்று இங்கு யாரும் வினவ வேண்டா! ஆடவரும் மகளிரும் சரிநிகர் சமன்!

மயிலார் படையல் செய்யும்போது மயில்தோகை வைத்துப் படைக்கப்படுகிறது. நீளத் தோகை கிடைககா விடினும் சிறு இறகாயினும் வைக்கப பெறுகிறது. மயில் இறகிலிருந்து அரையங்குலச் சிறு துணுக்கையாவது சோற்றுடன் வைத்துப்

பெண்கள் விழுங்குவா என்று சொல்லப்படுகிறது. மயில் தோகை வைத்துப் படைப்பதனால்தான் மயிலார் படைத்தல் என்று பெயர் வழங்கப் படுகிறதா? மயிலாருக்குப் படைப்பதனால் மயில் தோகை வைக்கப் படுகிறதா?

உலகியலில் மயில்தோகை, சமயத் தொடர்பு உடையவர்களாகக் கருதப்படும் பலர் கைகளில் இடம் பெற்றுத் தெய்வத் தொடர்பு உடையதுபோல் தோன்றுவதைக் காண்கிறோம். இந்த முறையில் மயிலார் வழிபாட்டில் மயில்தோகை இடம்பெற்றிருக்கலாம் என்பது ஒருபுறம் இருக்க,-மயிலார் என்னும் சொல்லை நோக்கும்போது, மயிலை ஊர்தியாகக் கொண்ட முருகனது நினைவும் வருகிறது. எனவே, மயிலார் படையல் என்பது, கன்னியர்கள் முருகனுக்கு நோன்பிருந்து செய்யும் படையல் என்று பொருள் கொள்ளவும் இடம் தருகிறது, சிலர் முருகனுக்கு நோன்பு கிடப்பதும் நடைமுறையில் காணப்படுகிறது. இந்தக் காலத்தில் இது குறைந்து வருகிறது.

சிறு வீட்டுப் பொங்கல்:

திருநெல்வேலி மாவட்டம் போன்ற சில பகுதிகளில் சிறுவீட்டுப் பொங்கல் என்னும் சிறப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. சிறுவர்களுக்குத் தனி மகிழ்ச்சியூட்டுவதற்காகச் சிறுவர்கள் பெயரால் பெரியவர்கள் செய்யும் பொங்கல் படையல்தான் இது. பொங்கல் செய்து, கோலத்தாலேயே வீடமைத்து அதில் பொங்கலை வைத்துப் படைத்து உண்டு மகிழ்வது

இவ்விழாவின் சிறப்புக் கூறு எனச் சொல்லப் படுகிறது.

**கூட்டாஞ் சோறு:**

பெரியவர்கள் பொங்கல் செய்து படைத்ததைப் பார்த்த சிறுவர். சிறுமியர் தாமும் தத்தம் வீடுகளிலிருந்து உணவுப் பண்டங்கள் கேட்டு வாங்கி வந்து கூட்டாகச் சேர்ந்து சிறு சோறு ஆக்கிப் படைத்து உண்டு ஆடிப் பாடி மகிழ்வது சில ஊர்களில் நடைபெறுகிறது. இதற்குக் கூட்டாஞ் சோறு ஆக்குதல்' என்று பெயராம். பெரியவர்களைப் பின்பற்றி நடத்தல் (Imitation) இளையோரின் இயற்கையன்றோ?

**துறை குப்பிடுதல்:**

சலவைத் தொழில் புரியும் ஏகாலியரிடையே மயிலார் படைக்கும் நிகழ்ச்சி சில இடங்களில் நடைபெறுகிறது. இதற்குத் 'துறை கும்பிடுதல்' என்னும் பெயரும் உண்டு. இத்தொழிலாளர்கள் பொங்கல் முடிந்ததும் வேலை செய்ய மாட்டார்கள்; சில நாள் ஓய்வு எடுத்துக்கொள்வர். பிறகு நல்ல நாள் பார்த்து, அன்றைக்கு, வழக்கமாகத் துணி வெளுக்கும் நீர்த் துறைக்குச் சென்று பொங்கல் செய்து படையல் போடுவர். இதைச் செய்த பின்னரே வழக்கமான தொழிலைத் தொடங்குவர். நீர்த்துறையில் செய்யும் வழிபாடாதலின், இது 'துறை கும்பிடுதல்' எனப் படுகிறது. இதனையே 'மயிலார் கும்பிடுதல்' எனக் கூறும் மரபும் உண்டு. பெண்கள் வீட்டிலே செய்யும் மயிலார் படையலுக்கும், சலவைத் தொழிலாளர் நீர்த்

துறையில் செய்யும் மயிலார் படையலுக்கும் இடையே உள்ள ஒற்றுமை-வேற்றுமைகள் எண்ணத்தக்கன.

**நாள் கொள்ளுதல்:**

சலவைத் தொழிலாளர்கள் நல்ல நாள் பார்த்து வேலை தொடங்குவது போலவே மற்ற தொழிலாளர் களும் செய்வது மரபு. இதற்கு 'நாள் கொள்ளுதல்' என்று பெயராம். நல்ல நாள் பார்த்து வேலையைத் தொடங்குவது நாள் கொள்ளுதலாகும். நெசவாளர்கள் உள்ள சிற்றூர்களில் மாட்டுப் பொங்கலுக்கு மறு நாளிலிருந்து யாரும் வேலை செய்யமாட்டார்கள். ஊர்க்கட்டுப்பாடு இருந்த அந்த நாளில் யாரும் வேலை செய்யவுங் கூடாது. ஒரு நல்ல நாள் பார்த்து, ஊரார் அனைவரும் ஒட்டு மொத்தமாகக் கோயிலில் பொது வழிபாடு செய்த பின்னரே வேலை தொடங்குவர். இந்த மரபு இன்னும் சில இடங்களில் இருக்கிறது. பொருள்களை நிரம்ப உண்டாக்க வேண்டும் என்னும் இந்தக் காலத்தில் இஃது ஒத்து வராதாயினும், தொழிலாளர்க்கும் ஒரு சிறிது ஓய்வு வேண்டியதுதானே!

**ஆற்றுத் திருவிழா:**

சில பகுதிகளில் தை ஐந்தாம் நாள் ஆற்றுத் திருவிழா நடைபெறும். வேறு சில இடங்களில் முன் பின்னாக வேறு நாளில் நடப்பதும் உண்டு. தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகராகிய கடலூரில் ஐந்தாம் நாள் நடைபெறும் ஆற்றுத் திருவிழா, பொங்கலோடு தொடர்புடைய ஒரு பெரு விழாவாகப் போற்றப்படுகிறது. அப்பகுதி மக்கள்,

ஐந்தாம் நாள் ஆற்றுத் திருவிழா முடிந்த பின்னரே பொங்கல் விழா ஓரளவு நிறைவு பெற்றதாகக் கருதுகின்றனர். அவர்கள் ஆற்றுத் திருவிழாவைப் பொங்கல் விழாவின் ஓர் உறுப்பாகவே கொண்டு பூரிக்கின்றனர். கடலூர்ப் பகுதியில் பெண்ணை யாற்றங்கரையிலும், மற்ற ஊர்களில் ஆங்காங்குள்ள ஆற்றங்கரைகளிலும் திருவிழா நடைபெறும்.

ஆற்றுத் திருவிழாவன்று, அவ்வட்டாரத்து ஊர் களிலுள்ள திருக்கோயில்களிலிருந்து இறையுருவங்கள் அணி செய்யப்பெற்றுக் குறிப்பிட்ட நீர்த்துறைக்குக் கொண்டு வரப்படும். அவ்விடத்தில் மக்கள் திரளாகக் குழுமி நீராடி இறை வழிபாடு செய்து செல்வர். இவ்விழாவிற்கென்று கடைகள் பல போடப்பட்டிருக் கும். மக்கள் வறிதே திரும்பாமல், விழாவிற்கு வந்த அடையாளமாக ஏதேனும் பொருள் வாங்கிச்செல்வர்.

சில ஊர்களில் வளர் பிறையில் வருகின்ற 'இரத சப்தமி'யன்று—அஃதாவது—அமாவாசை கழிந்த ஏழாம் நாளன்று ஆற்றுத் திருவிழா நடைபெறும், சில ஊர் களில் தை ஐந்தாம் நாள், இரதசப்தமி நாள் ஆகிய இரு நாட்களிலும் ஆற்றுத் திருவிழா நடைபெறும். கடலூரில் இவ்விரு நாட்களிலும் பெண்ணையாற்றின் வெவ்வேறு துறையில் விழா நடைபெறும். சில இடங்களில் தை அமாவாசையிலும் சில இடங்களில் தைப் பூசத்திலும் ஆற்றுத் திருவிழா நடக்கும். கடலூரில் தை அமாவாசையில் கடல் நீராடு விழா நடைபெறும். தைந்நீராடலின் தனிச்சிறப்பு பின்பு தனித்தலைப்பில் விளக்கப்படும்.

# தைச் சிறப்பு விழாக்கள்

பன்னிரண்டு திங்கள்களிலும் வரும் கார்த்திகை, அமாவாசை, பூசம், சப்தமி முதலிய நாள்கள் தைத் திங்களில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பெறு கின்றன. இந்த நாட்களில் பல ஊர்களில் சிறப்பு விழாக்கள் நடைபெறும்.

**தைக் கார்த்திகை:**

கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாள் மிக்க சிறப்புடன் பெரு விழாவாகக் கொண்டாடப்படுவதற்கு அடுத்தபடியாகத் தைத் திங்களிலேதான் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வீடுகளில் சிறப்புப் படையல் இருக்கும். முருகன் கோயில்களில் சிறப்பு விழா நடை பெறும். முருகக் கடவுள் திருமேனி ஊர்வலமாக வரும்.

**தை அமாவாசை:**

தைக் கார்த்திகையைப் போலவே தை அமாவாசை யும் வீடுகளிலும் கோயில்களிலும் சிறப்பாகக் கொண் டாடப்படுகிறது. சில ஊர்களில் தை அமாவாசையன்று ஆற்று நீராடலும், சில இடங்களில் கடல் நீராடலும் நடைபெறும். கோயில்களிலிருந்து இறையுருவங்கள் நீர்த் துறைகளுக்கு எடுத்துச் செல்லப்பெற்று விழா நடத்தப்படும்.

## தைப் பூசம்:

தைப் பூசம் என்றதும் வடலூரும் வள்ளலாரும் நினைவிற்கு வரலாம். தைத் திங்களில் பூசநாள் மிகவும் சிறப்புடைத்து. தைத் திங்களில் பூச நாளும் முழு நிலாப் பருவமும் ஒரே நாளில் இருக்கும். சித்திரைத் திங்களில் சித்திரை நாளும் முழு நிலாப் பருவமும், வைகாசியில் விசாகமும் பருவமும், கார்த்திகையில் கார்த்திகையும் பருவமும், மார்சழியில் ஆதிரையும் பருவமும், மாசியில் மகமும் பருவமும், பங்குனியில் உத்திரமும் பருவமும் ஆண்டுதோறும் பெரும்பாலும் ஒரே நாளில் இணைந்து வருவது போல, தைத் திங்களில் பூசமும் பருவமும் ஆண்டு தோறும் பெரும்பாலும் ஒரே நாளில் இணைந்து வரும். அதனால் தைப் பூசம் சிறப்புடைத்து.

நல்ல நிகழ்ச்சிகள் எத்தனை உண்டோ-அத்தனையும் தைப் பூசத்தில் நடைபெறும். குழந்தைக்கு முடி எடுத்தல், காது குத்துதல், எழுத்தறிவித்தல், வீடு கடைகால் எடுத்தல், புது வாயில்படி வைத்தல், புதுமனை புகுதல், புது அடுப்புப் போடுதல். புதுக் கணக்குப் போடுதல, புதுக்கடை திறத்தல், புது நெல் குதிரில் கொட்டுதல், புது நெல் அவித்தல், புது நெல் குத்திப் படைத்தல், வயலில் வேலை தொடங்குதல், தொழிற் கூடத்தில் வேலை தொடங்குதல், புது வேலை தொடங்குதல், திருமணம் செய்தல் முதலிய நற்செயல்கள்-மங்கல நிகழ்சசிகள் அனைத்தும் தைப் பூசத்தில் நடைபெறும்,

சில குடும்பங்களில் தைப் பூசத்தில் சிறப்புப் படையல் நடைபெறும். சிலர் இல்லங்களில், பெண்டிர் இரவு முழுதும் கண் விழித்துச் சிறப்பு உணவு ஆக்கி, கதிரவன் புறப்படுவதற்கு முன் வைகறையிலே படைப்பர். இந்தப் படையல் செய்வதற்கென்று சில சிறப்பு முறைகள் உண்டு. இதற்குப் 'பூசப் பாவாடை' என்று பெயர் சொல்வர். உற்றார் உறவினருடன் வைகறையிலேயே பூசப் பாவாடை விருந்து நடை பெறும்.

சில ஊர்க் கோயில்களில் ஆடையில் உணவு பரப்பிப் படைக்கும் பூசப் பாவாடை விழா மிகவும் சிறப்பாக நடைபெறும். பொதுவில் ஊர்க் கோவிலில் பூசப் பாவாடை போட்டு ஊரார் அனைவரும் கோவிலிலேயே பகிர்ந்து பல்லாரோடு உண்பதும் உண்டு. இந்தப் பூசப் பாவாடைக்கென்று முன் கூட்டியே வீடு தோறும் அரிசி முதலிய உணவுப் பண்டங்கள் தண்டிச் சென்று ஊர்ப் பொது விழாவாக நடத்துவர்.

தைப் பூசத்தன்று ஆற்றில் நீராடுதல் பெரும்பயன் நல்கும் என்பது மக்கள் நம்பிக்கை. காவிரி, வைகை, தாமிரபருணி, பெண்ணையாறு முதலிய ஆறுகளில் நீராடுவது ஆங்காங்குள்ள சிற்சில பகுதிகளில் நடை பெறுகிறது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிடை மருதூரில் தைப் பூசத்தில் நீராடுதல் மிகவும் சிறப்பு விழாவாக நடை பெறுகிறது. இதனை, ஏழாம் நூற்றாண்டின்

முற்பகுதியில் வாழ்ந்த திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் திருவிடை மருதூர்த் தேவாரப் பதிகங்களாலும் அறியலாம்:

**''வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூசம் ஆடி உலகம் பொலிவெய்தத்
திருந்திய நான்மறையோர் சீராலேத்த இடைமருதில்
பொருந்திய கோயிலே கோயி லாகப் புக்கீரே''**

**''வாசம்கமழ் மாமலர்ச் சோலையில் வண்டே
தேசம் புகுந்தீண்டி ஓர் செம்மை யுடைத்தாய்ப்
பூசம் புகுந்து ஆடிப் பொலிந்து அழகாய
ஈசன் உறைகின்ற இடை மருது ஈதே''**

இவை சம்பந்தர் தேவாரப் பாடல்கள்.

**''பாசம் ஒன்றிலராய்ப் பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டு அடி வைகலும்
ஈசன் எம்பெருமான் இடை மருதினில்
பூசம்நாம் புகுதும் புனல் ஆடவே''**

இது நாவுக்கரசர் தேவாரம். இப்பாடல்களால், தைப் பூசத்தில் நீராடுவதால் உலகம் பொலிவு பெறும், என்னும் செய்தி புலனாகும். இந்நாளில் இறைவனுக்குத் தெப்பத் திருவிழாவும் உண்டு,

பூசம் தேவ ஆசானுக்கு உரிய நாளாம். தைப் பூசத்தின் சிறப்பு காரணமாகப் பூசத்திற்குத் 'தை' என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. இச்செய்திகளை, திவாகர நிகண்டின் தெய்வப் பெயர்த் தொகுதியிலுள்ள,

**''கொடிறு, காற்குளம், சுரர்குருநாள், வண்டு,
புணர்தை, ஆகும் பூசநாள் பெயரே''**

என்னும் நூற்பாவாலும், பிங்கல நிகண்டின் வானவர் வகை என்னும் தொகுதியிலுள்ள,

> ''குருநாள், காற்குளம், கொடிறு, வண்டு,
> புணர்தை, ஆகும் பூசநாட் பெயரே.''

என்னும் நூற்பாவாலும் அறியலாம். 'புணர் தை' என்னும் தொடர் ஈண்டு எண்ணத்தக்கது. தைத் திங்கள் கடக ஓரையில் பூசத்தில் நிலா (சந்திரன்) தன் சொந்த வீட்டில் முழுமையாய்த் தங்கி ஒளி வீசுவதாகக் கூறப்படுகிறது. இதுகாறுங் கூறியவற்றால் தைப் பூசத்தின் தனிப் பெருஞ் சிறப்பு விளங்கும்.

தைப் பூச விழாவிற்குப் பெயர் பெற்ற சிற்சில ஊர்கள் ஆங்காங்கு உள்ளன. முருகன் திருப்பதிகள் சிலவற்றில் இவ்விழா காவடி செலுத்துதலுடன் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சில ஊர்களில் அன்பர்கள் காவடி எடுத்து ஆடிப்பாடிக் கொட்டி முழக்கிச் செல்வது அழகாயிருக்கும். இந்த நாளில் சில ஊர்க் கோயில்களில் இடும்பன் பூசனையும் நடைபெறும். இடும்பன் பூசனையிலும் ஊரார் ஒன்று கூடிப் பகிர்ந்து பல்லாரோடு உண்ணுதல் நடைபெறுவதுண்டு.

தைப் பூசம் இவ்வாறு பல்வேறு சிறப்புடையதாகத் திகழ்வதால்தான் திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் மயிலாப்பூர்ப் பதிகத்தில்,

> 'தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்'

எனப் பூம்பவையை நோக்கி வினவுவதாகப் பாடியுள்ளார். இதனால் தைப் பூசத்தின் பெருமை புலப்

படும். இப்போது வடலூர் தைப் பூச விழாவிற்குப் பெயர் பெற்ற ஒரு மைய நிலையமாக இருப்பது நாடறிந்ததே!

## இரத சப்தமி:

சப்தமி என்னும் வடமொழிச் சொல். அமாவாசை அல்லது பருவம் கழிந்த ஏழாம் நாளைக் (திதியைக்) குறிக்கும். தைத் திங்களில் வளர் பிறையில்-அமாவாசை கழிந்த ஏழாம் நாள் இரத சப்தமி எனப்படும். தைத் திங்களிலிருந்து கதிரவன் வடக்கு நோக்கிச் செல்லத் தொடங்குகிறான். இந்த வட செலவு வடமொழியில் 'உத்தராயணம்' எனப்படுகிறது. ஞாயிறு இரதத்தில் (தேரில்) செல்வதாகக் கூறுவது மரபு. ஞாயிற்றின் இரதம் வடக்கு நோக்கி நகரத் தொடங்குவது இந்த சப்தமி நாளில்தானாம்; அதனால் இது 'இரத சப்தமி' எனப்படுகிறது. புராண முறைப்படி இது 'புண்ணிய நாள்' என்று நம்பப்படுகிறது. எனவே, ஒரு சிலர் இதனைச் சிறுபொங்கல் போலக் கொண்டாடுகின்றனர். இந்நாளில் வைகறையில் நீராடிச் சிறிய விளக்குகள் ஏற்றித் தண்ணீரில் மிதக்கவிட வேண்டும் எனவும், தேரில் ஞாயிறு அமர்ந்து செல்வதுபோல் வடிவம் அமைத்து வைத்து வழிபாடாற்ற வேண்டும் எனவும் புராணங்களில் புகலப்பட்டுள்ளது. இந்த முறையைப் பின்பற்றுபவர் ஏழு எருக்கிலைகளைத் தலையில் வைத்தபடி கதிரவன் புறப்படும் போது நீராடுகின்றனர்; இன்னும் சில சடங்கு முறைகளைச் செய்கின்றனர்.

பெரும்பாலும் பார்ப்பனர், ஆரிய வைசியர் போன்ற சில பிரிவினரிடையே இரத சப்தமி கொண்டாட்டம் மிகுதியாகக் காணப்படுகிறது. இவ்விழா கொண்டாடுபவர் பொங்கல் நாளன்று போலவே இந்த நாளிலும் திறந்த வெளியில் பொங்கல் செய்து கதிரவனுக்குப் படைத்து உண்டு களிக்கின்றனர், இரத சப்தமியன்று சில பகுதிகளில் ஆற்றுத் திருவிழா நடைபெறுகிறது. கடலூரில் இதைக் காணலாம். சுற்று வட்டாரத்து ஊர்க் கோயில்களிலிருந்து இறையுருவங்கள் பெண்ணையாற்றங்கரைக்கு எடுத்து வரப்பெறும். மக்கள் பெருந்திரளாகக் குழுமி நீராடி வழிபாடு செய்வர்.

**அம்மன் கோவில் விழா:**

சில ஊர்களில் தைத் திங்களில் சிறப்பாக அம்மன் கோயில்களில் விழா நடைபெறும், ஐந்தாம் வெள்ளிக் கிழமையன்று, தீ மிதி விழா, தேர்த் திருவிழா முதலியன ஊருககேற்ப நடைபெறும், சில ஊர்களில் 'செடல்' திருவிழாவும் நடக்கும். பெண்கள் அம்மன் கோயிலுக்குச் சென்று அங்கேயே பொங்கல் இட்டு மா விளக்குப் போட்டுப் படைத்து வருவர்.

**ஐயனார் கோயில் விழா:**

இத் திங்களில் சில இடங்களில் ஐயனார் கோயில் விழா நடைபெறும். ஐயனார் கோயிலுக்குப் புதுக் குதிரை வைப்பதாக நேர்ந்துகொண்டவர்கள் அவ்வாறு குதிரை செய்து கொண்டுபோய் வைப்பர். சில பகுதிகளில் ஊரார் அனைவரும் சேர்ந்து பொதுவாகக் குதிரை செய்து வைப்பதும் உண்டு. இதற்குக் 'குதிரை

விடல்' என்று பெயர் வழங்கப்படுகிறது. மகளிர் ஐயனார் கோயிலில் பொங்கல் செய்து மாவிளக்குப் போட்டுப் படைத்து மகிழ்வர்.

**ஊருணிப் பொங்கல்:**

ஊருணிப் பொங்கல் என்பது பொருள் பொதிந்த தொடர். பொங்கல் நாளில் அவரவர் வீட்டில் பொங்கல் செய்து உண்பர்; ஆனால் ஊருணிப் பொங்கல் வேறு. ஊரார் அனைவரும் ஒரு பொது இடத்தில் ஒன்று கூடிப் பொங்கல் செய்து உண்பது ஊருணிப் பொங்கலாகும். சில ஊர்களில், தைத் திங்களில் ஒரு திங்கட் கிழமையில் ஊரார் அனைவரும் கொட்டு முழக்கத்துடன் ஐயனார் கோயிலுக்கோ, ஆற்றங் கரைக்கோ, மலைச்சாரலுக்கோ, காட்டுச் செறிவுக்கோ சென்று, பொதுவில் பொங்கல் செய்து உண்ணும் மரபு இன்றும் உள்ளது. இதற்காக முன் கூட்டியே வீடுதோறும் பணமும் உணவுப் பொருள்களும் தண்டப்படும். ஊருணிப் பொங்கல் நாளன்று ஆடவரும் மகளிரும் அணி செய்துகொண்டு ஒரு சேரக் குழுவாகக் கொட்டு முழக்குடன் குறிப்பிட்ட பொது இடம் சேர்ந்து விழாவயர்வர். பொங்கல் படையலுடன் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதும் உண்டு. பகுத்துண்ணுதல் - பல்லாரோடு உண்ணுதல் என்னும் பண்பினை இங்கும் காணலாம். விழா முடிந்ததும், வந்தது போலவே அனைவரும் கொட்டு முழக்குடன் குழுவாகச் சென்று வீடு சேர்வர். இந்த ஊருணிப் பொங்கல் விழா ஊர் மக்கள் அனைவருக்கும் ஒரு சிறந்த 'டானிக்' ஆகும்.

**தை பிறந்தால் வழி பிறக்கும்:**

தை பிறந்ததும், பொங்கல் விழாவும் அதைத் தொடர்ந்து பல்வேறு சிறப்பு விழாக்களும் நடை பெற்று மக்களுக்கு மகிழ்ச்சியளிபபது ஒரு புறம் இருக்க,-தை பிறந்ததும் பல புது வினைகள் தொடங்க வழி பிறக்கிறது; பல துயரங்களுக்கும் சிக்கல்களுக்கும் வழி பிறக்கிறது. இயற்கையின் கொடுமைகளிலிருந்து விடுபட வழி பிறககிறது. பசி, பகை, வறுமை, பிணி, கடன் முதலியன நீங்கவும் வழி பிறககிறது. எங்ஙனம் வழி பிறககிறது?

ஆவணித் திங்களிலிருந்து கார்காலம் தொடங்கு கிறது. அதிலிருந்து மார்கழித் திங்கள் வரையிலும், மக்கள், பெரு மழையாலும் பெரும் புயலாலும் வெள்ளத் தாலும் ஓடை உடைப்பாலும் பனியாலும் குளிராலும் இவை காரணமாகத் தோன்றிய தொற்று நோய் வகையாலும் படாத பாடு பட்டுவந்தனர். பலர் வீடிழந்தனர்; பலர் மாடிழந்தனர்; பலர் உணவின்றி வருந்தினர். தெருக்களும் பாதைகளும் நடப்பதற்கு இயலாதனவாயின. எந்தத் தொழிலையும் தொடங்கிச் செவ்விய முறையில் செய்ய இயற்கை இடந்தர வில்லை.

இந்த நிலையில் தை பிறந்ததும், மேற்கூறிய இயற்கைப் பகைகள் இருக்குமிடம் தெரியாமல் ஒழிந்தன. இனிப் புயல் இல்லை; வெள்ளமில்லை. தகுந்த பருவநிலை தொடங்கலாயிற்று. மழை பெய்து முடிந்த கடைநாள் பகுதியில் தைத் திங்கள் வருகிறது

என்னும் பொருளில், 'தைத் திங்கள் தண்பெயல் கடைநாள்' எனச் சங்க நூல்களில் கூறப்பட்டிருப்பது ஈண்டு எண்ணத்தக்கது. மழை நின்று விடவே, பழுதுபட்ட இல்லங்களை-விழுந்துபோன வீடுகளை மக்கள் மீண்டும் புதுப்பிக்கலாயினர். அறுவடை வீடு வந்து சேர்ந்தது. பொங்கல் தொடங்கிற்று. பசி, வறுமை, பிணி நீங்கத் தொடங்கின. தானியங்களை விற்றுக் கடன் தீர்க்கப்பட்டது. பல்வேறு விழாக் களாலும் மங்கல நிகழ்ச்சிகளாலும் பகை நீங்க ஊரில் ஒருவர்க்கொருவர் ஒற்றுமை ஏற்பட்டது. தொழில்கள் தொடங்கப்பட்டன. துயரங்களும் சிக்கல்களும் நீங்க மகிழ்ச்சி பெருக்கெடுத்தது. இவ்வாறாகத் தை பிறந்ததும் எல்லாருக்கும் வழி பிறந்தது-எல்லா வற்றிற்கும் வழி பிறந்தது. இம்மட்டுமா?

**திருமண விழா:**

கன்னி கழியாதிருந்த இல்லங்கள் தை பிறந்ததும் திருமண ஆயத்தங்கள் பெற்றுத் திருமண அரங்குகளாக மாறலாயின. நல்ல கணவனை வேண்டி நோன்பிருந்த கன்னி கண் நிறைந்த கணவனை மணந்து மனம்போல மங்கலம் பெற்றாள். ஒண்டிக் கட்டையாக இருந்த கட்டிளங் காளை வாழ்க்கைத் துணைநலம் பெற்றான், பெண்ணுக்கு இன்னும் கன்னிப் பூ பூக்கவில்லையே எனவும், பிள்ளைக்கு இன்னும் விளக்கேற்றி வைக்க வில்லையே எனவும் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த இருதரப்புப் பெற்றோர்களின் உள்ளங்கள் மகிழ்ச்சியால் மலரலாயின.

ஆம்! தமிழர்கள் ஆவணித் திங்களோடு திருமண நிகழ்ச்சியை நிறுத்தி வைத்துவிடுவர், ஆவணியிலேயே கூட திருமணத்தின்போது மழையினால் அல்லல்பட்டு அலுத்துப்போன மக்கள், புரட்டாசி,ஐப்பசி கார்த்திகை மார்கழி ஆகிய திங்கள்களில் திருமணத்தை மறந்திருப்பது இயற்கைதானே! எனவேதான், திருமணத்திற்கும் வழி பிறக்கத் தை பிறக்க வேண்டியதாயிற்று. இந்தக் காலத்தில் எல்லாத் திங்கள்களிலும் திருமணம் நடைபெறுகிற சூழ்நிலை வேறு-அந்தக் காலத்துச் சூழ்நிலை வேறு,இந்தக் கால வசதி அந்தக் காலத்தில் இல்லை.

இந்தக் காலத்தில் பெண் வீட்டார் மாப்பிள்ளை தேடுகின்றனர். அந்தக் காலத்தில் மாப்பிள்ளை வீட்டார் பெண்தேடுவதே தமிழர் மரபு, நெருங்கிய உறவின் முறையாருக்குள்ளேயே பெண் வீட்டார் எளிதில் முடிவுதர மாட்டார்கள். மாப்பிள்ளை வீட்டார் பலமுறை கெஞ்சும் சூழ்நிலை இருக்கும். பெண் பார்க்கப்போய் பதினேழு இணை செருப்பு தேய்ந்ததாக அந்தக் காலத்தில் சொல்வது வழக்கம். இந்தக் காலத்தில் மாப்பிள்ளை பார்க்கப்போய் இருபத்தேழு இணை செருப்பு பெண் வீட்டார்க்குத் தேயும் சூழ் நிலையைக் காண்கிறோம்.

மாப்பிள்ளையின் தந்தை மகனுக்குத் தைத் திங்களில் மைத்துனர் மகளை மணம் செய்து வைக்க வேண்டுமென விரும்பினால்,இரண்டு மூன்றுதிங்களுக்கு முன்பே மைத்துனரிடம் பெண் கேட்டுப் பார்ப்பார்.

அதற்கு மைத்துனர், 'பொங்கல் போகட்டும் பார்க்கலாம்' என்று பதில் சொல்லி வைப்பார். பொங்கல் போனதும் மாப்பிள்ளையின் தந்தை மைத்துனர் வீட்டுக்குச் சென்று, 'போகியும் போச்சு-பொங்கலும் போச்சு-பெண்ணைக் கொடு மச்சான்'-என்று கூறிப் பெண் கேட்பார். முறையே திருமணம் நடைபெறும், 'போகியும் போச்சு-பொங்கலும் போச்சு-பெண்ணைக் கொண்டாயா'-என்று சிலர் வேடிக்கையாகப் பாட்டுப் பாடுவதுண்டு.

அந்தக் காலத்தில் தைத் திங்களில் திருமண ஏற்பாடு நடைபெற்றதற்குச் சான்றாக, சங்கத் தொகை நூலாகிய நற்றிணையில் ஒரு சுவடு விடப் பட்டுள்ளது:-காளையொருவன் கன்னியொருத்தியைக் காதலித்தான்; அவளுக்குக் கையுறையாகத் தழையும் தாரும் தந்தான், அவள் அவனையே மணக்க வேண்டுமென உள்ளத்தில் வரித்துக் கொண்டாள். இதை யறிந்த தோழிமார் கேலிசெய்கின்றனர். அவள் பெரிதும் நாணப்படுகிறாள். அதே தலைவன் தவறாது தனக்குக் கிடைக்க வேண்டுமென நோன்பு கொண்டு தைத் திங்களிலே வைகறையில் தண்ணிய நீரிலே குளித்து முழுகித் தவங்கிடக்கிறாள். அவள் அல்லாமல் தன் காதல் நோய்க்கு வேறு மருந்து இல்லை என அவனும் ஏங்குகிறான். இச்செய்தியை, நற்றிணையிலுள்ள,

'பெரும் புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து
தழையும் தாரும் தந்தனன் இவனென
இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள் அல்லது
மருந்துபிறி தில்லையான் உற்ற நோய்க்கே'

என்னும் (80-ஆம்) பாடல் பகுதியால் அறியலாம். குறித்த காதலன் கிடைக்க வேண்டும் என அவள் தைத் திங்களில் எதிர்ப்பார்த்திருப்பதும், தன்னையே விரும்பித் தைத் திங்களில் தவங்கிடக்கும் அவளே தனது துயர் நீக்கும் அருமருந்து என அவன் புலம்புவதும் தைத் திங்களுக்கும் திருமணத்திற்கும் உள்ள தொடர்பைக் கோடிட்டுக் காட்டுகின்றனவன்றோ?

# நைந் நீராடல்

**நீராடுங் கலை:**

இந்தக் காலத்தில் நாகரிகம் என்னும் பெயரால் 'நீச்சல் குளங்கள்' (Swimming Pools) அமைக்கப்பட்டுள்ளன. நீச்சல் குளத்தில் நீச்சல் அடித்து நீராடி வருவது. பெருமை மிக்க நாகரிகச் செயலாகக் கருதப் படுகிறது. அமெரிக்க-ஃஆலிவுட் நீச்சல் கலை மிகவும் பெரிது படுத்திப் பேசப்படுகிறது. ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழகத்தில் நீராடுதல் ஒரு கலையாகத் திகழ்ந்த பேருண்மை பலருக்குத் தெரிய வழியில்லை. மணிமேகலை என்னும் பெருங்காப்பியத்தில், மணிமேகலை என்னும் கட்டிளங் கன்னி கற்றிருந்த கலைகளாகக் காப்பியப் புலவர் சாத்தனாரால் கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் நீராடுதலும் ஒரு தனிப்பெருங்கலையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இதனை மணிமேகலையில், ஊரலர் உரைத்த காதையில் உள்ள,

> '...கந்துகக் கருத்தும் மடைநூல் செய்தியும்
> சுந்தரச் சுண்ணமும் தூநீ ராடலும்...
> நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
> ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்
> கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை...'

என்னும் பகுதியால் நன்கறியலாம். இன்னும், சிலப்பதிகாரம், கொங்குவேள் மாக்கதை ஆகிய தமிழ்க் காப்பியங்களிலும் பிற தமிழிலக்கியங்கள் சிலவற்றிலும், நீராடும் கலை நிகழ்ச்சி, ஒரு தனிப்பெரு விழா நிகழ்ச்சியாக ஓவியப்படுத்திக் காட்டப்பட்டுள்ளமை ஈண்டு நினைவுகூரத்தக்கது. ஆண்டாள் அருளிய திருப்பாவையிலும் மணிவாசகர் அருளிய திருவெம்பாவையிலும். நீராடுதல் தெய்வத் தொடர்பான ஒருவகை நோன்பின் கூறாகப் போற்றிப் புகழ்ந்துரைக்கப் பெற்றுள்ளது.

**தைந் நீராடும் தவம்;**

நீராடலுக்குள்ளேயே, சித்திரை நீராடல், ஆதிரை நீராடல், தைந் நீராடல் என்றெல்லாம் காலத்தையொட்டிப் பல்வேறு நீராடல்கள் சொல்லப்படுகின்றன. இவற்றுள், தைந் நீராடுதல் பற்றியே பழந்தமிழ் நூல்கள் மிகவும் பெருமையாகப் பேசியுள்ளன. தைத் திங்களில் நீராடுதல் ஒரு தவச் செயலாக மதிக்கப்பட்டுள்ளது. மணமாகாத கன்னியர் தமக்கு நல்ல கணவர் கிடைக்க வேண்டும் என வேண்டித் தைத் திங்களில் நீராடித் தவங்கிடப்பார்களாம், இப்போது மார்கழி நோன்பு நோற்பதாகச் சிலரால் சொல்லப்படுகிறது. அப்போது தை நோன்பு இருந்ததாகவே தமிழ் நூல்கள் கூறியுள்ளன. சங்க நூலாகிய கலித்தொகையிலிருந்து ஒரு காட்சி காண்போம்.

தன் காதலி காதலில் வீறு காட்டாததாகக் குறைபட்டுக் கொள்ளும் காதலன், அவளை நோக்கிக் கூறுகிறான்: 'காதல் வேதனையால் யான் மயங்கி விழுவேனாயின், இந்தப் பெண்ணால் வந்த வினையே இது என்று அயலவர் நின்னைப் பழிக்கத் தொடங்குவர்; அந்தப் பழி உனக்கு வரின், நல்ல கணவர் கிடைக்க வேண்டுமென வேண்டித் தோழிமாருடன் நீ நோன்புக் கோலம் பூண்டு தைத் திங்களில் நீராடிய தவத்தின் பயன் உனக்குக் கிட்டாமற் போகும்'-என்று அவன் அவளுக்கு உணர்த்துகிறான். இதனை,

> ''மருளியான் மருளுற இவனுற்றது எவனென்னும்
> அருளிலை இவட்குஎன அயலார்நிற் பழிக்குங்கால்
> வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
> தையில் நீராடிய தவம் தலைப்படுவாயோ''

என்னும் (59-ஆம்) கலித்தொகைப் பாடல் பகுதி அறிவிக்கிறது. 'தையில் நீராடிய தவம்' என்னும் தொடர், பொருள் பொதிந்தது. இந்தப் பாடல் பகுதியால், கன்னியர் தையில் நீராடுவதின் நோக்கமும் பயனும் புலனாவதோடு, தையில் நீராடுதல் ஒருவகைத் தவ-நோன்பு என்பதும் புலப்படும்.

### அம்பா ஆடல்:

தைத் திங்களில் நீராடுதலுக்கு 'அம்பா ஆடல்' என்ற பெயர் உள்ளமையைச் சங்க நூலாகிய பரிபாடலால் அறிய முடிகிறது. அம்பா என்றால் தாய் என்று பொருளாம். தாயுடன் கன்னியர் நீராடுதலின் 'அம்பா ஆடல்' எனப்பட்டதாம். பனி

படர்ந்த வைகறையில் கன்னியர் தாயருடன் தைத் திங்களில் நீராடுவராம். இதனை, பரிபாடலில் உள்ள,

> ''வெம்பா தாக வியனில வரைப்பென
> அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்
> முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
> பனிப் புலர்பு ஆடி–''

என்னும் (11-ஆம்) பாடல் பகுதியால் அறியலாம். அம்பா என்றால் தாய்; அம்பா ஆடல் என்றால் தாயோடு நீராடல் எனப் பரிமேலழகர் பொருள் கொண்டு, 'அம்பா ஆடலென்று தைந் நீராடற்குப் பெயராயிற்று, தாயோடாடப் படுதலின்' என்று உரை எழுதியுள்ளார். அம்பா என்றால் தாய் எனின், அம்பா ஆடல் என்றால் தாய் நீராடுதல் என்றுதானே பொருள்படும்? தாயோடு நீராடுதல் என்று பரிமேலழகர் கூறியிருப்பது எங்ஙனம் பொருந்தும்? எனவே, இதற்கு வேறு பொருள் இருக்க வேண்டும். கன்னியர் துணைக்குத் தாயரை அழைத்துச் சென்று அருகில் வைத்துக் கொண்டு நீராடுதல் இயற்கையேயாகும். அதனால் அதற்கு 'அம்பா ஆடல்' என்று பெயர் சொல்லி விட முடியாது. கன்னியர் நீராடும்போது, 'அம்பா-அம்பா' என்று சொல்லிக்கொண்டு ஆடியிருப்பர். அம்பா என்பது அம்பிகை என்னும் பொருளில் பெண் தெய்வத்தைக் குறிக்கலாம்அல்லவா? எனவே, 'அம்பா-அம்பா' என்று அம்மனை வேண்டிக் கொண்டு நீராடியதால் அதற்கு 'அம்பா ஆடல்' என்னும் பெயர் வழங்கப்பட்டிருக்கலாம். பெண்கள் அம்மானைக் காய் விளையாட்டு ஆடும்போது

அம்மானை'என்று சொல்லிக் கொண்டே ஆடுவதால் அதற்கு 'அம்மானை ஆடுதல்' என்று பெயர் வழங்கப் படுவதும், பொங்கல் படைக்கும் போது 'பொங்கலோ-பொங்கல்' என்று முழங்கிக் கொண்டு படைப்பதும் இன்ன பிறவும் ஈண்டு ஒப்பு நோக்கற் பாலன.

**தவம் தந்த தவம்:**

தைத் திங்களில் நீராடுதல் ஒரு தவப் பேறாகக் கருதப்படுகிறது. இந்தத் தவப்பேறு முன் செய்த தவத்தால் கிடைக்கக் கூடியதாம்-அஃதாவது-முற் பிறவியில் நல்ல தவம் செய்திருப்பவர்களுக்குத்தான், இப்பிறவியில் தையில் நீராடும் தவப்பேறு கிடைக் குமாம். இதனை முன்காட்டிய பரிபாடல் பாட்டுப் பகுதியை அடுத்துள்ள.

**''தீஎரிப் பாலும் செறிதவம் முன்பற்றியோ**
**தாய் அருகா நின்று தவத் தைந்நீர் ஆடுதல்''**

என்னும் பகுதி தெரிவிக்கிறது. தாயின் அருகிலே நின்று தைந் நீராடுதல் இங்கே குறிப்பிடப்பட்டிருப்பது காண்க. வயதில் முதிர்ந்த பெண்டிர் துணைக்காகக் கன்னியர் அருகில் நிற்பது ஒரு புறம் இருக்க,-தவத் தைந் நோன்பிற்காக நீராடும் முறையை அறிவிப்பதற் காகவும் அருகில் இருப்பது மரபு. இதனை முன் காட்டிய ''முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப் பனிப்புலர்பு ஆடி'' என்னும் பரிபாடல் பகுதியாலும் உணரலாம். இச்செய்தி கொங்குவேள் மாக்கதையிலும்,

> ''தாமிள மகளிரைக் காமஞ் செப்பி
> அஞ்சல் செல்லாது நெஞ்சுவலித் தாடுமிந்
> நங்கையர் நோற்ற பொங்குபுனல் புண்ணியம்
> நுங்கட்கு ஆகென நுனித்தவை கூறி
> நேரிழை மகளிரை நீராட் டயரும்
> பேரிளம் பெண்டிர்...''

எனக் (1-41: 101-6) கூறப்பட்டிருப்பது ஈண்டு ஒப்பு நோக்கற் பாற்று. மற்றும், பரிபாடலில், 'முற் பிறவியில் செய்த தவத்தால் இப்பிறவியில் தைந் நீராடும் பேறு பெற்றோம்; இப்பேறு இனி வரும் பிறவிகளிலும் எய்துவதாக-'எனக் கன்னியர் வேண்டிக் கொள்வதாகக் கூறப்பட்டிப்பது மிகவும் சுவை பயக்கிறது. இதனை,

> ''இன்ன பண்பின் இன் தைந்நீ ராடல்......
> முன்முறை செய்தவத்தின் இம்முறை இயைந்தேம்
> மறுமுறை யமையத்தும் இயைக''—

என்னும் பரிபாடல் (11) பகுதியால் நன்கு தெளிய லாம். இதுகாறுங் கூறியவற்றால், தைந் நீராடலின் தவச் சிறப்பு புலனாகும்.

**தைந்நீரோ-தைந்நீர்:**

அந்தக் காலத்தில் தைந் நீராடல் தமிழகத்தில் பெருவரவிற்றாக இருந்தமையை இலக்கண உரை யாசிரியர்களின் உரைப்பகுதிகளாலும் தெளிவாக அறியலாம். தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-கிளவி யாக்கத்திலுள்ள 'பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம்' என்னும் (50-ஆம்) நூற்பாவின் கீழ் இளம்பூரணர் எழுதியுள்ள ''அத்திணைக்கண்

தொழிலிற் பிரிந்த ஆணொழி மிகுசொல் வருமாறு: இன்று இவ்வூரார் எல்லாம் தை நீராடுப'' என்னும் உரைப் பகுதியும், அதே கிளவியாக்கத்தில் 'அவற்றுள் வினை வேறு படூஉம் பல பொருள் ஒரு சொல்' என்னும் நூற்பாவின் கீழ்த் தெய்வச் சிலையார் வரைந் துள்ள ''இவ்வூர் மக்களெல்லாம் தைந் நீர் ஆடினார் என்ற வழி பெண்பால் உணரப்பட்டது'' என்னும் உரைப் பகுதியும், 'ஒன்றொழி பொதுச் சொல்' என்னும் நன்னூல் (268-ஆம்) நூற்பாவின் கீழ் மயிலை நாதர் வரைந்துள்ள ''மருவூரார் தைந்நீர் ஆடினார்'' என்னும் உரைப் பகுதியும், 'பெண்ணாண் ஒழிந்த' என்னும் நேமிநாத (36-ஆம்) நூற்பாவின் கீழ் வரையப்பட்டுள்ள ''இன்று இச்சேரியார் தை நீராடுவர் என்றல் உயர்திணையிடத்துத் தொழிலிற் றோன்றும் ஆணொழி மிகுசொல்'', என்னும் பழைய உரைப் பகுதியும் இன்ன பிறவும் தைந் நீர் ஆடுவர்-தைந் நீர் ஆடுவர் எனத் தைந் நீர் ஆடலைப் பெரிது படுத்திய பேசியுள்ளமையைக் காண்க.

'ராடார் சாதனம்':

வானவூர்தியின் வருகையை அறிவிக்கும் 'ராடார்' என்பதைப் பற்றி இக்காலத்தினர் அறிவர். எவ்வளவு நெடுந் தொலைவு உயரத்தில் வரும் ஊர்தியையும் அது கண்டு பிடித்துக் காட்டிவிடும். அந்த 'ராடார் சாதனம்' செய்யும் வேலையைத் தைத் திங்கள் தண்ணீர் செய்யுமாம். மிகவும் உயரே பறக்கும் வானவூர்தி தெரியும் அளவிற்குத் தைத் தண்ணீர்

தெளிந்திருக்குமாம். தைத் திங்களில் வையை யாற்றின் தண்ணீர் மிகவும் தெளிந்திருப்பதைக் கண்ட பெண்டிர் அந்தத் தைந் நீரை நோக்கிக் கூறுவதாகப் பரிபாடலில் உள்ள

**"நீ தக்காய் தைந்நீர் நிறம் தெளிந்தாய் என்மாரும்"**

என்னும் பகுதி, நீராடுவதற்கு ஏற்ற நிலையில் தைந் நீர் தெளிந்திருப்பதை அறிவிக்கிறது. மற்றும் அப் பாடலில் உள்ள

**"உம்பர் உறையும் ஒளிகிளர் வானூர்பு ஆடும்**
**அம்பி கரவா வழக்கிற்றே"**

என்னும் பகுதியில், வானத்தில், தேவர்கள் செல்லும் ஊர்தி வையைத் தண்ணீரில் தெரிவதாகக் கற்பனை செய்யப்பட்டுள்ள கவினைக் கண்டு மகிழலாம்.

## கொளக் கொளக் குறையாமை:

தைந் நீருக்கு மேலும் ஒரு சிறப்பு கூறப்பட்டுள்ளது. சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனது நகரின் சிறப்பைக் கூறவந்த புலவர் கோவூர் கிழார், தைத் திங்கள் நீர்நிலையைப் போலக் கொள்ளக் கொள்ளக் குறையாத உணவு முதலிய வளமுடைய நகரம் அது- என்று விதந்து பாராட்டியுள்ளார். இதனை,

**"தைஇத் திங்கள் தண்கயம் போலக்**
**கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்"**

என்னும் (70-ஆம்) புறநானூற்றுப் பாடல் பகுதியாலறியலாம். தைத் திங்கள் தண் கயத்தின் வற்றாத வளத்தை இதனால் புரிந்து கொள்ளலாம்.

**பலர் படிதல்:**

தைத் திங்கள் தண்கயம் பலரும் படிந்து நீராடி யின்புறப் பயன்படும் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை, ஐங்குறு நூற்றி லுள்ள,

> **''நறுவீ ஐம்பால் மளிர் ஆடும்**
> **தைஇத் தண்கயம் போலப்**
> **பலர்படிந்து உண்ணுநின் பரத்தை மார்பே''**

என்னும் (84-ஆம்) பாடல் பகுதி அறிவிக்கிறது.

**தைந் நீர் தரும் பொலிவு:**

தைந் நீர் ஆடுவதால் உடல் பொலிவுடன் தோற்றம் அளிக்குமாம். இதனைத் தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர் ஓரிடத்தில் தெரிவித்துள்ளார். உரிய தலைமகள் ஒருத்தியைக் காதலிக்கும் தலைமகன் ஒருவனை இன்னொருத்தியும் விரும்புகிறாள்; தலைமகன் தலைமகளையே மணந்து கொள்வான் - தன்னைப் புறக்கணிப்பான் - என்பதாக ஐயுறுகிறாள்; உறவினர் பணித்த வண்ணம் தலைமகள் தைந் நீர் ஆடி நோன்பு செய்வதால் மிகவும் கவர்ச்சிப் பொலிவுடன் தோன்றுகிறாளாதலின் தலைமகன் அவளையே மனைவியாக மணப்பான்- தன்னை விரும்பான் எனப் பொறாமை கொண்டு வருந்துகிறாள். இந்நிகழ்ச்சியை, தொல்காப்பியம்-கற்பியலில் உள்ள,

> **'மறையின் வந்த மனையோள் செய்வினை**
> **பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும்'**

என்னும் (10-ஆம்) நூற்பாப்பகுதியின் உரை விளக்க மாக நச்சினார்க்கினியர் வரைந்துள்ள'

''தலைவற்கு வேறோர் தலைவியொடு களவொழுக்கம் நிகழ்தலின் அவன் செய்திகளின் வேறு பாட்டால் தமக்குப் புலப்பட வந்த மனையோளாதற் குரியவள், தமர் பணித்தலில் தைந் நீராடலும் ஆறாடலும் முதலிய செய்தொழில்களைச் செய்யு மிடத்து, இவள் தோற்றப் பொலிவால் தலைவன் கடிதின் வரைவன் எனக் கருதிப்பொறுத்தலின்றி மிக்க வருத்தத்தின் கண்ணும்''-

என்னும் உரைப் பகுதி ஓவியப்படுத்திக் காட்டுகிறது. தைப பூசத்தில் நீராடுவதால் பொலிவு உண்டாகும் என்பதை,திருஞான சம்பந்தரின் திருவிடை மருதூர்த் தேவாரப் பதிகத்தில் உள்ள,

**''பொருந்திய தைப்பூசம் ஆடி உலகம் பொலிவெய்த'',**
**''பூசம் புகுந்து ஆடிப் பொலிந்து அழகாய''**

என்னும் பாடல் பகுதிகளும் தெளிவுறுத்துகின்றன.

இதுகாறும் கூறியவற்றால், தைந் நீர்ச் சிறப்பும், தைந் நீராடலின் தனிச் சிறப்பும்-தவச் சிறப்பும் தெற்றென விளங்கும்.

**மார்கழி நீராடல்:**

காலம் மாறும் இயல்பிற்று. பழந்தமிழ்ச் சங்க நூல் களிலும இலக்கண உரைகளிலும் தைந் நீராடும் தவ நோனபு பெரிதும் போற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்தக் காலத்திலோ, தைந் நீராடும் தவ நோன்பு தமிழகத்தில்

பலர்க்குச் சொல்லித் தெரிய வைக்கவேண்டிய நிலையில் உள்ளது. மார்கழி நீராடலும் மார்கழி நோன்புமே இப்போது பலராலும் அறியப்பட்டுள்ளன. இதற்குக் காரணம், தைத் திங்கள் நோன்பின் முன்னாயத்தமாக மார்கழியிலிருந்தே வைகறையில் நீராடி வழிபாடு செய்யத் தொடங்கியமையாகத்தான் இருக்கக்கூடும். மார்கழியில் தொடங்கப்பட்ட நோன்பு தைத் திங்களில் முற்றி முதிர்ந்து முடிவு பெற்று வந்தது. பொங்கல் போனதும் நோன்பும் முடிவுக்கு வருவதால், மக்கள் தைத் திங்கள் முழுமையும் இல்லாத 'தை' நோன்பை நழுவ விட்டு மார்கழி நோன்பை இறுகப் பிடித்துக் கொண்டனர் போலும்! மார்கழித் திங்களில் செய்யும் செயல்கள் எல்லாம் தைத் திங்களுக்காகச் செய்யப்படும் ஒருவகை முன்னாயத்தமாகும் - என்னும் கருத்து முன்பே விளக்கப்பட்டுள்ளது. முன்னாயத்தமாக மார்கழியில் தொடங்கிய வைகறை நீராடலும் வைகறை வழிபாடும் இன்று நிலைத்துவிட்டன. இதற்கு உறுதுணையாய் நிற்பன, ஆண்டாள் அருளிய திருப்பாவையும் மாணிக்கவாசகர் அருளிய திருவெம் பாவை - திருப்பள்ளியெழுச்சியுமாகும் எனலாம்.

**பாவைப் பாட்டு**

ஆண்டாளின் திருப்பாவை முப்பது பாடல் கொண்டது. மார்கழி பிறந்ததும் வைணவர்களால் நாளுக்கொரு பாடல் வீதம் விளக்கவுரை யாற்றப்படு கிறது. சிறப்பாக நாளுக்கு ஒரு பாடல் இடம் பெறினும் திருப்பாவையை நாடோறும் ஓதுவதும் உண்டு.

சைவத்தில்,மாணிக்கவாசகரின் திருவெம்பாவை இருபது பாடலகளும் திருப்பள்ளியெழுச்சி பத்துப் பாடல்களும் கொண்டவை; இந்த முப்பது பாடல்களும் சைவர் களால் மார்கழித் திங்களில் ஓதப்படுகின்றன. நாடோறும் முப்பதையும் ஓதுவதும் உண்டு; நாளுக்கு ஒன்றாக விளக்கவுரையாற்றுவதும் உண்டு. மார்கழித் திங்களில் திருப்பாவை-திருவெம்பாவை மாநாடுகளும் சிறப்புக் கூட்டங்களும் இன்று பல்வேறிடங்களிலும் நடைபெறுவதையும் காண்கிறோம். மார்கழியில் வைகறையில் நீராடி ஓதி வழிபாடாற்றுவதற்கு இப் பாடல்கள் பெரிதும் பயன்படுகின்றன.

திருப்பாவையும் திருவெம்பாவையும் பாவைப் பாட்டு வகையைச் சார்ந்தனவாகும். பாவையர் பாவை யரைப் 'பாவாய்-பாவாய்' என விளித்து முடித்துப் பாடுவதுபோல் அமைந்தன இவை. பாவைப்பாட்டைப் பற்றித் தொல்காப்பிய உரைகளில் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் குறிப்பிட்டுள்ளனர். தொல் காப்பியம் - செய்யுளியலில் உள்ள 'தரவின்றாகித் தாழிசை பெற்றும்' என்னும் (149-ஆம்) நூற்பாவின் உரையில்,

''...இது மேலைக் கொண்டும் அடிப்பட வந்த மரபு. இவையெல்லாம் நான்கடியுள் வருதலே பெரும் பான்மையெனக் கொள்க. எனவே, சிறுபான்மை பாவைப் பாட்டும் அம்மனைப் பாட்டும் முதலாயின நான்கடியின் இகந்து வருவனவாயின.''-

எனப் பேராசிரியர் பாவைப் பாட்டைக் குறிப்பிட்டுள்ளமை காண்க. அதே நூற்பாவின் உரையில்,

"இது ஐந்தடியான் வந்து ஈற்றடி முச்சீரான் இற்று அடியீற்றின்கண் இருசீர் மிக்கது. திருவெம் பாவை எட்டடியான் வந்திவ்வா றிற்றன."

என நச்சினார்க்கினியர் கூறியிருப்பதுங் காண்க. இன்னும், யாப்பருங்கல விருத்தியுரையிலும் பிற வற்றிலுங்கூடப் பாவைப்பாட்டு பேசப்பட்டுள்ளது. யாப்பருங்கலம் ஒழிபியலில் உள்ள 'நிரல் நிறை முதலிய பொருள் கோட் பகுதியும்' என்னும் (2-ஆம்) நூற்பாவின் விருத்தியுரையில் வண்ணங்களைப் பற்றி விளக்குமிடத்து,

"இன்னவும் ஆசிரியங்களும் பாவைப்பாட்டும் அன்னபிறவும் குறில் அகவல் தூங்கிசை வண்ணம் எனப்படும். இவற்றை ஐந்தெழுத்தின் மேலும் ஒட்டிக் கொள்க."-

எனப் பாவைப் பாட்டு விதந்து குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த அமைப்பினை நோக்குங்கால், பாவைப் பாட்டு என்னும் ஒருவகை நூல் பண்டைக் காலந்தொட்டே இருந்தமை புலனாகும். அவிநயனார் புத்தரைப் பற்றிப் பாடியுள்ள திருவெம்பாவைப் பாட்டொன்றும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

**பாவை விளையாட்டு:**

பாவைப் பாட்டைப் போலவே பாவை விளையாட்டும் கன்னியருடன் தொடர்புடையது.

பாவை செய்து விளையாடுவது அவர்தம் பழக்கம். பாவை விளையாட்டைப் பற்றிச் சங்க நூல்களில் பரக்கக் காணலாம். இதனை,

**'தைஇ நின்ற தண்பெயல் கடைநாள்...**
**வண்டல் பாவை உண்துறைத் தரீஇத்**
**திருநுதல் மகளிர் குரவை அயரும்'** (269)

என்னும் அகநானூற்றுப் பாடல் பகுதி அழகாக ஓவியப் படுத்தியுள்ளது. தைத் திங்களில் மகளிர் பாவையை நீர்த்துறையில் வைத்து ஒப்பனை செய்து குரவைக் கூத்து ஆடி மகிழ்கிறார்களாம். இன்னும் இப்பாவை விளையாட்டை,

**'பணைத்தோள் குறுமகள் பாவை தைஇயும்'**

என்னும் குறுந்தொகைப் பாடல் பகுதியாலும்,

**''சுடர்விரி வினைவாய்ந்த தூதையும் பாவையும்**
**விளையாட அரிப்பெய்த அழகமை புனை வினை''** (59)

என்னும் கலித்தொகைப் பாடல் பகுதியாலும், சிலப்பதி காரம் முதலிய நூல்களாலும் நன்கறியலாம். ஈண்டு விரிப்பிற் பெருகும்.

**பாவை நோன்பு:**

பாவை விளையாட்டு முற்றிய நிலையில் பாவை நோன்பாக மாறும். பாவை நோன்பில் பாவைப்பாட்டும் பங்கெடுத்துக் கொள்ளும். சிலப்பதிகாரத்தில் பாவை விளையாட்டு ஒன்று பாவை நோன்பாக மாறிய வரலாறு காணப்படுகிறது. மதுரையில் கோவலனை யிழந்த கண்ணகி, அங்கிருந்தபடி, தன் ஊராகிய காவிரிப்பூம்பட்டினத்துக் கற்புடைய மகளிரை எண்ணி

ஏங்குகிறாள். அவளால் நினைக்கப்பட்ட மகளிர் பலருள் குறிப்பிட்ட ஒருத்தியின் வரலாறு வருமாறு:- காவிரிக்கரையில் கன்னியர் பலர் மணலால் பாவை செய்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்; அப்போது ஒருத்தி தனது மணல் பாவையோடு மிகவும் ஈடுபட்டிருந்தபோது, மற்ற கன்னியர் அவளை நோக்கி, 'இந்தப் பாவைதான் இவள் கணவன்' என்று கேலி செய்துகொண்டே புறப்பட்டுச் சென்றார்களாம். அவர்கள் அந்தப் பாவையைத் தன் கணவன் என வரித்து விட்டதால், அவள் அப்பாவையை விட்டுப் பிரிய மனமில்லாதவளாய், திடீரெனப் பெருகி வரும் நீரால் அப்பாவை அழிந்துவிடா வண்ணம் காத்து நின்று நோன்பு கொண்டாளாம். அவள் விரும்பியபடியே, தண்ணீர் அப்பாவையை அழிக்காமல் சுற்றி வளைந்து சென்றதாம். இந்த உருக்கமான வரலாற்றை, சிலப்பதிகாரம்-வஞ்சின மாலையில் உள்ள,

> "...பொன்னிக்
> கரையின் மணற்பாவை நின்கணவ னாமென்று
> உரைசெய்த மாதரொடும் போகாள் திரைவந்து
> அழியாது சூழ்போக ஆங்குந்தி நின்ற
> வரியார் அகலல்குல் மாதர்"

என்னும் பகுதி அழகுபெற அறிவிக்கிறது. இந்த வரலாறு பட்டினத்துப் பிள்ளை புராணத்திலும் கூறப் பட்டுள்ளது.

பாவை செய்து வழிபட்டு நோன்பு கொள்வது பண்டை மரபு. ஆயர் கன்னியர் கார்த்தியாயினி தேவி போல் மணலால் பாவை செய்து வழிபட்டு நோன்

பிருந்த செய்தியைப் பாகவதத்தால் அறியலாம். சிவபெருமானின் மனைவியாகிய உமையம்மையே பாவை நோன்பிருந்ததாகச் சைவ நூல்கள் கூறுகின்றன. காஞ்சியை யடுத்த பாலாற்றில் உமையம்மையார் சிவன்போல் மணலால் பாவை செய்து வழிபட்டுக் கொண்டிருந்தபோது திடீரென வெள்ளம் வந்துவிட, தாம் நீங்காமல் பாவையை அணைத்துக் கொள்ள, வெள்ளம் வழிவிட்டு வளைந்து சென்றதாம்.

உமையம்மையார் முதலியோரைப் பற்றிய செய்திகள் கற்பனை என்று கூறினும், அந்தக்காலத்தில் கன்னியர் வைகறையில் நீராடிப் பாவை நோன்பு நோற்றனர் என்னும் உண்மையை மறுக்க முடியாது. இதற்குச் சான்று பகர,

> **''வையத்து வாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்குச்**
> **செய்யும் கிரிசைகள் கேளீரோ'' (2)**

என்னும் ஆண்டாள் திருப்பாவைப் பாடல் ஒன்று போதுமே! பாவை-பாவைநோன்பு; கிரிசை - கிரியை-பணி; 'பாவைக்குச் செய்யும் கிரிசைகள்' என்றால், பாவை நோன்புக்காகச் செய்யும் பணிகள் என்று பொருளாம்.

**நீராடல் தொடர்பு:**

பாவைப் பாட்டும் பாவை விளையாட்டும் பாவை நோன்பும் ஆகிய மூன்றும் நீராடுதலுடன் தொடர்புடையனவாய்த் தோன்றுகின்றன. 'மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்' என்னும் ஆண்டாளின் திருப்பாவைப் பாட்டும்,'மார்கழிநீர் ஆடேலோ ரெம்பா

வாய்' என்னும் மாணிக்கவாசகரின் திருவெம்பாவைப் பாட்டும் மார்கழி நீராடலுடன் தொடர்புடையனவா யிருப்பது காண்க. அடுத்து, பாவை விளையாட்டு ஆற்றங்கரையில் - நீர்த்துறையில், மணலால் பாவை செய்து விளையாடப்பட்டதாகச் சொல்லப் பட்டிருத்தலின் அஃதும் நீராடலோடு தொடர்புடைய தென்பது சொல்லாமலே விளங்கும். பாவை நோன்பு என்பது, வைகறையில் நீராடிப் பாவை செய்து விளையாடப் படுவதாதலின், அது நீராடுதலோடு நெருங்கிய தொடர்புடையது என்பது தெளிவு. இவை கன்னியர்க்குஉரியன என்பதை,எட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சேந்தன் திவாகர நிகண்டும் பிங்கல நிகண்டும் தெளிவு செய்துள்ளன.

நாம் இப்போது பிள்ளைத்தமிழ் என்று வழங்கும் நூலைத் திவாகர நிகண்டு 'பிள்ளைப்பாட்டு' என்று கூறியுள்ளது. நோன்பியற்றலும், நீராடுதலும், பாவை யாடலும் கன்னியர்க்கு உரியன; இவை முதலான வற்றைப் பாடுவது பெண்பால் பிள்ளைப் பாட்டாகும். எனத் திவாகரம் கூறுகிறது. இதனை, திவாகர நிகண்டின் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியிலுள்ள,

> **''ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றலும்**
> **பனிநீர் தோய்தலும் பாவை யாடலும்**
> **சிறுசோ றடுதலும் சிற்றில் இழைத்தலும்**
> **பேசிய பெண்பால் பிள்ளைப் பாட்டே''**

என்னும் நூற்பாப் பகுதியால் அறியலாம். திவா

கரத்தை அடியொற்றிய பிங்கல நிகண்டும் அநுபோக வகை என்னும் தொகுதியில் இதே போல,

"...ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றலும்
பனிநீர் தோய்தலும் பாவை யாடலும்
அம்மனை கழங்கு பந்தடித் தாடலும்
பேசிய பெண்பாற் பிள்ளைப் பாட்டே" (268)

எனக் கூறியுள்ளது. பாவை நோன்புக்கும் நீராட லுக்கும் உரிய தொடர்பினை ஒன்பதாம் நூற்றாண் டினர் எனப்படும் ஆண்டாள் திருப்பாவையால் தெளிவாக அறியலாம்.

"...ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்" (3)

"புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம் புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய் நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்" (13)

என்னும் திருப்பாவைப் பாடல்கள் காண்க. பாவைக்குச் சாற்றி நீராடியதாக மேலே முதல் பாடல் பகுதியில் கூறப்பட்டுள்ளது. அடுத்த பாடல் மிகவும் இன்றியமை யாதது. பாவை நோன்பு செய்யும் இடத்திற்குப் 'பாவைக் களம்' என்று பெயராம். அங்குச் சிறுமியர் எல்லாரும் சென்று விட்டனராம். வெள்ளி முளைத்தது; வைகறையில் பறவைகள் ஆரவாரிக் கின்றன. நீரைக் குடைந்து குளித்து ஆடுவதற்காக

ஒருத்தியை மற்றொருத்தி எழுப்பிச் செல்கிறாள். பாவை நோன்புக்கும் நீராடுதலுக்கும் உரிய நெருங்கிய தொடர்பை உறுதி செய்ய இதனினும் வேறு என்ன சான்று வேண்டும்?

ஆதிரை நீராடல்:

மார்கழித் திங்களில் ஆதிரை நாளில் நீராடுதல் ஒரு நோன்பாகக் கருதப்படுகிறது. இந்தத் திங்களில் ஆதிரையும் முழுநிலாப் பருவமும் ஒரே நாளில் இணைந்து வரும். அதனால் மார்கழி ஆதிரை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சிதம்பரம் எனப்படும் தில்லையில் கூத்தரசப் (நடராசப்) பெருமானுக்கு மார்கழித் திருவாதிரை நாளில் 'மார்கழித் தரிசனம்' என்னும் பெயரில் மிகப் பெரிய விழா நடைபெறுவது நாடறிந்ததே. இந்த நாளில் சிவன் கோயில் உள்ள எல்லா ஊர்களிலுமே திருவாதிரை விழா நடைபெறுவதுண்டு. திருவாதிரை நாளில் வீடுகளில் இனிப்புக் களி செய்து இறைவனுக்குப் படைப்பர். இதற்குத் 'திருவாதிரைக் களி' என்று பெயராம்.

ஆதிரை நாள் சிவனுக்கு மிகவும் உகந்த நாளாம், அதனால் அவன் 'ஆதிரையான்' என்றும் 'ஆதிரை முதல்வன்' என்றும் பெயர் வழங்கப்பட்டுள்ளான். இதனைப் பரிபாடலில் உள்ள,

> **''ஆதிரை முதல்வனிற் கிளந்த**
> **நாதர் பன்னொருவரும் நன்றிசை காப்போரும்''**

என்னும் (8-ஆம்)பாடல் பகுதியாலும்,முத்தொள்ளாயி ரத்தின் முகப்பிலுள்ள,

> "மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
> முன்னம் படைத்த முதல்வனைப்-பின்னரும்
> ஆதிரையான் ஆதிரையான் என்றென்றயருமால்
> ஊர்திரைநீர் வேலி உலகு"

என்னும் காப்புச் செய்யுளாலும் நன்கறியலாம். இன்னும் திவாகர நிகண்டில்-தெய்வப் பெயர்த் தொகுதியில்,

> "மூதிரை, செங்கை, யாழ், ஈசர்தினம், என
> ஆதிரை தன்பெயர் ஆகும் என்ப"

எனவும், பிங்கல நிகண்டில்-வானவர் வகை என்னும் தொகுதியில்,

> "அரன்நாள், செங்கை, மூதிரை, ஆதிரை"

எனவும், ஆதிரை சிவனுக்கு உரிய நாளாகக் கூறப்பட்டுள்ளமை காண்க.

சைவர்க்குப் போலவே, வைணவர்க்கும் மார்கழியும் மார்கழி ஆதிரையும் சிறப்பானவையாகும். கண்ண பிரான், மாதங்களுள் தான் மார்கழியாய் ('மாசானாம் மார்க்க சீஷம்') இருப்பதாகக் கீதையில் கூறியுள்ளார் என்பது அறிந்ததே. மார்கழியின் சிறப்பு குறித்து வைணவ நெறியில் எவ்வளவோ சொல்லப்பட்டுள்ளது. அதில் ஆண்டாளுக்கு நல்ல பங்கு உண்டு.

மார்கழியில் நீராடுதலின் மாண்பினை - அதிலும் சிறப்பாக ஆதிரை நாளில் நீராடுதலின் சீர்மையினை, ஆண்டாள் தமது திருப்பாவையில் அழகுறக் கூறியுள்ளார்:

**"மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்"** (1)

**"தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்**
**வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்**
**மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"** (4)

**"மாலே மணிவண்ணா மார்கழி நீ ராடுவான்**
**மேலையார் செய்வனகள் வேண்டுவன**
**கேட்டியேல்"** (26)

என்பன ஆண்டாளின் திருப்பாவைப் பாடல் பகுதிகளாகும். ஆண்டாள் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள்' என்பது ஆதிரை நாளாகும். மதி நிறை நன்னாள் என்றால், நிலா (சந்திரன்) முழு நிறைவு பெற்ற பருவம் (பௌர்ணமி) ஆகும், மார்கழித் திங்களில் ஆதிரையும் பருவமும் ஒரே நாளாக இருக்கும் என்பதை ஈண்டு மீண்டும் நினைவுகூர வேண்டும். எனவே, மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள் என்றால் 'ஆதிரை நாள்' என்பது பெறப்படும். இந்த மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளாகிய ஆதிரை நாளில் 'நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்' என்று ஆண்டாள் கூறியுள்ளார். எனவே, 'ஆதிரை நீராடல்' என்பதும் சிறப்பிற்கு உரியது.

ஆண்டாள் முதல் பாடலில் ஆதிரை நாளை விதந்து குறிப்பிட்டிருப்பினும், நான்காம் பாடலிலும் இருபத்தாறாம் பாடலிலும் முறையே 'மார்கழி நீராட' 'மார்கழி நீராடுவான்' எனக் கூறப்பட்டிருப்பது பொதுவாக மார்கழி நீராடலின் சிறப்பை உணர்த்துகிறது.

கன்னியர் நல்ல கணவர் கிடைக்கவேண்டும் என நோன்புற்று வேண்டிக்கொள்வது போலவே, உலகம் வாழ மழை பெய்யவேண்டும் எனவும் வேண்டிக் கொள்வர் என்பது, 'வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும் மார்கழி நீராட' என்னும் ஆண்டாள் பாடலால் அறிய வருகிறது, இது. 'வெம்பாதாக வியனில வரைப்பென அம்பா ஆடலின்' என்னும் பரிபாடல் பகுதியை நினைவுறுத்துகிறது.

மார்கழி நீராடுதல் வடமொழி நூல்களிலிருந்து தமிழகத்தில் அறியப்படவில்லை; தமிழ் மக்கள் முன்னோர் காலத்திலிருந்தே வழி வழியாகச் செய்து வரும் வழக்க நிகழ்ச்சியே இது என்பதை 'மார்கழி நீராடுவான் மேலையார் செய்வன' என்னும் ஆண்டாள் பாடல் பகுதியால் அறியலாம் என்பதாக அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். 'மேலையார் மொழிந்தன' என்றிராமல், 'மேலையார் செய்வன' என்றுள்ள சொல்லாட்சி, மார்கழி நீராடல் என்பது வழி வழி வந்த ஒரு செயல் முறை என்பதை அறிவிக்கின்றதல்லவா?

மார்கழி நீராடலிலேயே ஆதிரை நாளில்நீராடுதல் ஆண்டாளால் விதந்து குறிப்பிடப்பட்டிருத்தலின், 'ஆதிரை நீராடல்' என்பது ஒரு தனிச் சிறப்பிடம் பெற்றுள்ளது. 'ஒன்றொழி பொதுச்சொல்' என்னும் நன்னூல் நூற்பாவின் கீழ் 'மருவூரார் தைந் நீர் ஆடினார்' என மயிலை நாதர் வரைந்துள்ள உரைப் பகுதி முன்னர் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது.

மயிலை நாதரின் உரையமைந்த ஒரு சில ஓலைச் சுவடிப் படிகளில், தைந் நீர் ஆடினார் என்பதற்குப் பதிலாக, சித்திரை நீராடினார் என்றும் ஆதிரை நீராடினார் என்றும் பாட வேறுபாடுகள் இருப்பதாக, தமிழ் ஐயா உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தமது மயிலை நாதர் உரைப் பதிப்பில் எடுத்துக் காட்டி யுள்ளார்கள். எனவே, ஆதிரை நீராடலும் தமிழகத்தில் தனக்கென ஒரு தனிச்சிறப்பிடம் பெற்றிருந்தமை புலனாகும்.

ஆண்டாளைப் போலவே மாணிக்கவாசகரும் தமது திருவெம்பாவையில் மார்கழி நீராடலைப் பற்றிக் கூறி யுள்ளார். அப்பகுதிகள் வருமாறு:-

''மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி'' (11)

'பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீர் ஆடேலோ ரெம்பாவாய்'' (12)

'பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோ ரெம்பாவாய்' (13)

'ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோ ரெம்பாவாய்' (15)

'பெண்ணேயிப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோ ரெம்பாவாய்' (18)

'போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோ ரெம்பாவாய்' (20)

என மணிவாசகர் ஆண்டாளினும் மிகுதியாக நீராடலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இவர் ஆதிரை நாளைக் குறிப்பிடாமல், ஒரே ஓரிடத்தில் மட்டும் பொதுவாக மார்கழி நீராடலைக் குறிப்பிட்டுப் போந்துளார். மற்றும் இவர் ஆண்டாளைப் போலவே,

**'முன்னி யவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே**
**என்னப் பொழியாய் மழை யேலோ ரெம்பாவாய்'** (16)

எனக் கன்னியர் மழை பெய்ய வேண்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஒருத்தியை யொருத்தி கதவு தட்டி எழுப்பிக் கொண்டு வைகறையில் நீராடச் செல்லும் காட்சி திருவெம்பாவையில நயம்பட நவிலப்பட்டுள்ளது.

இந்த மார்கழிச் செயல்கள் எல்லாம் தை நோன்பு முடிப்பதற்காக முன் கூட்டித் தொடங்கிச் செய்யப் பட்டு வரும் முன்னாயத்தங்களே என்றும், பின்னர்த் தை நோன்பின் சிறப்பு மறைய அதன் இடத்தை மார்கழி நோன்பு நாளடைவில் பிடித்துக் கொண்டது என்றும் முன்பு ஓரிடத்தில் கூறப்பட்டிருப்பது ஈண்டு மீண்டும் நினைவுக்கு வரவேண்டும். ஆண்டாள் திருப் பாவையின் முதல் பாட்டின் முதலில் உள்ள,

**"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்"**

என்னும் பகுதி, பரிபாடல் என்னும் சங்கத் தொகை நூலிலுள்ள ஒரு (11) பாட்டின் பகுதியை அப்படியே நினைவுறுத்துகிறது. அந்தப் பரிபாடல் பகுதியைப் பார்த்துத்தான் ஆண்டாள் தமது பாடலைப் பாடினாரோ என்னவோ (யாரும் சினங் கொள்ள வேண்டா)-என எண்ணலாம்போல் தோன்றுகிறது. அப்பரிபாடல் பகுதி வருமாறு:

**"ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து**
**மாயிருந் திங்கள் மறுநிரை ஆதிரை**

விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்
புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏற்ப
வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப் புலர்பு ஆடி...''

மேலுள்ள, 'ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து, மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை' என்னும் முதல் இரண்டடிகளுக்குப் பரிமேலழகர் எழுதியுள்ள உரைப் பகுதி வருமாறு:

''ஞாயிறு தெறாத கடை மாரியையுடைய மார்கழி மாதத்துத் திங்கள் மறுவொடு நிறைந்த திருவாதிரை நாளின்கண், திருவாதிரை நிறைமதி நாளாங்கால் ஆதித்தன் பூத்தடத்தின்கண் (பாட வேறுபாடு; பூராடத்தின்கண்) நிற்குமாதலின் அதனையுடைய மார்கழி மாதம் குளம் எனப்பட்டது.''

மார்கழிக்குக் 'குளம்' என்னும் பெயர் உள்ளமையைப் பரிபாடலாலும், அப்பெயர்க் காரணத்தைப் பரிமேலழகர் உரையாலும், அறிகிறோம். எனவே, 'ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து' என்னும் அடி 'மார்கழி மாதத்தில்' என்னும் பொருள் தருகிறது. அடுத்து - 'மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை' என்னும் அடி, முழு நிலாப் பருவத்தோடு கூடிய ஆதிரை என்னும் பொருள் தருகிறது. முழு நிலா நாளில் நிலாவின் (சந்திரனின்) நடுவே உள்ள மறு என்னும் களங்கம் முற்றிலும் நிறைந்து தெரியுமாதலின 'திங்கள் மறுநிறை ஆதிரை' எனபபட்டது. இந்த

இரண்டு பரிபாடல் அடிகளின் கருத்தைத் தொகுத்து 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்' என்று ஆண்டாள் அருளிச் செய்துள்ளார். அடுத்து நீராடலுக்கு வருவோம்:

மார்கழி ஆதிரையில் விழா தொடங்கியதாகவும் கன்னியர் அம்பா நீராடியதாகவும் பரிபாடலில் கூறப் பட்டிருப்பதைக் காணலாம். இந்தப் பரிபாடல் பகுதிக்குச் சிலர் திரிபாகப் பொருள் புரிந்து கொண் டுள்ளனர். மார்கழி ஆதிரையில் விழா தொடங்கப் பட்டது; கன்னியர் அம்பா ஆடினர்-என்னும் பகுதியைக் கண்டதும், 'கன்னியர் ஆதிரை நீராடினர்' என்பதாக ஒரு சாரார் எழுதியுள்ளனர். ஆனால் பரிமேலழகர் இதை ஒத்துக் கொள்ளவில்லை. ''அம்பா ஆடல் என்று தைந்நீராடற்குப் பெயராயிற்று, தாயோடாடப் படுதலின்'' என்று பரிமேலழகர் எழுதி யிருப்பது காண்க. பரிபாடலில், ஆதிரை நாளில் விழா தொடங்கப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறதே தவிர, ஆதிரை நாளில் அம்பா ஆடியதாகக் கூறப் படவில்லை. எனவே, மார்கழி ஆதிரையில் விழா தொடங்கப்பட்டது; அது தைத் திங்கள்வரையிலும் வளர்ந்து கொண்டு போயிற்று; அம்பா ஆடல் தைத் திங்களில் நிகழ்ந்தது-என்று கொள்ளுதலே பொருந்தும். தையில் நிறைவேறும் தவ நோன்புக்கு மார்கழியி லேயே தொடக்க விழா-முன்னாயத்த விழா செய்யப் படுவதாக நாம் முன்பு எழுதியுள்ள கருத்துக்கு, பரிபாடலில் உள்ள 'ஆதிரை விழவு தொடங்க' என்னும் பகுதியும் துணை புரிகிறதன்றோ?

இதுகாறுங் கூறியவற்றால், பண்டு தமிழகத்தில், ஆதிரை நீராடலினும் தைந் நீராடலே தலையாய தாகவும் தொன்மைப் பெருமையுடையதாகவும் கருதப் பட்ட தெனவும், தைந் நீராடலுக்காகச் செய்யப்படும் தொடக்க விழாவே ஆதிரை நீராடல் எனவும தெளியலாம். இந்தக் கருத்துக்குச் சங்க நூல்கள் மாபெருஞ் சான்று பகர்வதை மறக்கவும் முடியாது-மறுக்கவும் முடியாது-மறைக்கவும் முடியாது.

மார்கழி-ஆதிரை நீராடலைப் பற்றித் திருப் பாவையில் விதந்து சிறப்பித்துக் கூறியுள்ள ஆண்டாள், 'நாச்சியார் திருமொழி' என்னும் தமது வேறொரு படைப்பில், தைந்நீர் ஆடித் தவ நோன்பு மேற்கொள்வது பற்றிக் கூறியுள்ளமை ஈண்டு எண்ணத்தக்கது. நாச்சியார் திருமொழியில் முதலாந் திருமொழியாக உள்ள முதல் பத்து, தன்னைக் கண்ணனிடம் கூட்டும்படி காமனைத் தொழுவது பற்றியதாகும். தைத் திங்கள் முழுவதும் தரையைத் தூய்மை செய்து தெருவையும் அணி செய்து வைகறையில் நீராடிக் காமனுக்கு நோன்பிருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது. முதல் இரு பாடல்கள் வருமாறு:

**''தையொரு திங்களும் தரைவிளக்கித்**
**தண்மண்டல மிட்டு மாசி முன்னாள்**
**ஐயநுண் மணற்கொண்டு தெருவணிந்து**
**அழகினுக்கு அலங்கரித்து அனங்கதேவா**

**உய்யுமாங் கொலோ என்று சொல்லி**
**உன்னையும் உம்பியையும் தொழுதேன்**
**வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை**
**வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே'' (1)**

**''வெள்ளைநுண் மணற்கொண்டு தெருவணிந்து**
**வெள்வரைப் பதன்முன்னம் துறைபடிந்து**
**முள்ளுமில் லாச்சுள்ளி யெரிமடுத்து**
**முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா**
**கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக் கொண்டு**
**கடல்வண்ணன் என்பதோர் பேரெழுதிப்**
**புள்ளினை வாய்பிளந் தானென்பதோர்**
**இலக்கினில் புகவென்னை யெய்கிற்றியே'' (2)**

தாம் விரும்பும் கணவர் கிடைக்கும்படிச் செய்யுமாறு கன்னியர் தைத் திங்களில் நீராடி காமனுக்கு நோன்பிருப்பர், எனனும் செய்தி இப்பாடல்களால் அறியபபடுகின்றது. திவாகரத்திலும் பிங்கலத்திலும் பெண்பால் பிள்ளைப்பாட்டின் உறுப்புககளுள் ஒன்றாகக் காமன் நோன்பு கூறப்பட்டிருப்பது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

**''ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றலும்**
**பனி நீர் தோய்தலும் பாவை யாடலும்......**
**பேசிய பெண்பால் பிள்ளைப் பாட்டே''**

என்பது நிகண்டு நூற்பா.

**''ஆண்டீ ராறதில் எழில்காமன் நோன்பொடு**
**வேண்டுதல் தானுள விளம்பினர் புலவர்''**

என்பது பன்னிரு பாட்டியல் (105) நூற்பா. திவாகரத்திலுள்ள 'ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றல்' என்பது காமன் நோன்பைக் குறிக்கிறது.

ஐங்கணைக் கிழவன் என்றால் ஐவகை மலர் அம்பு களுக்கு உரியவனாகிய காமன் என்பது பொருளாம். காதல் துறையின் (காதல் இலாகாவின்) தலைமைப் பொறுப்பாளர் காமன் என்னும் மன்மதன். எனவே, காமனை வேண்டி நோன்பிருந்தால். விரும்பிய காதலர் கிடைப்பார் என்று நம்பி கன்னியர் அவ்வாறு செய் வார்களாம். இதைத்தான் நிகண்டு கூறியுள்ளது. எட்டாம் நூற்றாண்டில் திவாகரநிகண்டு கூறியுள்ள இலக்கணத்திற்கு, ஒன்பதாம் நூற்றாண்டில் ஆண்டாள் இயற்றிய 'நாச்சியார் திருமொழி' இலக்கிய மாகத் திகழும் அழகு இன்புறற்பாலது. தைத் திங்கள் தரை விளக்கித் தண்மண்டலம் இட்டு நோன்பு இருப் பதாக ஆண்டாள் அருளியிருப்பது ஈண்டு மிகவும் குறிப்பிடத்தக்கது.

இதுகாறுங் கூறியவற்றால், தைத் திங்களின் சிறப்பும் தவநோன்பிருந்து தைந்நீராடுதலின் சிறப்பும் தெளிவாக விளங்கும். தண்ணிய தைந்நீர் வாழ்க!

# உலக அரங்கில் தைத் திங்கள்

**தமிழர் திருநாள்:**

தைப் பொங்கல் விழாவைத் 'தமிழர் திருநாள்' என்று வழங்கும் ஒருவகை மரபு உள்ளது. உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் பொங்கல் விழாவைச் சிறப்புடன் கொண்டாடுவதால் இஃது இவ்வாறு வழங்கப்படுகிறது. அதிலும், தமிழ் நாட்டிலும் பிற இடங்களிலும் வாழும் தமிழர்கள் கொண்டாடும் விழாக்களுக்குள் இது பெரிதும் சிறப்புடன் போற்றிக் கொண்டாடப்படுதலின் 'தமிழர் திருநாள்' என விதந்து கூறப்படுகிறது. இதற்கு மறுப்பு கூறும் தமிழர்களும் சிலர் உளர். அஃதாவது, - தமிழகத்தில் பொங்கல் விழா கொண்டாடப்படும் நாளில், வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலுங்கூட விழா கொண்டாடப்படுவதால், இந்த நாளைத் 'தமிழர் திருநாள்' என்று குறிப்பிட்டுக் கூறுவது பொருந்தாது என்பது ஒரு சிலரின் கண்டுபிடிப்பு.

இந்த நாள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு பெயர்களுடன் கொண்டாடப்படினும், தமிழர்கள் கொண்டாடும் விழாக்களுக்குள் இது சிறப்பு விழாவாகப் பலநாள் தொடர்ந்து கொண்டாடப்படுவ தாலும் வெளியிலிருந்து வந்ததாக இல்லாமல்-இடைக்

காலத்தில் இறக்குமதியானதாக இல்லாமல் - தொன்று தொட்டு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வழி வழி வந்த மரபு விழாவாக மிளிர்வதாலும் இதனைத் 'தமிழர் திருநாள்' என வழங்குவதில் தவறொன்றுமில்லை. தமிழர்கள், வெளியிலிருந்து வந்த இடைக்காலத்தில் வந்த விழாக்களை வெறுக்கவும் இல்லை என்பதும் ஈண்டு எண்ணத்தக்கது.

இந்திய அரங்கில் என்றில்லாமல் உலக அரங்கிலும் இந்த நாள் ஏதேனும் ஒரு வகையில் சிறப்புற்றிருக்கலாம். எனவே, தமிழர்கள் இந்த நாளைத் தம் சிறப்புத் திருநாளாகத் தேர்ந்தெடுத்திருப்பது மிகவும் பொருத்தமே என்பது புலப்படும். இனி, தமிழர்களின் 'தைத் திங்கள் விழாச்சூழ்நிலையை உலக அரங்குடன் ஒத்திட்டு ஆய்ந்து காண்பாம்.

**அறுவடை விழா:**

உலகின் பல்வேறு பகுதிகளிலும் அறுவடை விழா (Harvest Festival) என்னும் பெயரில் ஒரு விழா நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. இவ்விழா ஆசியாவிலும் உண்டு - ஐரோப்பாவிலும் உண்டு - அமெரிக்கச் சிவப்பிந்தியர்களிடையேயும் உண்டு. பண்டைக் காலத்திலேயே யூதர்கள் இதனைப் பெருவிழாவாகக் கொண்டாடியுள்ளனர். இந்த நாளிலும் ஆசியாவில் சையாம் எனப்படும் தாய்லாந்து நாட்டில் அறுவடை விழா பெருஞ் சிறப்புடன் நடைபெறுவதைப் பற்றிப் பலரும் அறிந்திருக்கலாம். இதனை விரிப்பின் ஒரு தனிக் கட்டுரை யாகுமாதலின்

இம்மட்டில் நிறுத்தித் தைத் திங்களுக்கு வருவோம். தமிழகத்தில் அறுவடை முடிந்து புது நெல் குத்திப் புதுப் பானையில் பொங்கலிட்டுப் புதுக் கதிரும் வைத்துப் படைக்கும் பொங்கல் விழா, உலகின் பல பகுதிகளில் நடைபெறும் அறுவடை விழாவிற்கு நிகராக ஈடு கொடுக்கிறதல்லவா? எனவே, இதனை ஒரு வகையில் 'அறுவடை விழா' எனவும் வழங்கலாமே! உலக நாடுகளில் அறுவடை விழாவின்போது நடைபெறும் விருந்துகளும் களியாட்டங்களும் தைப் பொங்கல் நாளிலும் நடைபெறுவதால், இதனை அறுவடை விழா என மேளதாளத்துடன் வழங்கலாம்.

வயலில் உழைத்த உழவர்கள் பொங்கல் நாளில் விருந்தளிக்கப்பெற்றும், புத்தாடை, பணம் முதலியன பரிசளிக்கப் பெற்றும் போற்றப்படுவதால் இதனை 'உழவர் திருநாள்' என்று வழங்குதலும் உண்டு. 'அறுவடை விழா' என்னும் பெயருக்கும் 'உழவர் திருநாள்' என்னும் பெயருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று சொல்லத் தேவையில்லை. மற்றும், தை இரண்டாம் நாள் நடைபெறும் மாட்டுப் பொங்கல் விழாவும் அறுவடை விழாவோடு மிகவும் நெருக்கமான தொடர்புடையது என்பது சொல்லாமலே விளங்கும். அந்த நாளில்-ஏன், நம் நாட்டில் இந்த நாளிலுங்கூட, மாடுகள் இன்றி உழவு ஏது? அறுவடை ஏது? 'பகடு நடந்த கூழ் பல்லாரோடு உண்க' என்பது நாலடியார். 'பகடு நடந்த கூழ்' என்றால் மாடுகள் நடந்து உழுததனால் உண்டான உணவு' என்று பொருளாம்.

அந்த உணவைப் பல்லாரோடு உண்பதுதான் உழவர் திருநாளாம் அறுவடை விழாவாகும்.

நன்றித் திருநாள்:

நிலம் விளைதற்கு வேண்டிய மழையைத் தந்த இந்திரனுக்குப் போகி நாளன்றும், நிலம் விளைதல் முதல் உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்திற்கும் உதவிய கதிரவனுக்குப் பெரும் பொங்கல் நாளன்றும், நிலம் விளைதற்கு உறுதுணை செய்த மாடுகளுக்கு மாட்டுப் பொங்கலன்றும் நன்றி செலுத்தும் வாயிலாக விழா நடத்துதலின் இதனை நன்றித் திருநாள் என்று சொல்லும் வழக்கமும் உண்டு.

கிறித்துவ நாடுகளில் அறுவடை முடிந்ததும் இறைவனுக்கு நன்றி செலுத்துவர். அதற்கு அடையாளமாக, விளைபொருள்களில் ஒரு சிறு பகுதியை உழவர்கள் கோயில்களுக்குக் கொடுத்து நன்றி செலுத்துவர். இவ்வாறு நன்றி செலுத்த வேண்டும் எனப் பைபிளிலேயே கூறப்பட்டுள்ளது. இதற்கு 'நன்றி செலுத்தும் விழா' (Thanks Giving Festival) என்று பெயர் வழங்கப்படுகிறது. இந்த நன்றி விழாக் காட்சிப் படங்களையும் சிலர் இல்லங்களில் காணலாம். எனவே, இந்த வகையில், தைத் திங்கள் விழா நன்றித்திருநாளாகவும் விளங்குகிறது.

தொழிலாளர் விழா:

தைப் பொங்கல் விழா தொழிலாளர் விழாவாகவும் திகழ்கிறது. இந்தக் காலத்தில் 'மே' (May)

திங்கள் முதல் நாள் தொழிலாளர் நாளாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. பொங்கல் விழாவிலும் தொழிலாளர்கள் உணவளிக்கப்பட்டும், புத்தாடை, பணம் முதலியன பரிசளிக்கப்பட்டும் பாராட்டப் பெறுகின்றனர். காணும் பொங்கலிலிருந்து தொழிலாளர் வேலை செய்வதில்லை. சில நாள் ஓய்வெடுத்த பின்னர் நல்ல நாள் பார்த்து வேலை தொடங்குவர். இஃதொன்றே, பொங்கல் விழா தொழிலாளர் விழா என்பதற்குப் போதிய சான்றாகும். இந்தக் காலத்தில் 'மே' (May) முதல் நாள் முழு ஊதியத்துடன் தொழிலாளர்க்கு விடுமுறை யளிக்கப் படுவது ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

### தேசீய விழா:

ஒவ்வொரு நாட்டிலும் தேசீய விழா என்னும் பெயரில் கொண்டாட்டங்கள் நடைபெறுவதுண்டு. பொங்கல் விழா தமிழர்களின் தேசீய விழா என்பது, 'நாட்டு விழா' என்னும் தலைப்பில் முன்பு (பக்கம்-7) விளக்கப்பட்டுள்ளமை காண்க.

### தெய்வ விழா:

உலகெங்கணும் தெய்வங்களின் பெயரால் விழா நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. பொங்கல் விழாவில் பல்வேறு தெய்வங்களுக்கும் படையல் நடை பெறுவதாலும், தொடர்ந்து தைத் திங்களில் பல்வேறு தெய்வத் திருவிழாக்கள் நடைபெறுவதாலும், தைத் திங்கள் தெய்வத் திருவிழாவிற்கும் பெயர் பெற்ற தாகும். இது முன்னர் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

**உலகப் புத்தாண்டு:**

ஆண்டுதோறும் சனவரி முதல் நாள் உலகப் புத்தாண்டுப் பிறப்பாக இன்று உலகம் முழுவதும் கொண்டாடப் பெறுகிறது. இந்த நாளில் உலக மக்கள் சாதி-சமய-இன-நிற-மொழி-நாடு-கட்சி வேறு பாடுகளை யெல்லாம் மறந்து ஒருவர்க் கொருவர் வாழ்த்து நேரிலும் அஞ்சல் வாயிலாகவும் வழங்குதல், பரிசளித்தல், விருந்தளித்தல் முதலியன செய்து உறவாடுகின்றனர். பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் களியாட்டங்களும் நடைபெறுகின்றன. எப்படியோ சனவரி முதல் நாள் உலக மக்களின் உள்ளங்களில் இடம் பிடித்து விட்டது. இது வரலாற்றின் திருவிளையாடலாகும்.

இந்த உலகப் பெருஞ் சனவரித் திருநாளை யொட்டினாற்போல் தமிழர்களின் தைத் திங்கள் தொடங்குவது ஒருவகை இயற்கைப் பொருத்தமாகும். சனவரியில் செய்வது போலவே, தைத் திங்கள் பொங்கல் நாளிலும் ஒருவர்க்கொருவர் பொங்கல் பரிசும் பொங்கல் வாழ்த்தும் பரிமாறிக் கொள்வது மரபாயிருக்கிறது. வெளியூர்களிலுள்ள நண்பர்களும் உறவினர்களுங்கூட அஞ்சல் வாயிலாகப் பொங்கல் வாழ்த்து அனுப்பிக் கொள்வது சிறந்த மரபாய்த் திகழ் கிறது. உலகப் புத்தாண்டாகக் கருதப்படும் சனவரியை யொட்டினாற்போல் தமிழ்ப் புத்தாண்டாகத் தைத் திங்கள் அமைந்திருப்பதில் ஏதோ பொருள் உள்ளது. இது பின்னர்ப் பேசப்படும்.

**கிறித்துவர் பொங்கல்:**

வாழையடி வாழையாகப் பொங்கல் விழா செய்து பழகிய மரபில் வந்த கிறித்துவர்கள் சனவரி ஆறாம் நாளில் பொங்கல் விழா கொண்டாடுவது புதுச்சேரியில் இன்றும் நடைபெறுகிறது. இதற்குக் 'கிறித்துவர் பொங்கல்' என்று வழங்கப்படுகிறது. வேறு சில ஊர் களில் கிறித்துவர்களிடையே இது நடைபெறுவ தில்லை. சனவரி பதினான்கு அல்லது பதினைந்தாம் நாளில் முறையான பொங்கல் விழா தொடங்குவதற்கு முன்பே, சனவரி ஆறாம் நாளிலேயே புதுச்சேரிக் கிறித்துவர்கள் பொங்கல் விழா கொண்டாடுவது போற்றுதலுக்கு உரிய ஒரு செயலாகும்.

**மகர சங்கிராந்தி:**

தைத் திங்களின் தொடக்க நாள் இந்தியா முழுதும் 'மகர சங்கிராந்தி' என்னும் பெயரில் கொண்டாடப் பெறுகிறது. 'சங்கிராந்தி' என்ற சொல்லுக்கு, ஓர் இராசியிலிருந்து மற்றோர் இராசிக்குப் போகும் செயல் - என்பது பொருளாம். யார் போகும் செயல் சங்கிராந்தியாகும்? ஞாயிறு, திங்கள், செவ்வாய் முதலிய கோள்களுள் எந்தக்கோள் (கிரகம்) ஓர் இராசியிலிருந்து மற்றோர் இராசிக்குப் போனாலும் அது சங்கிராந்திதான். ஆனால், தலைமை பற்றி, ஞாயிறு ஓர் இராசியிலிருந்து மற்றோர் இராசிக்குப் போகும் செயலே சங்கிராந்தி எனச் சிறப்பாகக் குறிப்பிடும் மரபு எப்படியோ ஏற்பட்டு விட்டது.

கணி நூலார் (சோதிடர்கள்) உலகப் பெரு வெளியைப் பன்னிரண்டு கட்டங்களாகப் பிரித் துள்ளனர். ஒவ்வொரு கட்டத்திற்கும் இராசி எனப் பெயர் வழங்கப்பட்டுள்ளது. அப்பன்னிரண்டு இராசி களும் வருமாறு: மேடம், இடபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம்-என்பனவாகும், இந்த இராசிகள் கோள்களின் (கிரகங்களின்) வீடுகள் எனப்படும். ஞாயிறு என்னும் தலைமைக் கோள் ஒவ்வொரு இராசியிலும் ஒரு திங்கள் (மாச) காலம் இருப்பான். திங்களுக்கு ஒரு முறை இராசி விட்டு இராசி மாறிக் கொண்டேயிருப்பான். இராசி மாறும்போது திங்களின் (மாதத்தின்) பெயரும்மாறும். இந்த அடிப்படையின்படி ஒவ்வோர் இராசிக்கும் உரிய திங்கள் வருமாறு: மேடம் - சித்திரை; இடபம்-வைகாசி; மிதுனம்-ஆனி; கடகம்-ஆடி; சிம்மம்-ஆவணி; கன்னி-புரட்டாசி; துலாம்-ஐப்பசி; விருச்சிகம் - கார்த்திகை; தனுசு-மார்கழி; மகரம்-தை; கும்பம்-மாசி; மீனம் - பங்குனி ஆகும். ஒவ்வோர் இராசிக்கும் உரிய திங்கள் இன்னது என்பது நினைவில் இருக்க வேண்டும்.

ஞாயிறு இராசி விட்டு இராசி மாறும் போதெல்லாம் சங்கிராந்தி என்று சொல்லின், ஓர் ஆண்டில் பன்னிரண்டு சங்கிராந்திகள் இருக்கும். ஆனால் அவ்வாறு கூறுவதில்லை. ஞாயிறு மிதுனத்திலிருந்து கடகத்திற்கு வரும்போது 'கடக சங்கிராந்தி' எனவும், தனுசிலிருந்து மகரத்திற்கு

வரும்போது 'மகர சங்கிராந்தி' எனவும் இரண்டே சங்கிராந்திகள் கூறுவதே மரபாயுள்ளது. கடக சங்கிராந்தி என்பது ஆடித் திங்கள் பிறப்பாகும். மகர சங்கிராந்தி என்பது தைத் திங்கள் பிறப்பாகும். இவ்விரண்டினுள்ளும் தைத் திங்கள் பிறப்பாகிய மகர சங்கிராந்தியே மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படு கிறது; இதனால், சங்கிராந்தி என வெற்றுபடியாகச் சொன்னாலுமே,தைத் திங்கள் பிறப்பு என்று பொருள் கொள்ளும் சூழ்நிலை உருவாகிவிட்டது. ஞாயிறு இராசி விட்டு இராசி மாறும் பன்னிரண்டு சங்கிராந்தி களுள் கடக சங்கிராந்தியும் மகர சங்கிராந்தியுமே சங்கிராந்தி என்னும் பெயரால் வழங்கப்படுவதற்கு உரிய காரணமும் இவ்விரண்டினுள்ளும் மகர சங்கிராந்தியே மிகவும் சிறந்ததாகப் போற்றப் படுவதற்கு உரிய காரணமும் இனி விளக்கப்படும்.

## வட செலவும் தென் செலவும்:

ஞாயிறு காலையில் கிழக்கே தோன்றி மாலையில் மேற்கே மறைவதுபோல் நமக்குத் தோன்றுகிறது. நாம் வாழும் நில வுருண்டை கிழக்கு நோக்கி தன்னைத் தானே சுழற்றிக்கொண்டு ஞாயிற்றையும் சுற்றுவதால் இவ்வாறு நமக்குத் தெரிகிறது.ஞாயிறு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்வதுபோல் தோன்றினும், நாம் கிழக்கு நோக்கி நிற்போமாயின், நமக்குமுன் நேர் கிழக்கே ஞாயிறு தோன்றி நமக்குப்பின் நேர் மேற்கே ஞாயிறு மறைவதுபோல் தெரியாது. தைத் திங்கள் தொடங்கி ஆனித்திங்கள் வரையிலுமான ஆறு திங்கள்

காலத்தில் ஞாயிறு நமக்குச் சிறிது வடபுறமாகச் சாய்ந்து தெரியும். ஆடித்திங்கள் தொடங்கி மார்கழித் திங்கள் வரையிலுமான ஆறு திங்கள் காலத்தில் நமக்குச் சிறிது தென்புறமாகச் சாய்ந்து தெரியும். வடபுறமாகத் தெரியும் ஆறு திங்கள் காலத்தை 'உத்தராயணம்' என்றும், தென்புறமாகத் தெரியும் ஆறு திங்கள் காலத்தைத் 'தட்சணாயணம்' என்றும் வடமொழியில் கூறுவர், உத்தரம் என்றால் வடக்கு; அயணம் என்றால் செலவு-செல்லுதல்; உத்தராயணம் என்றால், தென்புறத்திலிருந்து வடபுறம் நோக்கிச் செல்லுதல் என்று பொருளாம். நாம் இதற்குத் தமிழில் 'வட செலவு' என்று பெயர் வழங்கலாம். தட்சணம் என்றால் தெற்கு; அயணம் என்றால் செலவு; தட்சணாயணம் என்றால், வடபுறத்திலிருந்து தென்புறம் நோக்கிச் செல்லுதல் என்று பொருளாம். நாம் இதற்குத் தமிழில் 'தென் செலவு' என்று பெயர் வழங்கலாம்.

நில நடுக் கோட்டிற்கு (பூ மத்திய ரேகைக்கு) $23\frac{1}{2}^{\circ}$ பாகை வடக்காகக் 'கடக ரேகை' (Tropic of Cancer) உள்ளது என்பதும், இதுவே ஞாயிறு வடக்கே செல்லக்கூடிய எல்லை என்பதும், ஜூன் 21-ஆம் நாள் நடுப் பகலில் கடக ரேகையில் தலைக்குமேல் நேர் செங்குத்தாக ஞாயிறு காயும் என்பதும், அடுத்து-நில நடுக் கோட்டிற்கு $23\frac{1}{2}^{\circ}$ பாகை தெற்காக மகர ரேகை (Tropic of Capricorn) உள்ளது என்பதும், இதுவே ஞாயிறு தெற்கே செல்லக்கூடிய எல்லை

என்பதும், டிசம்பர் 22-ஆம் நாள் நடுப் பகலில் மகர ரேகையில் தலைக்குமேல் நேர் செங்குத்தாக ஞாயிறு காயும் என்பதும், நில நூலில் படித்த இன்ன பிறவும் ஈண்டு ஒப்பு நோக்கற்பாலன. இனித தைத் திங்களுக்கு வருவோம்.

தைத் திங்களில் ஞாயிறு வடபுறம் நோக்கிச் செல்லத் தொடங்குகிறது. அதனால், தைத் திங்கள் தொடக்கத்தை உத்தராயண புண்ணிய காலம் எனக் கூறிக் கொண்டாடுகின்றனர், தைத் திங்களிலிருந்து ஆனித் திங்கள் வரையும் வடபுறமாக இருந்து தென் புறத்தை நோக்கி ஞாயிறு காயும்; அதனால்தான் தென் சாரியிலுள்ள வடகுப் பார்த்த வீடுகள் கோடைக் காலத்தில் வெப்பமுடையனவாகவும், வடசாரியிலுள்ள தெற்குப் பார்த்த வீடுகள் கோடையில் குளிர்ச்சி யுடையனவாகவும் உள்ளன. அடுத்து-ஆடித் திங்களில் ஞாயிறு தென்புறம் நோக்கிச் செல்லத் தொடங்குகிறது. அதனால் ஆடித் திங்கள் தொடக் கத்தைத் தட்சணாயண புண்ணிய காலம் எனக் கூறிக் கொண்டாடுகின்றனர். ஆடியிலிருந்து மார்கழிவரை தென்புறமாக இருந்து வடபுறம் நோக்கி ஞாயிறு காயும். அதனால்தான் வடசாரியிலுள்ள தெற்குப் பார்த்த வீடுகள் மழைகுளிர் காலத்தில் வெதுவெதுப்பாகவும், தென் சாரியிலுள்ள வடக்குப் பார்த்த வீடுகள் வாடைக் குளிர்சாரல் உடையன வாகவும் உள்ளன. தெற்குப் பார்த்த வீடுகளின் சிறபபு இப்போது புலனாகும்,

பன்னிரண்டு இராசிகளுக்குள் தைத் திங்களுக்கு உரிய மகர இராசியிலும், ஆடித் திங்களுக்கு உரிய கடக இராசியிலுமே ஞாயிறு முறையே வடக்கும் தெற்குமாகத் திசை மாறுவதால், பன்னிரண்டு சங்கிராந்திகளுக்குள் மகர சங்கிராந்தியும் கடக சங்கிராந்தியுமே சிறப்பாகப் போற்றப் பெறுகின்றன. இவ்விரண்டினுள் மகர சங்கிராந்தியாகிய தைத் திங்கள் தொடக்கம் மிகவும் சிறபபாகப் போற்றப் படுவதற்கு உரிய காரணத்தை இனி ஆராய்வோம்:

**தேவர் பகல்-இரவு:**

மாந்தராகிய நமது ஓராண்டு என்பது தேவர்கட்கு ஒருநாள் என்று புராணங்களில் புகலப்பட்டுள்ளது. நமக்குத் தை முதலாக ஆனி ஈறாக உள்ள ஆறு திங்கள் காலம் தேவர்க்குப் பகல் பொழுதாம். எனவே உத்தராயணமாகிய வடசெலவுக் காலம் தேவரின் பகல் எனவும் தட்சணாயண மாகிய தென் செலவுக் காலம் தேவரின் இரவு எனவும் கொள்ளவேண்டும். அங்ஙனமெனில், நமக்கு ஞாயிறு தோன்றும் காலைப் பொழுது போல, தேவர்க்குத் தைத்திங்கள் தொடக்கம் காலைப் பொழுதாகும். இரவு மறைந்து பகல் தோன்றுங்கால் அனைவருக்கும் மகிழ்ச்சியே யல்லவா?

> 'உலகம் உவப்ப வலனேர்ப்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாங்கு'

என்னும் முருகாற்றுப் படைப் பாடலில், ஞாயிறு தோன்றும்போது உலகம் முழுவதும் உவப்பு அடைவ

தாக நற்கீரர் கூறியுள்ளது ஈண்டு ஒப்புநோக்கற் பாலது. எனவே, பொழுது புலரும் காலை நேரமாகிய தைத்திங்கள் தொடக்கமான மகர சங்கிராந்தி, பொழுது போகும் மாலை நேரமாகிய ஆடித்திங்கள் தொடக்கமாகிய கடக சங்கிராந்தியினும் சிறப்புறக் கொண்டாடப்படுகிறது,

மார்கழித் திங்கள் என்பது தேவர்க்கு வைகறைக் காலமாகும். ஆறு திங்கள் காலமாக இராப்பொழுதில் விளக்கம் அற்றிருந்த மந்தமான சூழ்நிலை மாறத் தொடங்குகிற காலம் மார்கழியாகும். ஆறு திங்கள் காலம் பீடித்திருந்த பீடைகளின் கழிவுக் கால மாதலின் மார்கழியைப் 'பீடை மாதம்' என்று பெரும்பாலார் சொல்வது வழக்கம். அந்தப் பீடையைத் தொலைப் பதற்காகத்தான் மார்கழி முழுவதும் வைகறையில் நீராடிப் பாடல் பாடி வழிபாடு செய்யப்படுகிறதாம். பீடை தொலைந்தது என்பதற்கு அறிகுறியாக, மார்கழி இறுதி நாளாகிய போகி நாளில் பழங்குப்பைகளைக் கொளுத்தித் தூய்மை செய்து, வாழ்க்கையைப் புதுப் பிக்கின்றார்களாம். பழைய நம்பிக்கை உடையவர்களுள் பலர் கூறுவது இது.

பீடை தொலைவதற்காக மார்கழியில் மங்கல வினைகள் செய்யப்படுதலின், மார்கழியை மங்கல மாதம் எனக்கொள்ளும் வழக்கம் குடிகொண்டு விட்டது. கறுப்பு ஆட்டை வெள்ளாடு எனவும், எந்த நிகழ்ச்சியும் செய்வதில்லாத செவ்வாய்க் கிழமையை 'மங்கல வாரம்' எனவும் வழங்குவது போன்றதுதான் இது. இஃதும்

பழைய நம்பிக்கையுடைய பலரது கருத்தாகும்; எனவே இரவுப் பீடை தொலைந்து, மகிழ்ச்சிக்கு உரிய பகல் தொடங்கும் காலமாகிய தைத்திங்கள் தொடக்கம் என்னும் மகர சங்கிராந்தி, இரவுத் தொடக்கமாகிய கடக சங்கிராந்தியினும் மிகவும் சிறந்ததாயிற்று. இவ்வாறாகப் புராண நம்பிக்கையின்படி, தைத்திங்கள் தொடக்கமானது, 'சங்கிராந்தி' என்னும் பெயரில் இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது எங்கே யாரால் கொண்டாடப்படினும், இவ்வளவு பொருத்த முடைய தைத்திங்கள் நாளைத் தமிழர் தமது திருநாளாகத் தேர்ந்தெடுத்திருப்பது, தமிழரின் நில இயல்-கணியியல்-வானவியல் அறிவின் திறனுக்குத் தக்க சான்றாகும்.

**வடதுருவம்-தென்துருவம்:**

நாம் இதுகாறும், புராணங்களை அடிப்படையாகக் கொண்டு வடசெலவு-தென்செலவு பற்றியும் தேவரின் பகலிரவு பற்றியும் பேசினோம். தேவரின் பகலிரவு கற்பனையெனினும், ஞாயிறின் வட செலவும் தென் செலவும் நாம் நேரில் பார்த்துவரும் காட்சியேயாகும். தேவரின் பகலிரவு என்பதுங்கூட முழுவதும் பொய்க் கற்பனையாகாது; அதிலும் ஒரு நடைமுறை உண்மை மறைந்திருக்கிறது. அந்த உண்மை, நில இயல்-வான இயல் ஆகியவை தொடர்பானது. அந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டே வட செலவு-தென் செலவு, தேவரின் பகலிரவு ஆகியவை விவரிக்கப் பட்டுள்ளன. இது தெரியாமலேயே பலர், உத்தரா

யணம்-தட்சணாயணம்-தேவர் பகலிரவு ஆகியவை பற்றிப் பேசிக்கொண்டுள்ளனர். இதன் விவரம் வருமாறு.

நாம் வாழும் பகுதியில், ஒரு நாள் என்பது, பகல் பன்னிரண்டு மணி நேரமும் இரவு பன்னிரண்டு மணி நேரமுமாகப் பெரும்பாலும் சரிபாதியாக இருக்கும். உலகின் எல்லாப்பகுதிகளிலும் இந்த நிலையைக் காண முடியாது. பகல் இரவு நேரங்களில் பற்பல மாறுதல்கள் இருக்கும். ஞாயிறு முற்பகல் பத்து மணிக்குத் தோன்றிப் பிற்பகல் இரண்டு மணிக்கு மறைந்துவிடும் இடங்களும் உள்ளன; அங்கே பகல் நான்கு மணி நேரமும் இரவு இருபது மணி நேரமுமாக ஒரு நாள் உள்ளது. வேறு சில இடங்களில் ஞாயிறு வைகறை நான்கு மணிக்கே தோன்றி இரவு எட்டு மணிக்கு மறையும்; அங்கே பகல் பதினாறு மணி நேரமும் இரவு எட்டு மணி நேரமும் ஆகும். இவ்வாறு இன்னும் பல்வேறிடங்களிலும் பலப் பல மாறுதல்கள் உண்டு.

இதனினும் வியப்பிற்கு உரிய செய்தி ஒன்றுள்ளது. நாம் வாழும் நில உருண்டையின் வடக்குப் பகுதி வடதுருவம் எனவும் தென் பகுதி தென் துருவம் எனவும் வழங்கப்படுவது அனைவரும் அறிந்ததே, இந்த இரு துருவப் பகுதிகளிலும் பகல் எத்தனை மணி நேரம்-இரவு எத்தனை மணி நேரம் என அறிந்தால் பெருவியப்பு உண்டாகும். இவ்விடங்களில் பகலும் இரவும் மணிக் கணக்கிலோ-நாள் கணக்கிலோ-வாரக் கணக்கிலோ இல்லாமல் மாதக்

கணக்கில் உள்ளன. அதிலும், ஒரு மாதமோ-இரு மாதமோ அல்ல; சரியாக ஆறு மாதம் பகல்-ஆறு மாதம் இரவாகும். இது மிகவும் வியப்பல்லவா?

வட துருவத்தில் தொடர்ந்தாற்போல் ஆறு திங்கள் காலம் ஞாயிறு மறையாமல் காய்ந்துகொண்டிருக்கும்; அந்தக் காலம் வட துருவத்திற்குப் பகலாகும். அப்பொழுது தென் துருவத்தில் தொடர்ந்தாற்போல் ஆறு திங்கள் காலம் ஞாயிறே தெரியாது; அந்தக் காலம் தென் துருவத்திற்கு இரவாகும். அடுத்த ஆறு திங்கள் காலத்தில் வட துருவத்தில் இரவும் தென் துருவத்தில் பகலும் இருக்கும். இப்படி மாறி மாறி இரு துருவங்களிலும் சேர்ந்தாற்போல் ஆறு திங்கள் பகலாகவும் ஆறு திங்கள் இரவாகவும் இருக்கும்.

வட துருவத்தில் தொடர்ந்தாற்போல் ஆறு திங்கள் காலம் ஞாயிறு காய்கிறதென்றால் நம் பகுதியில் காய்கிறதுபோல் இராது. இரவு முடிந்து பகல் தொடங்கியதும் ஞாயிறு அடி வானத்தில் தோன்றும்; தோன்றி அடி வானத்தைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே மேலே ஏறும். கண்காட்சிகளில் மரணக் கிணற்றில் சைக்கிள் விடுபவர்கள் கிணற்றின் அடியிலிருந்து கிணற்றைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே மேலே ஏறுவது போல், வட் துருவத்திலும் ஞாயிறு அடி வானத்தைத் தொடர்ந்து சுற்றுச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே மேலே ஏறும். இப்படி மூன்று திங்கள் காலம் மேல் நோக்கி ஏறிக்

கொண்டிருக்கும். பின்னர்க் கீழே இறங்கத் தொடங்கும். ஏறியது போலவே இறங்கும்போதும் அடிவானத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டேயிறங்கும். மரணக் கிணற்றில் சைக்கிளில் மேலே ஏறியவர்கள். இறங்கும்போதும் சுற்றி வட்ட மிட்டுக் கொண்டே இறங்குகிறார்கள் அல்லவா? அதுபோலத்தான் இஃதும்! முதல் மூன்று திங்களின் முடிவில் ஞாயிறு மேலே சென்றிருக்கும் உயரம், நம் பகுதியில் காலை ஏழரை மணிக்கு ஞாயிறு தெரியும் உயரம் அளவே இருக்கும். இப்படியாக, மேலே ஏற மூன்று திங்களும் கீழே இறங்க மூன்று திங்களுமாக ஆறு திங்கள் காலம் தொடர்ந்து வட துருவத்தில் ஞாயிறு தெரிந்துகொண்டிருக்கும். அதனால் அந்த ஆறு திங்கள் காலமும் அங்குத் தொடர்ந்து பகலாக இருககும. தென் துருவத்தில் பகலாக இருக்கும் காலத்திலும் இதேபோல நடைபெறும். அபபோது வட துருவம் இரவாக இருக்கும். இது வெறுங் கற்பனையன்று. இன்றும் துருவப் பகுதிகளில் சென்று காணின் உண்மை விளங்கும்.

இந்த நில இயல்-வான இயல் உண்மையை அடிப் படையாகக கொண்டுதான் தேவரின் பகலும் இரவும் கற்பனை செய்யப்பட்டிருக்க வேண்டும். தை முதல் ஆனி ஈறாக உள்ள ஆறு திங்கள் காலமாகிய வட செலவுக காலம்(உத்தராயணம) வட துருவத்தின் பகல் காலமாகும; இதுதான் தேவரின் பகல் காலமாம். ஆடி முதல் மார்கழி ஈறாக உள்ள ஆறு திங்கள் காலமாகிய

தென் செலவுக் காலம் (தட்சணாயணம்) வட துருவத்தின் இரவுக் காலமாகும்; இதுதான் தேவரின் இரவுக் காலமாம். தென் துருவத்திலும் மாறி மாறி ஆறு திங்கள் பகலாகவும் ஆறு திங்கள் இரவாகவும் இருக்குமாயினும், இந்தத் தென் துருவத்தை அடிப்படையாகக் கொண்டு தேவரின் பகலும் இரவும் கற்பனை செய்யப்படவில்லை. வட துருவத்தின் பகலையும் இரவையும் அடிப்படையாகக் கொண்டு முறையே தேவரின் பகலும் இரவும் கற்பனை செய்யப் பட்டுள்ளன. வட துருவத்தின் பகல் தைத் திங்கள் கால அளவில் தொடங்குகிறது எனவே, இந்தக் கற்பனையின்படி நோக்கினும் தைத் திங்களின் பெருஞ் சிறப்பு நன்கு விளங்கும்.

தைத் திங்கள் தொடக்கத்தில் ஞாயிறு வடபுறம் நோக்கி நகர்வதாகக் கூறப்பட்டது. 'சரியாகத் தை முதல் நாளில் ஞாயிறு வடபுறம் நோக்கி நகர்வதில்லை; தைத்திங்களில் வளர்பிறையில் வரும் சப்தமி நாளன்றே- அஃதாவது அமாவாசை கழிந்த ஏழாம் நாளே ஞாயிறு வடபுறம் நோக்கிச் செல்லத் தொடங்குகிறது; அதுதான் 'இரத சப்தமி' என்பது ஒரு கொள்கை. இரத சப்தமி பற்றி முன்பே ஓரிடத்தில் (பக்கம்.. 69) விளக்கப்பட்டுள்ளது.'ஞாயிறு ஒவ்வொரு மாதத்திலும் ஏழாம் நாளே அடுத்த இராசியை நோக்கத் தொடங்கி விடுகிறது; இந்த முறையில் நோக்கின், தனுர் மாதம் எனப்படும் மார்கழி ஏழாம் நாளே, தை மாதத்திற்கு உரிய மகர ராசியை ஞாயிறு நோக்கத்

தொடங்கிவிடுகிறது' என்பது ஒரு கொள்கை. இந்த இரு கொள்கைக்கும் இடைப்பட்டதாகத் தைத் திங்கள் தொடக்கம் இருககிறது. அஃதாவது,-மார்கழி ஏழாம் நாளுக்கும் தைத் திங்களில் வரும் இரத சப்தமி நாளுக்கும் இடையில் தைத் திங்கள் தொடக்கம் இருப்பது காண்க. நாளடைவில் காலக் கணக்கு வேறு படுவது இயற்கை.

ஏதோ நாள் கணக்கு சிறிது முன் பின்னாக இருப் பினும், தேவர் பகல் எனவும் வடதுருவப் பகல் எனவும் வட செலவு (உத்தராயணம்) எனவும் கூறப்படும் நன்னாளின் தொடக்கமாகத் தைத் திங்கள் தொடக்கம் இயற்கையாக அமைந்திருப்பது எண்ணத்தக்கது. பணடைக காலத்தில் தமிழர்கள் இவற்றையெல்லாம் நன்கறிந்தே, தைத் திங்கள் தொடக்க நாளைத் தமது சிறப்புத் திருநாளாகத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்று கூறின் மிகையாகாது.

## தமிழ்ப் புத்தாண்டு:

இந்தக் காலத்தில் தமிழகத்தில் தமிழ்ப்புத்தாண்டுப் (புது வருடப்) பிறப்பாகச் சித்திரைத் திங்களின் முதல் நாள் கொண்டாடப்படுகிறது. அந்த நாளைப் பட்டி தொட்டியெல்லாம் மககள் 'வருஷப் பிறப்பு வருஷப் பிறப்பு' என வழங்குகின்றனர். இஃது ஒரு கொள்கை. பழைய சேரநாடாகிய மலையாளத்தின் தென் பகுதியிலும், திருநெல்வேலியுளளிட்ட தென்பாண்டி நாட்டின் சில பகுதிகளிலும், ஆவணித் திங்களின் முதல் நாள் புத்தாண்டுப் பிறப்பாகக் கொண்டாடப்

படுகிறது. இஃது ஒரு கொள்கை. இப்போது பலர் தைத்திங்களின் முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பு எனக் கூறிக்கொண்டாடுகின்றனர். இஃது ஒரு கொள்கை. இம்மூன்று கொள்கைகளிலும் ஏதேனும் உண்மை உள்ளதா?- ஏதேனும் பொருத்தப்பாடு புலப் படுகிறதா?- எனக் காண ஒவ்வொன்றாக ஆய்வாம்:

## சித்திரைப் பிறப்பு:

உலகப் பெருவெளி பன்னிரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளமையும், ஒவ்வொரு கட்டமும் இராசி என்னும் பெயரால் வழங்கப்படுகின்றமையும், மேடம் முதல் மீனம்வரை இராசிகள் பன்னிரண்டாயுள்ள மையும், மேடம் முதலான பன்னிரண்டு இராசிகளுக்கும் சித்திரை முதலாகப் பங்குனி ஈறாக உள்ள பன்னிரண்டு திங்கள்களும் முறையே உரியனவாயுள்ளமையும், திங் களுக்கு ஒரு முறை ஞாயிறு இராசிவிட்டு இராசி மாறும் முறைமையும் முன்பே (பக்கம்-113) விளக்கப் பட்டுள்ளன. இந்த அடிப்படையில் நோக்குங்கால், முதல் இராசியாகிய மேட இராசிக்கு,முதல் திங்களாகிய சித்திரை உரியது என்பது புலப்படும். ஞாயிறு மேட இராசியில் இருக்கும் காலம் சித்திரைத் திங்களாகும். ஞாயிறு மேட இராசி வீட்டில் வந்து தங்கியிருக்கும் போது 'உச்சம்' (உயர் வன்மை) பெற்றுவிடுகிறான் என்பது கணிப்புக் கலையின் முடிபு. எனவே ஞாயிறு 'உச்சம்' பெற்றிருக்கும் மேட வீட்டுத் திங்களாகிய சித்திரை ஆண்டின் தொடக்கமாகக் கொள்ளப்பட்டது.

மற்றும், ஞாயிறு சுற்றிவரும் பாதையின் தொடக்க இடமாக இந்த மேட வீடு ஒரு காலத்தில் இருந்தாகக் கூறப்படுகிறது. இப்போது இந்தத் தொடக்கப் புள்ளி (First point of Aries) பூரட்டாதிக்கு அருகில் உள்ளது. எனவே, தமிழில் 'தகர் மனை' எனப்படும் மேட வீடு ஞாயிற்றின் உச்ச வீடாக இருப்பதாலும், ஒரு காலத்தில் ஞாயிறு சுற்றுப் புறப்பாட்டின் தொடக்கப் புள்ளியாக இருந்தமையாலும் சித்திரைத் திங்கள் புத்தாண்டுத் தொடக்கமாகக் கொள்ளப்பட்டதில் வியப்பில்லை.

**ஆவணிப் பிறப்பு:**

நாட்டுக்கு நாடு-மதத்துக்கு மதம்-இனத்துக்கு இனம்-புத்தாண்டுப் பிறப்பு மாறுபட்டிருப்பதை இன்று உலகில் நாம் கண்டு வருகிறோம். ஆனால், தமிழர்க்குள்ளேயே சித்திரையைப் புத்தாண்டாகச் சிலரும், ஆவணியைப் புத்தாண்டாகச் சிலரும் கொண்டிருப்பது வியப்பே. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பக்கத்தில் இருந்தவர்கள் அமைத்துக் கொண்ட அமைப்பு இது. எனவே, இது குறித்தும் பெரிதாக வியப்பதற்கில்லை. ஆவணியைப் புத்தாண்டாகத் தென் பகுதியினர் கொண்டிருப்பதிலும் தக்க பொருத்தப்பாடு உள்ளது. பன்னிரண்டு இராசிகளுள் ஐந்தாவது 'சிம்மம்' என்னும் இராசியாகும். இந்த இராசிக்கு உரிய திங்கள் ஆவணியாகும். தமிழில் 'அரி மனை' எனப்படும் சிம்ம இராசி வீட்டில் ஞாயிறு தங்கியிருக்கும் திங்கள்தான் ஆவணி. பன்னிரண்டு

இராசி வீடுகளுள் ஞாயிறு, திங்கள், செவ்வாய் முதலிய கோள்களுக்குச் சொந்த வீடு உண்டு. இவற்றுள் அரிமனையாகிய சிம்ம வீடு, ஞாயிற்றின் ஆட்சிக்கு உரிய சொந்த வீடாகும். எனவே, ஞாயிறு ஆட்சி பெற்றிருக்கும் சொந்த வீடாகிய சிம்மம் என்னும் ஆவணித்திங்களைப் புத்தாண்டாகக் கொண்டது மிகவும் பொருத்தமே.

ஞாயிற்றுக்கு மற்ற பதினொரு வீடுகளும் இரவல் வீடுகளாம். பதினொரு திங்கள் காலம் இரவல் வீடுகளில் சுற்றிக்கொண்டிருந்த ஞாயிறு சொந்த வீடாகிய சிம்மத்தில் புகுவதாகிய ஆவணித்திங்களின் தொடக்கத்தை அந்தககாலத்தில் புத்தாண்டாக மக்கள் கொண்டாடினர். இந்த நாளில் புத்தாடை உடுத்திப் புதுவிழாக் கொண்டாடுவர்; புதுக்கணக்கு போடுவர்; புதுத் தொழில் தொடங்குவர். 'கொல்லம்' ஆண்டு ஆவணியில் தான் தொடங்குகிறது என்பது இவண் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியம் முதலிய நூல்களிலும் ஆவணியே முதலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

> **''காரும் மாலையும் முல்லை குறிஞ்சி**
> **கூதிர் யாமம் என்மனார் புலவர்''**

எனத் தொல்காப்பியமும்.

> **''காரே கூதிர் முன்பனி பின்பனி**
> **சீரிள வேனில் வேனில் என்றாங்கு**
> **இருமூன்று திறத்தது தெரிபெரும் பொழுதே''**

என அகப்பொருள் விளக்கமும், ஆவணித்திங்களாகிய கார்ப் பருவத்தையே முதலில் கூறியுள்ளன. மற்றும்,

**"ஆவணி முதலா இரண்டிரண் டாக
மேவின திங்கள் எண்ணினர் கொளலே,"**

எனத் திவாகர நிகண்டும்,

**"மருவும் ஆவணியே ஆதி மற்றிரண் டிரண்டு மாதம்
பருவம் மூவிரண்டும் ஆய்ந்து பார்த்திடின் வாய்த்த பேராம்"**

எனச் சூடாமணி நிகண்டும் ஆவணித் திங்களையே முதலில் தொடங்கியிருப்பது ஈண்டு ஒப்பு நோக்கற் பாலது.

## தைப் பிறப்பு:

ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்டதெனக் கூறப்படும் தொல்காப்பியம் முதலான பழந்தமிழ் நூல்களில் ஆவணியே முதலிடம் பெற்றிருப்பதை நோக்குங்கால், பழந் தமிழ் மக்களின் பழக்க வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டே அந்நூல்களில் அவ்வாறு சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகும். சித்திரையினும் ஆவணிக்கே தமிழ் நூல்கள் முதலிடம் தந்துள்ளன. இந்நிலையில், தைத் திங்களைத் தமிழ்ப் புத்தாண்டாகக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்?

உலக வரலாற்றை நோக்குங்கால், ஆண்டு அமைப்பும் திங்கள் அமைப்பும் காலத்துக்குக் காலம் வேறுபட்டிருப்பது புலனாகும், இப்போது சனவரி முதல் டிசம்பர் ஈறாகப் பன்னிரண்டு திங்கள் அமைத்துச் சொல்லப்படும் மேலை நாட்டு ஆண்டு

அமைப்பு பழங் காலத்தில் இந்த முறையில் இல்லை. எத்தனையோ முறை பல மாறுதல்கள் பெற்ற பின்னரே இப்போதுள்ள முறை நிலை பெற்றதாகச் சொல்லப்படுகிறது. ஒரு காலத்தில் 'மார்ச்சு' திங்கள் முதல் நாள் ஆண்டின் தொடக்கமாகக் கொள்ளப் பட்டிருந்தது. மார்ச்சு 25-ஆம் நாள் ஒரு காலத்திலும், டிசம்பர் 25-ஆம் நாள் ஒருகாலத்திலும் புத்தாண்டுப் பிறப்பாகக் கொண்டாடப்பட்டதும் உண்டு.

பண்டு 'ரோமுலஸ்' என்ற உரோமப் பேரரசன் காலத்தில் பத்து மாதங்களே இருந்தன. மார்ச்சு முதல் மாதமாகும். பத்து மாதங்களுக்கும் உரிய மொத்த நாட்கள் 304 நாட்களாகும். அப்போது, செப்தெம்பர் ஏழாவது மாதம்; 'செப்த்தெம்' (Spetem) என்னும் இலத்தீன் சொல்லுக்கு ஏழு என்பது பொருள். ஒக்தோபர் எட்டாவது மாதம்; 'ஒக்த்தோ' (Octo) என்னும் இலத்தீன் சொல்லுக்கு எட்டு என்பது பொருள். நொவெம்பர் ஒன்பதாம் மாதம்; 'நொவெம்' (Novem) என்னும் இலத்தீன் சொல்லுக்கு ஒன்பது என்பது பொருள். தெசெம்பர் பத்தாம் மாதமாகும்; 'தெசெம்' (Decem) என்னும் இலத்தீன் சொல்லுக்குப் பத்து என்பது பொருள். பிரெஞ்சு, சம்சுகிருதம் முதலிய மொழி களிலும் இந்த எண்ணுப் பெயர்ச் சொல்லுருவங்கள் இந்தப் பொருளில் உள்ளமையைக் காணலாம். முன்பு ஏழாவது மாதமாக இருந்த செப்தெம்பர் இப்போது ஒன்பதாவதாகவும், எட்டாவதான ஒக்தோபர் இப் போது பத்தாவதாகவும் ஒன்பதாவதாக இருந்த

நொவெம்பர் இப்போது பதினோராவதாகவும், பத்தாவ தான தெசெம்பர் இப்போது பன்னிரண்டாவது மாத மாகவும் மாறியிருக்கும் விந்தையைக் காண்கிறோம். ஏழாவது மாதமாகிய செப்தெம்பருக்கு முன்னால் ஜூலை, ஆகஸ்ட் என்னும் இரண்டு மாதங்கள் இடையே புகுத்தப்பட்டதால், செப்தெம்பர் முதலிய மாதங்கள் இரண்டிரண்டு எண்கள் வீதம் பின்னுக்குத் தள்ளப்பட்டன. அதனால் மாதங்களும் பன்னிரண் டாயின.

மன்னர் ரோமுலஸ் காலத்திலிருந்து பத்து மாதங் களாக இருந்த ஆண்டமைப்பை, ஜூலியஸ் சீசர் என்னும் உரோமப் பேரரசன் பன்னிரண்டு மாதங்களாக் கினான். இவன் எகிப்தை வென்றபோது, அங்கு ஆண்டுக்கு 365 நாட்கள் கொண்ட 'நாள் காட்டி' (பஞ்சாங்கம்) இருப்பதைக் கண்டு தானும் அவ்வாறே சீர்திருத்தி அந்த முறையை கி.மு. 46-ஆம் ஆண்டு சனவரி முதல் நாள் தொடங்கி ரோமநாட்டிலும் நடை முறைக்குக் கொண்டு வந்தான்.

மாதங்களின் பெயரமைப்பிலும் அன்று பல மாறுதல்கள் செய்யப்பட்டன. ஐந்தாவது மாதத்திற்கு 'குயின்டிலியுஸ்' என்னும் பெயர் இருந்தது; 'குயிங்க்' (Quinque) என்னும் இலத்தீன் சொல்லுக்கு ஐந்து என்பது பொருள். ஆறாவது மாதத்திற்கு 'செக்ஸ்டிசஸ்' என்னும் பெயர் இருந்தது; 'செக்ஸ்' என்னும் இலத்தீன் சொல்லுக்கு ஆறு என்பது பொருள். ஐந்தாவது மாதம், ஆறாவது மாதம் என்னும் பொரு

ளுடைய இந்தப் பெயர்கள் ஒழிக்கப்பட்டு விட்டன. ஜூலியஸ் சீசரின் பெயரில் ஜூலை என்னும் மாதப் பெயரும், 'அகஸ்டஸ்' என்ற மன்னன் பெயரில் ஆகஸ்ட் என்ற மாதப் பெயரும் இடையிலே புகுந்தன.

இவ்வாறு பல மாறுதல்கள் பெற்ற பன்னிரண்டு மாதங்களுடன் ஆண்டு ஓடிக்கொண்டிருந்தது. ஜூலியஸ் சீசரின் சீர்திருத்த நாள்காட்டி (காலண்டர்) பதினெட்டாம் நூற்றாண்டிற்கு மேலும் பின்பற்றப் பட்டு வந்தது. இந்நிலையில், 'கிரி கிரி' என்னும் பதின்மூன்றாம் போப் ஆண்டவர் பழைய நாள் காட்டியில் சிற்சில மாறுதல்கள் செய்து புதியதொரு நாள் காட்டியை உருவாக்கினார். அது 1852-ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இதற்குக் 'கிரிகிரி காலண்டர்'என்னும் பெயர் வழங்கப்படுகிறது. இப்போது உலகம் முழுவதும் பின்பற்றி வருவது இந்தக் கிரி கிரி நாட்குறிப்பே. சில இடங்களில் மட்டும் சிறிது வேறுபட்ட கிரேக்க முறை பின்பற்றப் பட்டுவருகிறது. கி, பி. 525-ஆம் ஆண்டிலிருந்து சனவரி முதல் நாளைப் புத்தாண்டுப் பிறப்பாகக் கொண்டாடச் செய்த பெருமை 'டையோனிசியஸ்' என்னும் கிறித்துவ சமய ஆசானுக்கு உரியதாகும்.

இன்றுள்ள உலக நாள்காட்டியின் வரலாற்றை ஆராயுமிடத்து, திங்கள் - ஆண்டு அமைப்பும் புத்தாண்டுப் பிறப்பும் இடத்துக்கு இடம்-காலத்துக்குக் காலம் மாறுவது இயற்கை என்னும் பேருண்மை விளங்கும். இப்பொழுதுள்ள உலக நாள்காட்டியிலேயே

சில குறைபாடுகள் இருப்பதால், அவற்றைத் திருத்திப் புதிய நாள் காட்டி உருவாக்கும் முயற்சியை உலக நாடுகள் நிறுவனம் (ஐ. நா. சபை) மேற்கொண்டுள்ள செய்தி இங்கே குறிப்பிடத்தக்கது. நமது இந்திய அரசு இப்பொழுது புதிதாய் அமைத்திருக்கும் 'சக ஆண்டு முறை' (Saka National Calendar) நாள்காட்டியில், மார்ச்சு 22-ஆம் நாள் புத்தாண்டுப் பிறப்பாக வருவது ஈண்டு எண்ணத்தக்கது.

இந்த அடிப்படையுடன் நோக்குங்கால், சித்திரையை ஒரு சாராரும் ஆவணியை ஒரு சாராரும் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கமாகக் கொண்டிருக்கும் தமிழ் நாட்டில் தைத் திங்களையும் புத்தாண்டுத் தொடக்கமாக ஒரு காலத்தில் ஒரு சாரார் கொண்டதில்-கொள்வதில் வியப்பில்லை. அதற்கேற்ற நில இயல்-வான இயல் சூழ்நிலையும் தைத் திங்களுக்கு உண்டு என்பது முன்பே விளக்கப்பட்டுள்ளது. அஃதாவது-வட துருவப் பகல்-தேவர் பகல்-ஞாயிற்றின் வட செலவு (உத்தராயணம்) ஆகியவை ஒத்தமைந்துள்ள சூழ்நிலையே அது. மக்களுக்கு ஓர் ஆண்டு எனப்படுவது தேவருக்கு ஒருநாள்; தேவருக்குப் பொழுது விடிந்து பகல் தொடங்குகிற காலம் என்பது, வட துருவத்தில் பகல் தொடங்குகின்ற காலமாகும்; அதுதான் தமிழகத்தில் தைத் திங்கள் தொடங்குகிற காலமும் ஆகும். எனவே, மக்களின் புத்தாண்டுப் பிறப்பு தைத் திங்கள் பிறப்பே என்று கூறுவது எல்லா வகையிலும் பொருத்தமுடையதாகும்.

**புத்தாண்டுப் பொருத்தம்:**

தைத் திங்கள் தொடக்கத்தைப் புத்தாண்டுப் பிறப்பு என உறுதி செய்வதற்கு உரிய பொருத்தப் பாடுகள் முன்பே விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அப் பொருத்தப்பாடுகள் வருமாறு: தூய்மை செய்தல், தொடர்ந்து பலநாள் விழா கொண்டாடுதல், தெய்வ பூசனைகள். உழவரையும் தொழிலாளரையும் போற்றுதல், நலம் வினவல், விருந்து, பரிசளிப்பு. வாழ்த்து, ஏழை எளியவர்க்கு உதவி, நோன்பு, நீராடல், கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள், திருமணம் முதலிய மங்கல நிகழ்ச்சிகள், பல்வேறு வகை விழாககள், தொழிலாளர் ஓய்வு, நாள் கொள்ளல், புதுவினை தொடங்குதல் முதலியன தைத் திங்களில் நடைபெறுவது, தைத் திங்கள் பிறப்பு தமிழரின் புத்தாண்டுப் பிறப்பாகும் என்னும் கொள்கைக்குப் பொருத்தமான சான்றாகும்.

**தித்திக்கும் தைத் திங்கள்:**

பழந் தமிழ்ச் சங்க இலக்கியங்கள் மாதத்தைத் திங்கள் என்னும் சொல்லாலேயே குறிப்பிட்டுள்ளமை முன்பே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அதிலும், தைத் திங்களே மிகுதியாகப் பழந் தமிழ் நூல்களில் பயின்று வந்துள்ளது என்பதும் ஈண்டு நினைவுகூரத்தக்கது, திங்கள் என்பது சந்திரனைக் குறிக்கும் தமிழ்ச்சொல். சந்திரன், நாம் வாழும் இந்தப் பூவுருண்டையைச் சுற்றி வரும் ஒரு துணைக் கோளாகும். நில உருண்டையை (பூமியை) நிலா உருண்டை (சந்திரன்) ஒரு முறை சுற்றிவர முப்பது நாட்கள் ஆகின்றன. முப்பது நாள்

கொண்டது ஒரு மாதம். இந்த அடிப்படையில் மாதத்திற்குத் 'திங்கள்' என்னும் பெயர் வழங்கப் பட்டுள்ளது.இந்த முறைக்கு வடமொழியில் 'சாந்திர மானம்' என்று பெயர் வழங்குவர். சீவக சிந்தாமணி-காந்தருவதத்தையார் இலம்பகத்தில்உள்ள 'இங்கிவர்கள் இவ்வா றிருந்தினிது வாழ' என்னும் (முதல்)பாடலின் உரையில், நச்சினார்க்கினியர் வரைந்துள்ள,

''பன்னிரு மதியின்' என்றும் 'ஆறிரு மதியின்' என்றும்...தேவன், 'மதியின்' என்று மதியைக் கூறின மையின், சாந்திரமான பட்சம் பற்றிக் கூறினான் என்றும் உணர்க.''

என்னும் உரைப் பகுதி காண்க. மதி எனினும் திங்கள் எனினும் சந்திரன் எனினும் ஒன்றேயாகும். இவ்வாறு சந்திரனது போக்கை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடுவது 'சாந்திர மானம்' ஆகும். இதனைத் தமிழில்'திங்கள் முறை' எனலாம். சித்திரை முதலாகப் பங்குனி ஈறாக நாம் வழங்கும் பன்னிரு திங்கள் பெயர்களும் திங்கள் முறையை யொட்டி யெழுந்த வழக்காறாகும். சிலர், சித்திரைத் திங்கள், வைகாசித் திங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, மேட மாதம், இடப மாதம் எனக் கூறுவர். பழைய சேர நாடாகிய மலையாளத்திலும் இதனைக் காணலாம். இவ்வாறு இராசியின் பெயரால் மாதத்தை வழங்குவது 'சௌர மானம்'எனப்படுகிறது. சூரியனது போக்கை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடுவது 'சௌர மானம்' ஆகும். இதனைத் தமிழில் 'ஞாயிறு முறை' என வழங்கலாம். ஆனால் தமிழர்கள் திங்கள்

முறையிலேயே மாதங்களின் பெயர்களை வழங்கு கின்றனர். மாதத்தின் பெயரோடு திங்கள் என்னும் சொல்லையும் இணைத்துச் சொல்வது இன்னும் அழகாயிருக்கிறது. இந்த அழகினைத் 'தைத் திங்கள் என்னும் தித்திக்கும் சங்க நூல் வழக்காற்றில் கண்டு சுவைக்கலாம். தைத் திங்களின் தித்திப்பைச் சர்க்கரைப் பொங்கலும் பொங்கல் கரும்பும் இன்னும் மிகுதியாக்குகின்றன. தித்திக்கும் தைத் திங்கள் வாழ்க!

**தண்ணிய தைத் திங்கள்:**

தமிழ் மொழி 'தண் தமிழ். எனச் சிறப்பிக்கப் பெற்றிருப்பது போலவே, தைத் திங்களும் தண்மைக்குப் பெயர் பெற்றதாகச் சிறப்பிக்கப் பெற்றுள்ளது. 'தைஇத் திங்கள் தண்கயம் போல' (புறம்-70)'தைஇத் திங்கள் தண்ணிய தரினும்' (குறுந்தொகை-196), 'தைஇத் திங்கள் தண்கயம் படியும்' (நற்றிணை-80)' தைஇ நின்ற தண்பெயல் கடை நாள்' (அகம்-24) 'தைஇத் தண்கயம் போல' (ஐங்குறு நூறு-84) 'தண்ணீர்த் தைஇ நின்ற பொழுதே' (நற்றிணை-124) முதலீய சங்க நூல் வழக்காறுகளில் தண்மைக்கும் தைத் திங்களுக்கும் உள்ள பிரிக்க முடியாத பிணைப்பைக் காணலாம். தைத் திங்களின் தண்மை உடலுக்குக் குளிர்ச்சியளிப்பது போலவே, தைத் திங்களின் சிறப்பு நிகழ்ச்சிகள் உள்ளத்திற்குக் குளிர்ச்சியளிக்கின்றன. இத்தகு தண்ணிய தைத் திங்கள் தண் தமிழேபோல் வாழ்க!

பொங்கலோ பொங்கல்! பால் பொங்கலோ பொங்கல்! வள்ளுவர் முப்பால் பொங்கலோ பொங்கல்! வளம் பொங்கி வையகம் வாழ்க!

## இந்நூலில் எடுத்தாண்டுள்ள மேற்கோள் நூல்கள்


தொல்காப்பியம்
தொல்-இளம்பூரணம்
தொல்-பேராசிரியம்
தொல்-தெய்வச்சிலையார் உரை
தொல்-நச்சினார்க்கினியம்
யாப்பருங்கல விருத்தியுரை
பன்னிரு பாட்டியல்
நன்னூல்
நன்-மயிலை நாதருரை
நம்பியகப் பொருள்
நேமிநாதம்-பழையவுரை
திவாகர நிகண்டு
பிங்கல நிகண்டு
சூடாமணி நிகண்டு
அகநானூறு
குறுந்தொகை
நற்றிணை
நற்றிணை-உரை
புறநானூறு
ஐங்குறு நூறு
பதிற்றுப் பத்து
கலித்தொகை
பரிபாடல்
பரிபாடல்-பரிமேலழகருரை
திருமுருகாற்றுப் படை
மதுரைக் காஞ்சி
குறிஞ்சிப் பாட்டு
சிலப்பதிகாரம்
மணிமேகலை
திருக்குறள்
நாலடியார்
முத்தொள்ளாயிரம்
கொங்குவேள் மாக்கதை
திருப்பாவை
நாச்சியார் திருமொழி
திருவெம்பாவை
திருப்பள்ளியெழுச்சி
திருக்கோவையார்—பேராசிரியர் உரை
சிந்தாமணி-நச்சர்-உரை
சம்பந்தர் தேவாரம்
நாவுக்கரசர் தேவாரம்
பட்டினத்துப் பிள்ளை புராணம்
காஞ்சிப் புராணம்
பாவைப் பாட்டு
அம்மானைப் பாட்டு
அவிநயனார்திருவெம்பாவை
புராணங்கள்
பாகவதம்
பகவத் கீதை
பைபிள்
நில நூல்
கணி நூல்
வானநூல்